திருமா மணிநங்கை வந்தாள்! — எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

பரல் : 4

கண்ணகி கலை இலக்கிய விழா மலர் - 2015

கண்ணகி கலை இலக்கியக் கூடல்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமா மணிநங்கை வந்தாள்! - எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

# கூடல்

பரல் - 4

## கண்ணகி கலை இலக்கிய விழா மலர் - 2015

**ஜூன் 13 , 14 - 2015**

**விபுலானந்த மண்டபம்**

**விஷ்ணு மகா வித்தியாலயம்**

**வந்தாறுமூலை**

### விழாமலர் அனுசரணையாளர்கள் :

- வைத்திய கலாநிதி. **இ. ஸ்ரீநாத்** (சுகாதார வைத்திய அதிகாரி, செங்கலடி)
- திருமதி. **தர்சினி சுந்தரேசன்** (பணிப்பாளர், பயனியர் வைத்தியசாலை, மட்டக்களப்பு)
- திரு. **இ. உமாசுதன்** (ஆசிரியர், விஷ்ணு மகாவித்தியாலயம், வந்தாறுமூலை)

**கண்ணகி கலை இலக்கியக் கூடல்.**

**மட்டக்களப்பு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிநங்கை வந்தாள்! - எங்கள்
ழைத்திட வந்தாள்! வந்தாள்!



# கூடல்

பரல் – 4

**கண்ணகி கலை இலக்கிய விழா மலர் – 2015**

**தொகுப்பாசிரியர்**

கதிரவன் த. இன்பராசா

**மலர்க்குழு**

செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்
அ.அன்பழகன்குருஸ்
ச.மதன்
க.செல்வானந்தம்
திருமதி. சி. ஞானசூரியம்
ஆர். சயனொளிபவன்
எஸ். பி. நாதன்
செ.தபராசா
க. டனிஸ்கரன்


**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**
45A, பிரதான வீதி, சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.
தொ.பே.இல: 0777492861
0652053003
மின்னஞ்சல்: kannahivizha@gmail.com
இணையத்தளம் :www.kannahikoodal.com


## கூடலில் கூடுவோம்

கிழக்கிலங்கையின் தனித்துவமான கண்ணகி பற்றிய பக்திசார் செயற்பாடுகள் தொடரும் நிலையில், கண்ணகி பற்றிய கலைகள் மற்றும் இலக்கியங்கள் பக்திக்கும் அப்பால் இன்னும் ஒருபடி உயர்த்தப்படுதற்கு முற்றிலும் உகந்ததாகத் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றை மக்கள் அறியும் இலக்கியங்களாகவும், கலைகளாகவும் ஜனரஞ்சக நிலைக்குக் கொண்டுவரவேண்டும். அதனையே எமது தனித்துவமான பண்பாட்டு அடையாளமாக துலங்கச் செய்யவேண்டும். இச் செயற்பாடு இன்று கூடலினால் கணிசமான அளவிலும், காத்திரமான அளவிலும் வியாபித்து, கண்ணகிகலை இலக்கிய இயங்குதளம் ஒன்றை வலுவாகத் தந்துள்ளது.

இந்த இயங்குதளத்தில் ஐந்தாவது ஆண்டுகாணும் கண்ணகிகலை இலக்கியக் கூடலின் கண்ணகிகலை இலக்கியவிழா 2015 இதுவரை நகர்ந்த தெற்குநோக்கிய நகர்வின் மறு பக்கப் பாய்ச்சலாக மட்டக்களப்பின் வடக்கே வந்தாறுமூலை எனும் பழமைப் பெருமைமிக்க பண்பாட்டுக் கிராமத்தில் நடைபெறுதல் சாலவும் பொருந்துவதோடு, ஐந்தாம் நிலைவளர்ச்சியை அடையாளப்படுத்துவதாகவும் அமைகின்றது. வந்தாறுமூலையில் ஒருவிழாக்குழு கண்ணகிகலை இலக்கியக் கூடலின் ஐந்தாம் செயற்பாடுகளை அதீத ஈடுபாட்டோடும், இலக்குநோக்கிய செழுமையோடும் மேற்கொண்டு வருதலும் சிறப்பின் உயர்நிலையைக் காட்டுகின்றது.

இவ்வருடவிழா ஐந்தாம் விழாவானதாலோ என்னவோ ஐந்தாவது அரங்கையும் சேர்த்துக் கொண்டுள்ளது. இங்கு ஐந்து அரங்குகளும் ஐந்து முனைகளின், எண்திசை எங்கும் கண்ணகி பற்றியகலை இலக்கியங்களை விசிறுகின்றது. இதனூடாக மட்டக்களப்பின் வட திசைவாழ் மக்கள் மத்தியிலும் கண்ணகிகலை இலக்கியப் பண்பாட்டுத் தளம் ஒன்றை உருவாக்கும் என்பதில் பிசகாநம்பிக்கைஉருவாகின்றது.

'கூடல்' சஞ்சிகை கூடல் குடும்பத்தின் வருடாந்த விழாவை வளமாகச் சேகரிக்கின்ற ஆவணவாக்கச் செயற்பாட்டை செவ்வனே செய்து வருகின்றது. அந்த வகையில் இவ் வருட நான்காம் 'கூடல்' (பரல்-4) 2014ம் ஆண்டின் தம்பிலுவில் கண்ணகிகலை இலக்கியவிழாவின் பதிவுகளை அப்படியே தருவதோடு 2015ம் ஆண்டின் வந்தாறுமூலையில் நடைபெறும் ஐந்தாவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் நிகழ்ச்சி பற்றிய முன்னோட்டங்களையும் தருகின்றது.


கூடிக்கொண்டேசெல்லும் கூடலின் செயற்பாடுகள் கூடலின் கூட்டத்தையும் கூட்டுகின்றது. நீங்களும் வாருங்கள் கூடலில் கூடுவோம். கண்ணகிகலை இலக்கியப் பண்பாட்டுத் தளத்தில் ஒருமித்த சமூகமாவோம்.

**அன்பழகன் குருஸ்.**
செயலாளர்.
கண்ணகிகலை இலக்கியக் கூடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி இலக்கிய விழாப் பட்டயம்



**த**மிழ் மண்ணோடும் தமிழ் மரபோடும் இணைந்த கதை கண்ணகி கதை. அவளின் திண்மையும், தீரமும் நிறைந்த வாழ்வும், மக்கள் நலன் நாட்டமும் அவளை மக்களின் தெய்வமாக்கின.

சோழ நாட்டில் பிறந்து, பாண்டிய நாட்டிலே வழக்குரைத்து, சேர நாட்டில் தெய்வீகமான கண்ணகி, ஈழ நாட்டில் சிங்கள தமிழ் மக்களின் மத்தியில் வழிபாட்டிற்குரிய தெய்வமானாள்.

பின்னாளில் கண்ணகி "கண்ணகையம்மன்" என கிழக்கிலங்கையில் நிலைபெற்று விடுவதுடன், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும் ஆகிவிடுகின்றாள். கிழக்கிலங்கையில் வைகாசித் திங்கள் அவளுக்குரியதாகும். இதன்போது கிழக்கிலங்கை விழாக்கோலம் பூணும்.

மக்கள் தெய்வமான கண்ணகியின் கதை சிலப்பதிகாரம், சிலம்பு கூறல், கண்ணகி காவியம், கண்ணகி வழக்குரை, குளுத்திப் பாடல், கண்ணகையம்மன் நாடகம், கண்ணகி வசந்தன், கும்மி, கரகம், காவடி, கொம்பு முறிப்பு, குரவைக் கூத்து என தமிழில் கண்ணகி கலை, இலக்கியமாக விரிந்துள்ளது.

கண்ணகிக்குரித்தான வைகாசி மாதத்தில் அவளை நினைவுகூரவும், அவளது இலக்கியங்களைப் பரவலாக்கவுமான நோக்குடன் கண்ணகி இலக்கிய விழா 2011.06.18 அன்று எம்மால் தொடக்கி வைக்கப்படுகின்றது.

இவ்விழா எதிர்காலத்தில் வருடம் தோறும் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இப் பட்டயம் கண்ணகி இலக்கிய விழாக் குழுவினரால் 2011.06.18ம் திகதி நடைபெற்ற "கண்ணகி இலக்கிய விழா 2011" இன் தொடக்க விழாவில் காரைதீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் திருமதி **கோமேதகவல்லி செல்லத்துரை** அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் **திரு.சுந்தரம் அருமைநாயகம்** அவர்களிடம் கையளிக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" செயற்குழு - 2015

**காப்பாளர்** - பேராசிரியர் சி.மௌனகுரு. (காப்பாளர்) -
45/19, 2ம் குறுக்கு, சின்ன உப்போடை, மட்டக்களப்பு.
0773405414, 0652223053

**துணைக் காப்பாளர்** - செ.எதிர்மன்னசிங்கம். -
(முன்னாள் வடகிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்)
22, 5ம் குறுக்கு, திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம், மட்டக்களப்பு. 0772029888

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ.பே.எண் |
|---|---|---|---|
| 1 | தம்பியப்பாகோபாலகிருஸ்ணன். | 607,பார்வீதி,மட்டக்களப்பு. | 0771900614 |
| 2 | அன்பழகன் குரூஸ். | 45A, சின்னஊறணி, மட்டக்களப்பு. | 0777492861 |
| 3 | எஸ்.ஜெயராஜா. | 19, முதலாம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0777249729 |
| 4 | மாணிக்கப்போடிசதாசிவம். | புதுக்குடியிருப்பு, E.P. | 0757735507 |
| 5 | கதிராமன் தங்கேஸ்வரி. | 10/1, பயனியர்வீதி, மட்டக்களப்பு. | 0776854619 |
| 6 | சி.சாமித்தம்பி. | 32/2, கண்ணகியம்மன் கோவில் வீதி, தாண்டவன்வெளி, மட்டக்களப்பு. | 0772933537 |
| 7 | த.இன்பராசா | கதிரவன் கலைக்கழகம், புதுக்குடியிருப்பு, E.P. | 0754265201 |
| 8 | அ.செல்வேந்திரன் | 23/1, டயஸ் லேன், மட்டக்களப்பு. | 0773618402 |
| 9 | கி. துரைராஜசிங்கம். | 73, வாவிக்கரைவீதி-1, மட்டக்களப்பு. | 0718497158 |
| 10 | க. செல்வாநந்தம். | 10, சிவன்கோவில் வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று. | 0771272984 |
| 11 | ச.மதன் | புதுக்குடியிருப்பு, E.P. | 0773620328 |
| 12 | எஸ்.தெய்வேந்திரன் | 394/42A, நாகதம்பிரான் கோவில் வீதி, ஞானசூரியம் சதுக்கம், மட்டக்களப்பு. | 0777917577 |
| 13 | க.டணிஸ்கரன். | 10, அருச்சுணர்வீதி, பாண்டிருப்பு-1, கல்முனை. | 0778511890 |
| 14 | வெ.ஜெயநாதன். | 157, விஷ்னுகோயில் வீதி, காரைதீவு. | 0672250442 |
| 15 | ஆர்.சயனொளிபவன் | 90, கண்ணகியம்மன் கோவில் வீதி, மட்டக்களப்பு. | 0774368089 |
| 16 | எஸ்.பி.நாதன். | "பொதிகை", V.C. வீதி,தம்பிலுவில் - 02. | 0779230682 |
| 17 | த.கைலாயபிள்ளை. | நாவலர்வீதி, விபுலாநந்த இல்லம், அக்கரைப்பற்று. | 0773664282 |
| 18 | வ.ஜயந்தன். | சந்தைமுன் வீதி, தம்பிலுவில் - 02. | 0775024968 |
| 19 | சி.வினோதன் | 197, பார்வீதி, மட்டிக்களி, மட்டக்களப்பு. | 0776017043 |
| 20 | ம.வேதநாயகம். | 16, கலைமகள் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0718112652 |
| 21 | திருமதி.சுந்தரமதிவேதநாயகம். | 16, கலைமகள் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0652225090 |
| 22 | செ.துரையப்பா. | 4, முதலியார்வீதி, மட்டக்களப்பு. | 0652222547 |
| 23 | த.அழகையா. | 14/10, கூழாவடி, மட்டக்களப்பு. | 0773599875 |
| 24 | காசுபதிநடராஜா. | 42, 2ம் குறுக்கு, கல்லடிவேலூர், மட்டக்களப்பு. | 0773247132 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | முழுப் பெயர் | முகவரி | தொ.பே.எண் |
|---|---|---|---|
| 25 | தி.நாகநாதன் | புதுக்குடியிருப்பு, E.P. | 0779364161 |
| 26 | செ.தபராசா | 17, நல்லையாவீதி, மட்டக்களப்பு. | 0652225848 |
| 27 | கதிர்பாரதிதாசன். | 15/4, அதிகார்வீதி, மட்டக்களப்பு. | 0770837335 |
| 28 | மண்டூர் அசோகா. | 8/22, பிள்ளையார் கோவில் கல்லடி, மட்டக்களப்பு. | 0771026140 |
| 29 | திருமதி. சி.ஞானசூரியம். | 25/2, மாரியம்மன் கோவில் வீதி, கல்லடி, மட்டக்களப்பு. | 0771768830 |
| 30 | இ.பாக்கியராஜா | 10/4, 1ம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு. | 0779068411 |
| 31 | இ.வரதராஜன் | கடற்கரைவீதி, புதுக்குடியிருப்பு, E.P. | 0727010160 |
| 32 | க.சுதர்சன். | தலைவர்வீதி, அக்கரைப்பற்று-8 | 0774004984 |
| 33 | மு.தவராஜா | 25/10, அரசடிப் பிள்ளையார்கோவில் வீதி, மட்டக்களப்பு. | 0778163710 |
| 34 | கே.ஜோதிநாதன் ரவி. | 42/01, கண்ணகியம்மன் கோவில் வீதி, திருப்பெருந்துறை, மட்டக்களப்பு. | 0754403145 |
| 35 | இ.தேவராசா | வில்லியம் பிள்ளைவீதி, தம்பிலுவில்-01. | 0672265294 |
| 36 | ம.மலரவன். | தம்பிலுவில் - 02 | 0752352731 |
| 37 | பரதன் கந்தசாமி. | 61/1, நாவலர்கோட்டம், யாட்வீதி, கல்முனை. | 0714417901 |
| 38 | வே.சண்முகநாதன். | நெசவுநிலையவீதி, பாண்டிருப்பு, கல்முனை. | 0776078786 |
| 39 | எஸ்.அரசரெத்தினம். | 32,V.V.வீதி, கல்முனை. | 0777386178 |
| 40 | கண.இராஜரெத்தினம்.(கண்ணன்) | குருகுலம், விநாயகபுரம், திருக்கோயில். | 0773779119 |
| 41 | வே.தட்சணாமூர்த்தி. | பிரதானவீதி, புதுக்குடியிருப்பு, E.P. | 0757110130 |
| 42 | சி.புவனேந்திரன். | கிரான்குளம் மத்தி, கிரான்குளம். | 0776947789 |
| 43 | அ.குலேந்திரராசா. | விபுலாநந்தவீதி, புதுக்குடியிருப்பு, E.P. | 0778163717 |
| 44 | டேவிட் குருபரன் | பாடசாலைவீதி, தாழங்குடா– 3 | 0770698870 |
| 45 | சி.விநாயகமூர்த்தி. | மகாவித்தியாலயவீதி, தம்பிலுவில்-02. | 0776743343 |
| 46 | முல்லைவீரக்குட்டி. | 3வது குறுக்கு, JP, வீதி, தம்பிலுவில். | 0788471069 |
| 47 | ஆ.கணேசமூர்த்தி. | திருஞானவாணி கொமினிகேசன், பிரதானவீதி, திருக்கோவில். | 0772327860 |
| 48 | ப.குணசேகரன். | வன்னியாவீதி, களுதாவளை - 01. | 0652250605 |
| 49 | செ.கணேசானந்தம். | 18/01, MOH விடுதிஒழுங்கை, கல்முனை -01. | 0776124037 |
| 50 | தா.தங்கவேல். | பண்டிங்ஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு. | 0773444124 |
| 51 | பொ.சிவகுரு. | பிரதானவீதி, மாவடிவேம்பு, வந்தாறுமூலை. | 0774957799 |
| 52 | கா.இராமச்சந்திரன். | வந்தாறுமூலை. | 0773620328 |
| 53 | மு.மகேந்திரராஜா. | செங்கலடி. | 0779415620 |
| 54 | திருமதி.கிருஷ்ணவேணி நேமிநாதன் | வந்தாறுமூலை. | 0775382726 |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முரசம்



**"வந்தாறுமூலை யூர் வந்தமர்ந்த கண்ணகியை**
**சிந்தையில் நினைத்தைந் தாவது விழாவினிலே...**
**சந்தோஷம் பொங்கிட பரல் நான்கு "கூடல்" விதை**
**தந்தோம் தம்பிலுவில் நிகழ்வுகளின் ஆவணமாய்"**

வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் காவியங்கள் வாயிலாக புகழப் பெற்றதுமான கண்ணகியம்மன் ஆலயம் அமைந்துள்ள வந்தாறுமூலையில் ஐந்தாவது 'கண்ணகிகலை இலக்கியவிழா 2015" இடம் பெறுவதும், கடந்த வருடம் திருக்கோயில் - தம்பிலுவில் பிரதேசத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்ற கண்ணகி கலை இலக்கிய விழாவின் தகவல்களைத் தாங்கி சிறந்த ஆவணமாக 'கூடல்', பரல் - 4 வந்தாறுமூலை விஷ்ணு மகாவித்தியாலய விபுலானந்த மண்டபத்தில் வெளியிடப் பெறுவதும் மட்டில்லா மகிழ்வைக் கொடுக்கின்றது. இச் சிறப்பு நிகழ்விற்கு வழிசமைத்த இப்பிரதேச மக்களையும் கண்ணகி கலை இலக்கிய விழாக் குழுவினரையும் சிரம் தாழ்த்திப் பாராட்டுகின்றேன். இவ்விதழுக்கு அனுசரணை அளித்த பெருந்தகைகளை மனதார நினைக்கின்றேன்.

கண்ணகி கலை இலக்கியவிழாப் பயணம் ஐந்தாவது வருடத்தில் தடம் பதிக்கின்றது. இந்த ஐந்து வருடங்களிலும் கண்ணகி கலை இலக்கியக் கூடல் தந்த கண்ணகி கலை இலக்கியப் பொக்கிஷங்கள் ஏராளம். கிழக்குவாழ் மக்களை மட்டுமன்றி முழு இலங்கையிலும் வாழ்கின்ற மக்களைத் திரும்பிப்பார்க்கச் செய்யும் விழாவாகக் கண்ணகி கலை இலக்கிய விழா அமைந்துள்ளது. மெய்சிலிர்க்க பயபக்தியுடன் கலையம்சம் நிறைந்த சடங்குமுறையில் நடைபெறும் கண்ணகி வழிபாடு தொன்று தொட்டு எம்மண்ணில் வேரூன்றி இருப்பதும், கலை இலக்கியங்களோடு காலத்தை இனிமையாக அனுபவிக்கும் மரபு எம்மக்கள் மத்தியில் இன்றும் மாறாத பண்பாடாக மிளிர்வதும் கண்ணகி கலை இலக்கிய விழாவின் வெற்றிக்கு சான்றாக அமைகின்றது.

மனித வாழ்வு புனிதமாக மலர இனிய பல செய்திகளை அறநீதிக்கருத்துக்களாகவும் அறிவு சார்ந்த விடயங்களாகவும் சமூக வாழ்வியலோடு இணைத்து கண்ணகி கலை இலக்கியங்கள் இயம்புகின்றன. உழைத்துக் களைத்து சோர்வடைந்த மக்களை உற்சாகமூட்டிப் புத்தறிவு புகட்டும் சக்தி வாய்ந்தன கண்ணகி கலை இலக்கியங்கள். இவற்றைப் பரவலாக்கி எம்மக்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதும், எம்மண்ணின் கலாசார விழுமியங்களை பறைசாற்றுவதும் எமது கடமையாகும்.

கிழக்கிலங்கை மக்கள் மத்தியில் நிறைந்திருக்கும் பாரம்பரிய கலை இலக்கிய முதுசொம்களை பண்பாடு மீறாதவகையில் அடையாளப்படுத்த கண்ணகி கலை இலக்கிய கூடல் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இவற்றுக்கான நற்கருமங்களை முன்னெடுக்கின்ற அதேவேளை சமூகச்சீரழிவுகளில் சிக்கித்தவிக்கும் எம் சந்ததியினரைச் சீர்படுத்தும் சமூக சேவைகளையும் "கூடல்" எதிர்காலத்தில் மேற்கொள்ளும். சமூக ரீதியான மனமாற்றதின் ஊடாகவே கலை இலக்கியங்களை வளர்த்தெடுக்க முடியும். எனவேதான் சமூக சிந்தனையுடன் மக்கள் மத்தியில் கல்வி, ஆன்மீகம், பொருளாதாரம் என சகலதுறைகளிலும் விழிப்புணர்வை மேற்கொள்ளும் திட்டங்களை வகுத்துச் செயற்பட வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. இவ்வாறான பணிகள் தொடரமக்களின் ஆதரவும் வரவேற்பும் இன்று கிடைப்பது போன்று என்றும் கிடைக்கும் எனும் நம்பிக்கை எமக்குள்ளது.

**கதிரவன் த. இன்பராசா**
**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா 2015 - விழாக்குழு - வந்தாறுமூலை



**அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்)** : திரு.கா. தங்கவேல் (இணைப்புச்செயலாளர்), திரு.மு. மகேந்திரராஜா (பொருளாளர்), திரு.கி. துரைராஜசிங்கம் (தலைவர்), திரு.த. சேனாதிராஜா, திரு.சி.நமசிவாயம், திரு.க.செல்வராஜா

**நிற்போர் (இடமிருந்து வலம்)** : திரு.மு. ஜெயநாதன், திரு.க.துரைராசா, திரு.க. சத்தியவரதன், திரு.க. யோகராஜா, திரு.கா. இராமச்சந்திரன், (செயலாளர்), திரு.இ. சீதாராமன், திரு.பொ.சிவகுரு (துணைத்தலைவர்), திருமதி.கிருஷ்ணவேணி நேமிநாதன்(துணைச்செயலாளர்), திரு.செ.பத்மநாதன், திரு.கி.சத்தியசீலன், திரு.யோ.முரளீதரன், திரு.வெ.சசிகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" செயற்குழு - 2015



**அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்)** : திரு. கி. துரைராஜசிங்கம், திரு. த. அழகையா, திரு. செ. துரையப்பா, திருமதி. மண்டூர் அசோகா, திரு. மா. சதாசிவம் (துணைத்தலைவர்), திரு.த.கோபாலகிருஷ்ணன் (தலைவர்), பேராசிரியர் சி. மௌனகுரு (காப்பாளர்), செல்வி க. தங்கேஸ்வரி (துணைத்தலைவர்), திரு.செ. தபராசா, திருமதி. சுந்தரமதி வேதநாயகம் (துணைச் செயலாளர்), திரு. காசுபதி நடராசா, திரு. ச. ஜெயராஜா (பொருளாளர்).

**நடுவரிசை (இடமிருந்து வலம்)** : திரு. பொ. சிவகுரு, திரு. தா. தங்கவேல், திரு. அ. அன்பழகன் குரூஸ் (செயலாளர்), திரு. கதிர் பாரதிதாசன், திரு. த. இன்பராசா, திரு. சி. வினோதன், திரு. ப. குணசேகரன், திரு. ம.வேதநாயகம், திரு. ச. தெய்வேந்திரன், திரு.இ.வரதராஜன், திரு.வ.ஜயந்தன், திரு.க.டணிஸ்கரன்.

**பின்வரிசை (இடமிருந்து வலம்)** : திருமதி. கிருஷ்ணவேணி நேமிநாதன், திரு. கா. ராமச்சந்திரன், திரு. ச. மதன், திரு. எஸ்.பி. நாதன், திரு. வே. தட்சணாமூர்த்தி, திரு. அ. குலலேந்திரராசா, திரு. அ. செல்வேந்திரன், திரு. க. செல்வானந்தம், திரு. த. கைலாயபிள்ளை, திரு. மு. தவராஜா, திரு. க. சுதர்சன், திரு. மு. மகேந்திரராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நிகழ்ச்சித் தொகுப்பு

2014 ஆகஸ்ட் 1, 2, 3 ஆகிய தினங்களில் அம்பாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலை அரங்கு மற்றும் தம்பிலுவில் மத்தியமகாவித்தியாலய மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற நான்காவது கண்ணகி இலக்கிய விழாவான 'கண்ணகி கலை இலக்கிய விழா - 2014' இன் நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன.

**- தொகுப்பாசிரியர் கதிரவன் த. இன்பராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா-2014

**01, ஆகஸ்ட் 2014 வெள்ளிக்கிழமை, முதலாம் நாள் காலை.**

**"தொடக்க விழா"**

## பண்பாட்டுப் பவனி மு.ப 07.15 - 08.00

**பண்பாட்டுப் பவனி இணைப்பாளர் : திரு.த.பாஸ்கரன்** (ஆசிரியர்.விநாயகபுரம் ம.வி)

**மாணவர் பவனி இணைப்பாளர் : திருமதி. தேவமலர் தங்கமாணிக்கம்** (நடன ஆசிரியை, தம்பட்டை ம.வி)



பண்பாட்டுப் பவனி திருக்கோவில் மாணிக்கபிள்ளையார் ஆலயத்திலிருந்து விழாக்குழுத்தலைவர் திரு. வ. ஜயந்தன் தலைமையில் ஆரம்பித்து....



பிரதான வீதி வழியாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தம்பிலுவில் ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது.

**பூஜை மு.ப 08.00 - 08.30**



பூஜை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலை அமர்வு. (மு.ப. 8.30 - பி.ப. 12.30)

**இடம்** : தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலை அரங்கு.


**அரங்கு** : "கூலவாணிகன் சாத்தனார்" அரங்கு.

**தலைமை** : **திரு.வ.ஜயந்தன்** (விழாக்குழுத் தலைவர்)

## முதன்மை அதிதிகள்



முதன்மை அதிதி
**திரு. டபிள்யூ. ஏ. எல். விக்கிரம ஆராச்சி**
(பணிப்பாளர், கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.)



முதன்மை அதிதி
**பேராசிரியர் சி. மௌனகுரு**
(காப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



சிறப்பு அதிதி
**திரு.சி.ஜெகராஜன்**
(பிரதேச செயலாளர், திருக்கோவில்)



சிறப்பு அதிதி
**திருமதி. மனோஹரி சீவரெட்ணம்**
(நிர்வாக உத்தியோகத்தர், இலங்கை இந்துப்பேரவை, மட்டக்களப்பு மாவட்டம்)



சிறப்பு அதிதி
சைவப்புலவர்.
**திரு.சா.பொன்னுத்துரை**
(ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர்)



சிறப்பு அதிதி
**திருமதி. திலகவதி கணேசமூர்த்தி**
(ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர்)



சிறப்பு அதிதி
**திரு.கா. சதானந்தம்**
(ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மங்கல விளக்கேற்றல்



**திரு. க. தங்கத்துரை**
(கப்புகனார், தம்பிலுவில்
ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இறைவணக்கம்



தொடக்கவிழா அமர்வில் அவையோர்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் மொழி வாழ்த்து
**திருமதி. ஈஸ்வரி சுந்தரராஜன் குழுவினர்**



வரவேற்புரை
**திரு. ஆ. கணேசமூர்த்தி**
(துணைத்தலைவர், விழாக்குழு)



அரங்க அறிமுகம்
இணைப்பாளர் **திரு. வே. கருணாகரன்**
(பதில் கணக்காளர், பொத்துவில் பிரதேசசபை)



வரவேற்பு நடனம்
**திருக்கோவில் மெதடிஸ்த மிஷன்**
**தமிழ் மகாவித்தியாலய மாணவிகள்**



தொடக்கவிழா மேடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண்ணகி இலக்கிய விழாப்பட்டயம் வாசித்தல்.
**திருமதி.சுந்தரமதி வேதநாயகம்.**
(துணைச் செயலாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



தொடக்கவுரை
**செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன்**
(தலைவர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



தலைமையுரை
**திரு.வ.ஜயந்தன்**
(விழாக்குழுத் தலைவர்)



உரை : **திரு.வி. துலாஞ்சனன்**
(விஞ்ஞானபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
**"தம்பிலுவில் கண்ணகி வழிபாடு -ஒரு வரலாற்று நோக்கு"**



நன்றியுரை
**திரு.க.செல்வாநந்தம்**
(அம்பாறை மாவட்ட இணைப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)



நிகழ்சித்தொகுப்பு
**திரு. செ.ஜெயந்தன்**
(நீர்ப்பாசன அலுவலகம், தம்பிலுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துகை.

**“போர்த்தேங்காய் உடைத்தல்”**


அனுசரணை: தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்.மற்றும்


சைவநெறிக்கூடம், அம்பாறை மாவட்டம், தம்பிலுவில்


இணைப்பாளர்: **திரு.லோ.சந்திரபவன்.**


(மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர்)














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கவுரை

# கண்ணகி இலக்கிய விழா – 2014



செங்கதிரோன்.த.கோபாலகிருஸ்ணன்
(தலைவர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)

அம்பாறை மாவட்டம், தம்பிலுவிலில் 2014 ஆகஸ்ட் 1ம் ,2ம் ,3ம் திகதிகளில் நடைபெற்ற நான்காவது கண்ணகி கலை இலக்கிய விழாவான "கண்ணகி கலை இலக்கிய விழா 2014" இன் 1ம் நாள் நிகழ்வின் காலை அமர்வான "கூலவாணிகன் சாத்தனார்" அரங்கில் நடைபெற்ற தொடக்கவிழாவில் கண்ணகி கலை இலக்கிய கூடலின் தலைவர் செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன் ஆற்றிய தொடக்கவுரை.

2011ம் ஆண்டில் மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியின் கலையரங்கிலே நடைபெற்ற முதலாவது கண்ணகி கலை இலக்கிய விழாவினைத் தொடர்ந்து 2012 இல் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பிலும், 2013 இலே ஆலையடிவேம்பு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் அக்கரைப்பற்றிலும் நடைபெற்று நான்காவது விழா இன்று தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலை அரங்கிலே நடைபெறத் தொடங்கியுள்ளதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

அன்பானவர்களே ! ஒரு சமூகத்தின் இருப்பிற்கும் அடையாளத்திற்கும் மொழியும் நிலமும் எவ்வாறு முக்கியமோ அதே போன்றுதான் அச்சமூகத்தின் பாரம்பரிய கலை இலக்கியங்களும் பண்பாட்டு விழுமியங்களும் அச்சமூகம் நம்பிக்கை கொண்டுள்ள தொன்மங்களும் முக்கியமானவை. அந்தவகையிலேதான் வஞ்சகமில்லாத வாழ்க்கை முறையையும் - விருந்திருக்க உண்ணாத வேளாண்மைத் தனத்தையும் -வந்தோரை வாஞ்சையோடு வரவேற்று வாழவைப்பதில் வற்றாத மனப்போக்கையும் - சாதி மதபேதமற்ற சமரச நோக்கையும் - சகோதரத்துவ மனப்போக்கையும் வரித்துக்கொண்டுள்ள கிழக்கிலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் கண்ணகி தொன்மங்களை அடியொற்றிய கண்ணகி கலை இலக்கியங்களும் பண்பாட்டு விழுமியங்களும், உலகமயமாக்கம் - நுகர்வுக் கலாசாரம் - தகவல்தொழிநுட்பத்தின் அதீதவளர்ச்சி மற்றும் இயந்திர நாகரீகம் போன்ற புறத்தாக்கங்களால் கற்பழிந்துவிடாமல் காப்பாற்றிப் பேணி வளர்த்து அவற்றை அடுத்த தலைமுறையிடம் பக்குவமாகவும் பவித்திரமாகவும் கையளிக்கவேண்டிய கடப்பாடு எமக்குண்டு. இத்தகைய ஒரு வரலாற்றுக் கடமையை நிறைவேற்றவே "கண்ணகி கலை இலக்கிய கூடல்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு கடந்த நான்கு வருடங்களாக இத்தகைய கண்ணகி கலை இலக்கிய விழாக்கைளைக் கட்டமைத்து வருகிறோம்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவானது இந்து சமுத்திரத்தின் வங்காள விரிகுடாக் கடலை அண்டியதாய் வடக்கே சின்னமுகத்துவாரத்திலிருந்து தெற்கே உமிரி வரை நீண்டு கிடக்கும் கடலும் கடல் சார்ந்த **"நெய்தல்"** நில வளத்தையும்; சாகாமம் , றூபஸ்குளம், கஞ்சிகுடியாறு போன்ற பாரிய நீர்த் தேக்கங்களால் பாசனவசதியளிக்கப்படும் ஊரக்கைவெளி, தாலிபோட்டாற்றுக் கண்டம், சேனக்காடு, போட்டாக்குளம், சாவாறு, கோம்பக்கரச்சை, கஞ்சிகுடியாற்றுக்கண்டம் போன்ற வயலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயல் சார்ந்த **"மருத"** நில வளத்தையும்; வடமூசா, வட்டமடு போன்ற காடும் காடுசார்ந்த **"முல்லை"** நில வளத்தையும் கொண்டது. சங்கமன்கண்டிப் பிள்ளையார், திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி, கோரைக்களப்பு மங்கமாரியம்மன், தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகையம்மன் போன்ற காவல் தெய்வங்களால் புடைசூழப்பட்ட பூமி இது. பல அண்ணாவிமார்களையும், கூத்துக் கலைஞர்களையும், இசைக்கலைஞர்களையும், நாடகக் கலைஞர்களையும் கண்ட மண் இது. புலவர் வில்லியம்பிள்ளை, பண்டிதர் குஞ்சித்தம்பி, வித்துவான் செபரெத்தினம் போன்ற தமிழறிஞர்களைத் தந்தது இப்பூமி. இவ்வாறு நிலவளமும் நீர் வளமும் கலை வளமும், கல்விவளமும், ஆன்மீகவளமும் நிரம்பப்பெற்ற திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிக்க தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகையம்மன் ஆலய கண்ணகி கலையரங்கிலே இவ்விழா தொடங்கப்பெறுவது இயங்கியல் விதிமட்டுமல்ல இறைவனின் சித்தமுமாகும்.

என்னதான் நவீன கலையிலக்கியக் கோட்பாடுகளும் வடிவங்களும் காலத்துக்குக் காலம் தோற்றம் பெற்றாலும் மனித மனங்களைச் செழுமைப்படுத்தும் வல்லமை பாரம்பரியக் கலை இலக்கிய வடிவங்களுக்கே உண்டு. அதனால்தான் கண்ணகி கலை இலக்கியங்களை மக்கள் மத்தியிலே பரவலாக்கும் நோக்குடன் ஆம்பிக்கப்பெற்ற கண்ணகி கலை இலக்கிய விழாவானது கிழக்கிலங்கைத் தமிழ் சமூகத்தை ஒரு பண்பாட்டுத் தளத்தில் ஒன்றிணைத்து அவர்களைச் சமூக பொருளாதார கல்வி கலை இலக்கிய ஆன்மீக மேம்பாட்டை நோக்கி அறிவு பூர்வமாக ஆற்றுப்படுத்துவதிலும் முனைப்புக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் விழாக்களோடு மட்டும் நின்றுவிடாமல் - கலை இலக்கியங்களோடு மட்டும் எமது செயற்பாடுகளை மட்டுப்படுத்தாமல் சமூக பொருளாதார மேம்பாட்டுப் பணிகளிலும் நாம் ஈடுபடவுள்ளோம். சமூக நோக்குடனேயே இவ்விழாக்களை நாம் கட்டமைத்து வருகிறோம். நாம் மனங்கொண்டுள்ள சில திட்டங்களை இவ்விடத்தில் கோடிட்டுக்காட்டுவது பொருத்தமென எண்ணுகின்றேன்.

- கிழக்குப்பல்கலைக்கழகம் மற்றும் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம் ஆகிய கல்விசார் நிறுவனங்களினூடாக பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறையில் கண்ணகி வழிபாட்டு முறைகளை ஒரு பாடநெறியாக்கவும் , தமிழ்மொழித் துறையில் கண்ணகி இலக்கிய பீடம் ஒன்றினை உருவாக்கி அதன் மூலம் கண்ணகி இலக்கிய ஆய்வுகளை நடாத்தவும் , பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பயிலும் மாணவர்களுக்குக் கண்ணகி கலைகளைப் பயிற்றுவிக்கவும் ,விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகத்தில் சிலப்பதிகாரம் மற்றும் "கண்ணகி வழக்குரை" காவியத்தில் வரும் ஆடல் பாடல்களை மீளுருவாக்கம் செய்யவும் ஆவனசெய்யதல்.
- தமிழறிஞர் குழு ஒன்றின் மூலம் "கண்ணகி வழக்குரை" காவியத்திற்கு உரை எழுதிப் பதிப்பித்து அதனை மக்களிடையே பரவலாக்குதல்.
- ஏட்டுப்பிரதிகளாகவுள்ள கண்ணகி இலக்கியங்களைத் தேடியெடுத்து அச்சில் பதிப்பித்தல்; ஏற்கனவே பதிப்பிக்கப்பெற்றவற்றை மீள் பதிப்புச் செய்தல்.
- யுத்தக் கொடுமைகளினால் பாதிக்கப்பட்ட எமது சமூகம் அவாவி நிற்கும் சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளல்.
- வேலையற்றுள்ள இளைஞர் யுவதிகளுக்கான மற்றும் விதவைக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரப் பணிகள் - சுயதொழில் திட்டங்களை வகுத்துச் செயற்படல்.
- சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளிலும் கரிசனை கொண்டுழைத்தல்.
- வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளுக்கு உதவுதல்.
- அனர்த்தங்களின் போது மக்களுக்கு உதவுதல்.
- பொது இடங்களைச் சுத்தமாக வைத்திருக்க சிரமதானங்கள் மற்றும் இரத்ததானம் போன்ற மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயப் பணிகளிலும் ஈடுபடல் என்பவை அவற்றுள் சில.

இவ்விழா முடிந்ததும் "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" அமைப்பினை ஓர் பண்பாட்டு நிறுவனமாகப் பதிவுசெய்யவிருக்கின்றோம். இதுவரை நடைபெற்ற மூன்று கண்ணகி கலை இலக்கிய விழாக்களிலும் சுமார் 700 பேர் பேராளர்களாகப் பதிவுசெய்து கொண்டுள்ளனர், இந்த நான்காவது கண்ணகி கலை இலக்கிய விழாவின் நிறைவில் பேராளர்களின் எண்ணிக்கை ஆயிரமாகலாம். அடுத்த ஆண்டு முற்பகுதியில் இவர்களையெல்லாம் ஒன்றுகூட்டிப் "பேராளர்மாநாடு" ஒன்றினை நடாத்தி எமது எதிர்காலச் செயற்பாடுகளுக்கான – பணிகளுக்கான "திட்டவரைபு" ஒன்றினைத் தயாரித்து அந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் இயங்குவதற்குக் "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" கங்கணம் கட்டியுள்ளது. எனவே எமது சமூகத்தினைச் சேர்ந்த கல்விமான்களே! தொழில்சார் நிபுணர்களே! துறைசார் விற்பன்னர்களே! எழுத்தாளர்களே! கலைஞர்களே! மற்றும் கண்ணகி கலை இலக்கிய ஆர்வலர்களே! அனைவரும் எம்முடன் இணைந்துகொள்ளுங்கள். கடந்த வருட விழாவிலே இதற்கான தீர்மானங்களை நாம் எடுத்திருந்தபோதும் அது சாத்தியப்படவில்லை. காரணம் அதற்கான வளங்களைத் தேடமுடியவில்லை, எனினும் எமது முயற்சியைக் கைவிடமாட்டோம்.

- கலை இலக்கியங்களினூடாகச் சமூகப் பணியாற்றுவோம்.
- கலை இலக்கியங்களினூடாகப் பொருளாதார மேம்பாடடைவோம்.
- கலை இலக்கியங்களினூடாக மனித உறவுகளையும் விழுமியங்களையும் கட்டியெழுப்புவோம்.
- கலை இலக்கியங்களினூடாக ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்துவோம்.
- கலை இலக்கியங்களினூடாக யுத்த அவலங்களினால் நொந்துபோயுள்ள மனித நெஞ்சங்களை ஆசுவாசப் படுத்துவோம்.

இவற்றிக்காக முழுநேரமும் உழைப்பதற்கான உறுப்பினர்கள் பலர் கண்ணகி கலை இலக்கியக் கூடலில் உள்ளனர். ஆனால் எமக்குச் சவாலாகவுள்ள ஒரே ஒரு விடயம் வளப்பற்றாக் குறையேயாகும். இந்தப் பின்புலத்தில் இங்கு கூடியுள்ள அனைவரிடமும் விநயமாக வேண்டிக்கொள்ளவதென்னவென்றால் - இதை மகாகவி பாரதியின் பாடல் வரிகளிலே கூறப்போனால்,

**"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் !**
**நிதி குறைந்தவர் காசுகள் தாரீர் !**
**ஆண்மையாளர் உழைப்பினை நல்கி**
**அதுவுமற்றவர் வாய்ச்சொல்லருளி**
**இப் பெருந்தொழில் நாட்டுவம் வாரீர் !**

இந்தச் செய்தியை இங்கு வந்திருப்பவர்கள் இங்கு வராதவர்களிடம் எடுத்துச் செல்லுங்கள்.

நன்றி ! வணக்கம்.

தொடர்பு :
**கண்ணகி கலை இலக்கியக் கூடல்**
45A, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு
கைபேசி : 0094 0771900614, 0094 0777492861
மின்னஞ்சல் : kannahivizla@gmail.com
வலை : www.kannahikoodal.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையுரை



# கண்ணகி இலக்கிய விழா – 2014

திரு. வ. ஜயந்தன்
(தலைவர், கண்ணகி கலை இலக்கிய விழா – 2014)

கிழக்கிலங்கையில் கண்ணகி அம்மன் வழிபாடு மிகவும் பூர்வீகமானது. தமிழகத்தின் சோழநாட்டில் பிறந்த தமிழ்ப்பெண்ணான கண்ணகி பாண்டிய நாட்டில் வீரப்பெண்ணான கற்புக்கரசியாகி, சேரநாட்டில் பத்தினித் தெய்வம் ஆனார். இலங்கையில் சிங்களப் பௌத்தரிடையே இத்தமிழ்ப்பெண் பத்தினித் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றார். இவ்வூர் மக்கள் கண்ணகை அம்மனைத் தங்கள் குலதெய்வமாகவும், தங்கள் தாயாகவும் கருதிப் போற்றி வருகின்றனர். கண்ணகை அம்மனைத் தாயார் என்று உளம் உருகிவழிபாடு செய்வது மிகச் சிறப்பானதாகும். உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்.

கண்ணகி கலை இலக்கி விழா 2014. இவ் விழாவானது கண்ணகி தொடர்பான கலை இலக்கியங்களை அறிமுகம் செய்து பரவலாக்குதல், பண்டைய காலம் தொடக்கம் இன்று வரை பயின்றுவரும் கண்ணகி தொடர்பான தொன்மங்களை மீட்டுப்பார்த்தல், கிழக்கிலங்கையின் பண்பாட்டு அடையாளமாக விளங்கும் கண்ணகி இலக்கியங்களை வெளிக் கொணர்தல், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் குறிப்பாக கிழக்கிலங்கையிலும் நிலவும் கண்ணகி நம்பிக்கைகளுக்குக் கிடையேயான பொதுமைகளை ஆராய்தல் ஆகிய நோக்கங்ளைக் கொண்டு 2011இல் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது கண்ணகி இலக்கிய விழா அதன் பின் வருடந்தோறும் இவ் விழாக்களை முன்னெடுக்கும் பொருட்டு உருவாக்கப் பெற்ற கண்ணகி கலை இலக்கியக் கூடல் முதலாவது விழாவை 2011ல் மட்டக்களப்பிலும் 2012ல் புதுக்குடியிருப்பிலும் 2013ல் அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பிலும் நடாத்தியதுடன். இக் கண்ணகி கலைஇலக்கிய கூடல் எமது பாரம்பரியக் கலை வடிவங்களையும், இலக்கியங்களையும், பண்பாட்டு விழுமியங்களையும் மீளக் கட்டமைத்துப் பேணி வளர்த்தெடுக்கும் மற்றும் எதிர் காலத்தில் கிழக்கிலங்கைத் தமிழ் சமூகத்தை பண்பாட்டுத்தளத்தில் ஒன்றிணைத்து அவர்களது சமூக பொருளாதார கல்வி கலை இலக்கிய ஆன்மீக மேம்பாட்டை நோக்கி அவர்களை அறிவுபூர்வமாக ஆற்றுப்படுத்தும் நோக்கங்களையும் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் நான்காவது கண்ணகி கலை இலக்கிய விழா 2014 தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்தில் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாயலத்தில் நடைபெறுகிறது. கடந்த காலங்களில் நடைபெற்ற விழாக்கள் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இம்முறை இவ்விழா எமது பிரதேசத்தில் மூன்று நாட்கள் நடைபெற உள்ளது. இது வெறுமனே ஒரு விழாவாக அமையாது சமூகத்தில் வேண்டத்தக்க மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பது எமது அவாவாகும்.

விசேடமாக இன்று கொம்புமுறி விளையாட்டு நடைபெற உள்ளது. சுமார் 35 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற கொம்புவிளையாட்டானது மக்களிடையே பக்தி உணர்வையும் மன அமைதியையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது எனவும் காலாகாலங்களில் மழை பொழிந்தது எனவும் இங்கு உள்ள பெரியோர்கள் தெரிவித்தனர்.

இந் நிகழ்வானது இன்று இளம் தலைமுறையினர்க்கு அறிமுகம் செய்வதுடன் அதனை மீட்டுப் பார்க்கும் நோக்குடன் இடம் பெறுகின்றது.

மேலும் இப்பிரதேச சிறப்புப் பற்றியும் கண்ணகி வழக்குரை தொடர்பான ஆழமான கருத்துக்கள் புதிய விடயங்கள் போன்றவற்றையும் அறிய எதிர்வரும் அடுத்தடுத்த இரண்டு நாட்களில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து கொண்டு விழாவை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்விழாக்குழுவின் தலைவர் என்றவகையில் நிகழ்வுகளை நடாத்துகின்ற அனைவரையும் பாராட்டுவதோடு கண்ணகி கலை இலக்கிய கூடலின் பணி தொடரவேண்டும். அதற்காக அம்மன் அருள்புரிய வேண்டும். மேலும் அண்ணன் செங்கதிரோன் கோபாலகிருஸ்ணன் அவர்களுக்கு எனது தனிப்பட்ட நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை

# தம்பிலுவில் கண்ணகி வழிபாடு

- ஒரு வரலாற்று நோக்கு -



வி. துலாஞ்சனன்
விஞ்ஞான பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.

**அறிமுகம்:**

மட்டக்களப்புத் தேசத்தின் தென்கோடியில், இன்றைய அம்பாறை மாவட்டத்தில், அக்கரைப்பற்று - பொத்துவில் நெடுஞ்சாலையில், கிழக்கே வங்கக்கடலும், மேற்கே பெரியகளப்பு வாவியும் அணிசெய்ய, தம்பட்டை, திருக்கோவில் எனும் இரு சோதரக் கிராமங்களுக்கிடையே, கண்ணகியால் கவின்புகழ் பெற்ற தம்பிலுவில் கிராமம் அமைந்து விளங்குகிறது.

ஆய்வுக்குட்படுத்தப்படும் இத்தலைப்பானது, வரலாற்றுக் காலத்தில் தம்பிலுவில்லில் கண்ணகி எப்படி வழிபடப்பட்டாள் என்பதை அன்றி, இக்கிராமத்தில் அவளது வழிபாடு, கடந்த காலத்தில், எத்தகைய சரித்திர முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது என்பதையே தொனிப் பொருளாகக் கொண்டிருக்கின்றது என்பதைக் கட்டுரையாளன் முதலில் சுட்டிக் காட்ட விரும்புகின்றான்.

இற்றைவரை, கிழக்கின் ஆதாரபூர்வ வரலாற்று நூலாக, பலராலும் மேற்கோள் காட்டப்படுவது, 1962இல் ''மட்டக்களப்பு மான்மியம்'' என்ற பெயரில் வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசாவாலும், பின் 2005இல், தன் இயற்பெயரில், வித்துவான் கமலநாதன் தம்பதியினராலும் பதிப்புக் கண்ட 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' (ம.பூ.ச) ஆகும். அதில், வரலாறு கூறப்படும் ஊர்களில் ஒன்றாக தம்பிலுவில் கிராமமும் விளங்குகின்றதென்பது இங்கு நாம் அடிக்கோடிடவேண்டிய குறிப்பாகும்.

ம.பூ.ச குறிப்பிடும் வரலாற்றின் பெரும்பாகமானது, கலியுகக் கணக்கில் கிறிஸ்துவுக்கு முந்திய சகாப்தங்களிலேயே நடக்கும்போதும், அச்சம்பவங்களை தென்னக, மற்றும் சிங்கள சரித்திரத்துடன் சமாந்தரப்படுத்திப் பார்க்கும்போது, கி.பி 10ஆம் நூற்றாண்டுக்கு அண்மையானவை அல்லது சற்று முன்பின்னானவையென்றே வரையறை செய்துகொள்ளலாம். இவ்வாறு கூறுவதன் அர்த்தம், பத்தாம் நூற்றாண்டுக்கு முன், மட்டக்களப்புத் தேசத்திற்கு வரலாறு ஒன்று இல்லை என்பதல்ல; தொகுத்தெடுக்கக் கூடிய உறுதியான வரலாற்றை பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்பேயே மிகச் சரியாக கட்டமைத்துக் கொள்ள முடியும் என்பதேயாம்.

**மானுடவியல் முக்கியத்துவம்:**

அமெரிக்க ஹாவார்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் நூர் யால்மன் (1), அமெரிக்க கொலராடோ பல்கலைக்கழக பேராசிரியர் ''டெனிஸ் மக்கில்வ்றே'' (2), அவுஸ்திரேலிய சிட்னி பல்கலைக் கழகத்தின் மாந்தவியல் ஆய்வாளர் அமரர். லெஸ்டர் ரிச்சார்ட் ஹெய்ட் (3), அமெரிக்க பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக விளங்கும் இலங்கையரான திரு.கணநாத் ஒபேயசேகர (4) ஆகியோரால் இந்தத் தம்பிலுவில் கிராமம், மானுடவியல் மற்றும் சமூகவியல் ரீதியில் நன்கு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர்த்து, இதே மண்ணின் மைந்தரும் ஆய்வாளருமான, ஆய்வார்வலர் திரு.நவநாயகமூர்த்தி அவர்கள், இவ்வம்மன் பற்றிய தன் வரலாற்று - வழிபாட்டியல் ஆய்வுகளை ''தம்பிலுவில் கண்ணகி வழிபாடு'' (1999) எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இறுதியாகக் குறிப்பிட்ட மூவரைத் தவிர, முந்தைய இருவரும் தம்பிலுவில் கிராமத்தின் பத்தினி வழிபாட்டு ஆய்வில் நேரடியாகப் பங்கெடுக்கவில்லையெனினும், கிழக்கிலங்கையின் சமூகவியல் மற்றும் மாந்தவியல் ஆய்வுகளுக்கான போல்மமாகவும், களமாகவும் இக்கிராமத்தைச் சுட்டிக் காட்டியவர்கள் என்ற வகையில் குறிப்பிடத்தக்கவர்கள். இத்தகு பெருமைபெற்ற இவ்வூர், கால ஓட்டத்தில் சுயமிழந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமை பேணும் வழமையை முற்றாகத் துறந்துவிடக்கூடாது என்பது, இவ்வூரின் பிறங்கடைகளில் ஒருவன் என்ற வகையில் இக்கட்டுரையாளனின் வேணவாவாக இருக்கின்றது.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியிலேயே தம்பிலுவில் கிராமத்தின் பத்தினி வழிபாட்டை ஆராய முடிகின்றது. அவ்வாறு, பத்தினி வழிபாட்டை ஆராய்வதற்கு முன்பு, தம்பிலுவில் கிராமத்தின் வரலாற்றை சட்டகப்படுத்திக் கொள்வது அவசியமாகிறது.

**தம்பிலுவில்:**

தம்பிலுவில் கிராமத்தின் வரலாறு, மட்டக்களப்பின் முதலாவது தேசத்துக் கோவில் எனப் புகழ்பெற்ற திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்துடன் பின்னிப்பிணைந்தது. அவ்வாலயத்தின் பரிபாலனம், நிர்வாகம் என்பவற்றுடன் தொடர்புடையதாக, ம.பூ.ச இன் குளிக்கல்வெட்டுமுறை (5) கூறும் குடிவழிப் பாரம்பரியம் இவ்வூருக்குச் சொந்தமானதாகவே இன்றுவரை நிலவிவருகின்றது. எனவே திருக்கோவில் ஆலயத்தின் வரலாறு எப்புள்ளியில் ஆரம்பிக்கின்றதோ, அங்கேயே இவ்வூரின் வரலாறும் ஆரம்பிக்கின்றது எனலாம்.

இலங்கையின் ஆதிக்குடிகளாக இனங்காணப்படும் நாகர்கள் குடியிருந்ததால், நாகர்முனை எனப் பெயர்பெற்ற இப்பழம்பதியின் வரலாற்றை, ஊகங்களின் அடிப்படையில் கிறிஸ்துவுக்கு முன்வரை நகர்த்த முடியுமெனினும், கிடைக்கின்ற ஆதாரங்களின் அடிப்படையில், இன்றைய திருக்கோவில் ஆலயம் அமைக்கப்பட்டு குறைந்தபட்சம் ஆயிரமாண்டுகள் கடந்துவிட்டன எனக் கொள்ள முடிகிறது.(6) எனவே தம்பிலுவில் கிராமத்தின் வயதும் சுமார் ஆயிரமாண்டுகள் எனலாம்.

மனுநேயகயவாகு எனும் சிற்றரசன் நாகர்முனை ஆலயத்தைப் புனரமைத்து, அதனை அண்டி, தன் தாய் “தம்பதி நல்லாள்” நினைவாக “தம்பதிவில்” எனும் குளத்தை வெட்டியதாக ம.பூ.ச கூறும். (7) தம்பதிவில்லை அண்டிய பகுதியும் அவ்வாறே அழைக்கப்பட்டு, இன்று “தம்பிலுவில்” ஆக மருவி நிற்கின்றது.

**அம்மன் வழிபாடு:**

இத்தகைய வரலாற்றுப் பின்னணி கொண்ட தம்பிலுவில் கிராமத்தில், கண்ணகி வழிபாட்டின் சரித்திர முக்கியத்துவம் யாது என்ற கேள்விக்குப் பதில் பெறுவதற்கு, இன்று கிடைக்கின்ற ஆதாரங்கள் மூன்று:

1. அம்மன் ஆலயம் பற்றிய செவிவழிக் கதைகளும் அது சார்ந்த தொன்மங்களும்.
2. “தம்பிலுவில் கல்வெட்டு”(8) என்றழைக்கப்படும் தூண் கல்வெட்டு.
3.. அம்மன் வழிபாடு சார்ந்த கிராமிய இலக்கியங்கள்.

கிடைக்கின்ற ஆதாரங்களை அடுக்கி, இடைவெளிகளைப் பொருத்தமான கற்பனைகளாலும் ஊகங்களாலும் நிரப்புவதே வரலாறு எனப்படுகின்றது. 15ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட இவ்வாலய வரலாற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ள தம்பிலுவில் கல்வெட்டும், கிராமிய இலக்கியங்களும் ஒத்துழைக்கின்ற அதேவேளை, செவிவழிக்கதைகள் அதற்கு முற்பட்ட வரலாற்றை ஊகத்தினடிப்படையில் சமைத்துக் கொள்ள உதவுகின்றன.

**செவிவழிக் கதைகளும் அதுசார் தொன்மங்களும்:**

இவ்வாலயம் அமைந்த விதம் பற்றி, பல சுவாரசியமான செவிவழி மரபுரைகள் உலவுகின்றன. அவற்றைப் பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்:

அ. சகோதரியர் இருவர் இங்கே வந்து தங்கியதாகவும், குழந்தையழும் சத்தமும் மாவிடிக்கும் சத்தமும் தனக்குப் பிடிக்கவில்லை என்றுகூறி, ஒருத்தி, வனப்பாங்கான பட்டிமேட்டுக்குச் சென்றுவிட்டதாகவும் செல்லும் ஒரு கதை.

ஆ. பாம்பு வடிவில் இங்கு வந்து குடியேறிய அம்மாள், பின்பு வடக்கு நோக்கிப் பறந்து சென்றதாகச் செல்லும் இன்னொரு கதை.

இ. சம்பூர் பத்திரகாளியம்மன், ஈச்சிலம்பற்று செண்பகநாச்சியம்மன் மற்றும் தம்பிலுவில் கண்ணகியம்மன் ஆகிய மூன்று அம்மன்களும் தமிழகத்திலிருந்து அல்லது கேரளத்திலிருந்து படகில் இலங்கை வந்து சேர்ந்தார்கள் எனும் ஒரு மரபுரை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. ஆரம்பத்தில் "ஊரக்கைவெளி"(9)யிலேயே அம்மனுக்கு ஆலயம் இருந்ததாகவும், அது சிதைந்தொழிந்து போக, அவ்விடம் சிலர் நெல்விதைக்கையில் பறந்துவந்த புறாவொன்று, "கண்ணகீ!" எனக் கூவி மறைய, அதுகண்டு வியந்து அங்கே சென்று பார்க்க, அம்மனின் சிலை கிடைத்ததாகச் செல்லும் இன்னொரு மரபுரை.

**கட்டியமைக்கக் கூடிய முந்து-வரலாறு:**

மரபுரைகள், பொதுவாக, உண்மைச் சம்பவமொன்றை வைத்து சுவாரசியமாகப் பின்னப்படுபவை. செவிவழிக் கடத்தலில் மேலும் மேலும் வளர்ந்து, மக்களுக்கு இன்பமூட்டும் மீமாந்தச் செயல்களுடன் பௌராணிகத் தன்மை பெறுகின்றவை. அவற்றின் மேற்பூசல்களை களைந்துவிட்டு நோக்கினால், அதன் ரிஷிமூலத்தை ஓரளவு கண்டறிய முடியும்.

இத்தொன்மங்கள் மூலமும், மேற்பூசல்களைக் களைந்து, பின்வருமாறு ஒரு ஆதாரபூர்வமான வரலாறொன்றைத் தொகுத்தெடுக்க முடிகின்றது.

நாகர்முனை என அழைக்கப்பட்ட இப்பழம்பதி, முன்பு நாகர்கள் எனும் ஆதிக்குடிகள் குடியிருந்த ஊர் எனும் மரபுரையானது, அப் பூர்வ குடிகளின் தாய்த் தெய்வ வழிபாட்டின் தொடர்ச்சியே, இன்றைய தம்பிலுவில் கண்ணகியம்மன் என ஊகிக்க வைக்கின்றது.

தம்பிலுவில் மற்றும் பட்டிமேட்டு மூதிகங்களில் மட்டும், கண்ணகியின் முற்பிறவி அணங்கு வடிவுக்கு "நாகமங்கலை" எனும் பெயர் வழங்கப்பட்டிருப்பதன் மூலம், அந்த நாகர்குல மூதன்னை வழிபாடே பின்னாளில் கண்ணகியாகத் திரிந்திருக்கலாம் என எண்ணச் செய்கிறது.

"நாகம்"பற்றிய மரபுரை, ஆலய பூசனையில் ஒரு வெண்ணாகம் அடிக்கடி வந்து கலந்து கொள்வதாகக் கூறப்படும் சொல்மம், இவற்றின் மூலம் இதை மேலும் உறுதி செய்துகொள்ள முடியும்.

ஆரம்பத்தில் ஊரக்கைவெளியில் அமைந்திருந்த அம்மன் ஆலயம், பிற்காலத்திலேயே இன்றைய இடத்திற்கு இடம்பெயர்ந்திருக்கிறது. மழை பொய்க்கும் போது, அம்மனைத் தூக்கிச் சென்று பழையபடி ஊரக்கைவெளியில் வைத்துவிட்டால், நிச்சயம் மழை பெய்யும் என்ற நம்பிக்கை காணப்பட்டிருப்பதை பல மூத்தோர் உறுதிசெய்வதும், ஊரக்கைவெளியில், 1950களில், பாழடைந்த ஓர் ஆலய இடிபாடுகளைத் தான் அவதானித்தாக திரு. நவநாயகமூர்த்தி அவர்கள் கூறுவதும் (10) இங்கு நோக்கற்பாலது.

இதற்கு மிக அண்மையிலேயேயுள்ள பட்டிமேட்டுக் கண்ணகி அம்மன் ஆலயத்துடன், தம்பிலுவிலுக்கு நெருங்கிய தொடர்புண்டு. மூன்று தலைமுறைகளுக்கு முன்னர், ஒரே கப்புகனாரே இவ்விரு ஆலயங்களுக்கும் பூசனை செய்ததும், ஒரே நாளிலேயே இரு கோவில்களிலும் வைகாசிச் சடங்கு நிகழ்ந்ததும் வரலாறு. (தகவல்: திரு. குமரப்பெருமாள் பஞ்சாட்சரம் அவர்கள்) பொற்புறா வந்த காவியம் (11), ஊர்சுற்றுக் காவியம் தொடங்கி மட்டக்களப்புத் தேசத்தின் பெரும்பாலான அம்மன் காவியங்களில் பட்டிமேடும் தம்பிலுவில்லும் பிரதானப்படுத்தப்படுகின்றன.

கஜபாகு மன்னன் மூலம் அங்கணாமைக்கடவையிலிருந்து அம்மன் வழிபாடு தெற்கு நோக்கி வந்தது எனும் வழக்கமான பல்லவிக்கு முற்றிலும் மாறாக, பாம்பாய் வந்த அம்மன் வடக்கே பறந்துபோனாள் என இங்கு வழங்கும் கதை ஆச்சரியமூட்டுகிறது. இக்கதையும், மேற்கூறிய பொற்புறாக் காவியமும் ஏனைய அம்மன் காவியங்களும் அம்மன் வழிபாடு தெற்கிலிருந்தே வடக்குக்கு பரவியது எனும் மாற்றுக் கருத்தை(12) வலுப்படுத்துகின்றன. இதன்படி, தம்பிலுவில் அல்லது பட்டிமேடு, கிழக்கிலங்கையில் பத்தினி வழிபாட்டுக்கான ஊற்றுக்கண்ணாக இருந்திருக்கிறதா என்பது மேலும் ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

மூன்று அம்மன்கள் பற்றிய மரபுரை, இவற்றுக்கெல்லாம் மேலாக முக்கியத்துவம் பெறுகிறது. இம்மரபுரையை காலம் கணித்து, முற்றாக உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தால், கயபாகு பற்றிய நம்பிக்கைக்கு வெளியே, கண்ணகி பற்றிய பரம்பற் செய்தியொன்று நேரடியாக தமிழகத்திலிருந்து வந்திருக்கிறதென்றும் அதுவே கிழக்கிலங்கைக் கண்ணகி வழிபாட்டுக்கு ஆதாரமாய் அமைந்திருக்கிறதென்றும் கொள்ள முடியும். செண்பகநாச்சியம்மனோடு இலங்கை வந்த காரணம் போலும் தம்பிலுவிற் கண்ணகியும் "செண்பகநாச்சி" எனப்படுகின்றனள்.

**தம்பிலுவில் கல்வெட்டு**

இன்று திருக்கோவில் ஆலயத்திலுள்ள தம்பிலுவில் கல்வெட்டானது, விஜயபாகு தேவர் என்ற மன்னரின் பத்தாம் ஆட்சியாண்டில் சிவஞான சங்கரர் கோவிலுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வோவில" பற்றிக் கூறுகிறது. குற்று இல்லாத கல்வெட்டெழுத்துக்கள் என்பதால் வோவில என்பதை "வொவில்", "வேர்வில்", "வெரவில்" என்றெல்லாம் வாசிக்கலாம். இச்சொல் எதைக் குறிக்கிறது என்று உறுதிப்படுத்தக்கூடிய தெளிவான ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

பேராசிரியர். இந்திரபாலா, பேராசிரியர்.சி.பத்மநாதன் ஆகியோரும், பண்டிதர் வி.சீ.கந்தையாவும் இதன் வரிவடிவத்தை கி.பி 16ஆம் நூற்றாண்டுக்குரியதாக இனங்கண்டு,(13) இக்கல்வெட்டு, கோட்டை இராச்சியத்தின் ஆறாம் விஜயபாகுவைக் (1507-1521) குறிப்பதாகக் கூறுவர். இப்படிக் கொண்டால் இக்கல்வெட்டு கி.பி 1517ம் ஆண்டு நடப்பட்டதாகும்.

கண்ணகியம்மன் ஆலய வளாகத்தில் கிடைத்த இக்கல்வெட்டு பல கேள்விகளை எழுப்புகிறது. வோவில என்பது இடப்பெயரா? அவ்வாறு அழைக்கப்பட்ட இந்த வளாகம் மன்னனால் திருக்கோவிலுக்கு மானியமாக வழங்கப்பட்டதா? அல்லது போர்த்துக்கேயரால் சிதைக்கப்பட்ட "சிவஞான சங்கரர் கோவில்" எனும் சிவாலயம் இன்றைய கண்ணகியம்மன் ஆலயத்தின் அமைவிடத்தில் இருந்ததா? அது அழிந்த பின்னர் ஊரக்கைவெளியிலிருந்து அம்மன் இங்கு கொணர்ந்து குடியிருத்தப்பட்டாளா? இத்தகைய கேள்விகளுக்கு தெளிவான விடைகளைப் பெறக்கூடியதான எவ்வித அகப்புறச் சான்றுகளும் கிட்டவில்லை.

ஆனால், அம்மன் ஆலயத்துக்கும் இந்தக் கல்வெட்டுக்கும் என்ன தொடர்பு என்ற கேள்விக்கு, விசயவாகு ராசா தானமளித்ததாக, இன்றும் ஆலயத்தில் காணப்படும் பொற்சிலம்பையும், தங்க அம்மானைக்காய்களையும் சுட்டிக்காட்டும் ஒரு மூதிகம் பதிலளிக்கிறது. இதன் மூலம் இக்கல்வெட்டு குறிப்பிடும் ஆறாம் விஜயபாகு மன்னனும் மூதிகம் குறிப்பிடும் விசயவாகு மன்னனும் ஒருவனேயென முடிவுசெய்ய முடிகிறது.

**கிராமிய இலக்கியங்கள்:**

இதையடுத்த காலப் பகுதியில், 17ஆம் அல்லது 18ஆம் நூற்றாண்டு நூல்களாக கருதப்படும் கண்ணகி வழிபாடு சார்ந்த கிராமிய இலக்கியங்கள், குறிப்பிடும் கண்டி மன்னர்களின் பெயர்களை வைத்து, அவர்களுடனான இவ்வாலயத் தொடர்பை ஓரளவு வரையறை செய்துகொள்ள முடிகிறது.

தம்பிலுவில் மழைக் காவியம், "இராசசிங்கனையும்" தம்பிலுவில் அம்மன் பள்ளு, "நரேந்திரசிங்கனையும்" குறிப்பிடுகிறது. மட்டக்களப்புத் தேசத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தமையையும், நீண்ட ஆட்சிக் காலத்தையும் வைத்து நோக்கும் போது, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இராசசிங்கன், இரண்டாம் இராஜசிங்கனே (1635-1687) எனக் கொள்ளலாம். அதேவேளை, அவனது பேரனான வீர நரேந்திரசிங்கன் (1707-1739) இக்கோயிலோடு கொண்டிருந்த நெருக்கத்தை, அம்மன் பள்ளுப்பாடல் சுட்டிக் காட்டுகிறது. தம்பிலுவில் அம்மன் மற்றும் திருக்கோவில் முருகனுக்குக் காப்புச் சொல்லப்பட்டு பாடப்பட்டுள்ள "நரேந்திரசிங்கன் பள்ளு" எனும் இன்னுமொரு பள்ளு நூல், இத்தலத்துக்கும் நரேந்திரனுக்குமிருந்த நெருங்கிய தொடர்பைத் துலாம்பரமாகக் காட்டுகிறது.

ஒட்டுமொத்தமாக, இத்தகைய ஆதாரங்கள் மூலம், வரலாற்று இலங்கையை ஆண்ட சிங்கள மன்னர்களின் வழிபாட்டுக்குரிய மற்றும் சரித்திரப் புகழ்வாய்ந்த பெருந்தெய்வமாக தம்பிலுவில் கண்ணகி மிளிர்ந்துள்ளாள் என்று முடிவுசெய்ய முடிகிறது.

ஒழிபு:

- நாகர்முனையில் நிலவிய தாய்த் தெய்வ வழிபாடு, பிற்காலத்தே அறிமுகமான பத்தினி வழிபாட்டுடன் இணைந்து, தம்பிலுவில் கண்ணகையாக உருத் திரிந்தது.
- ஆரம்பத்தில் ஊரக்கைவெளியிலேயே இவ்விறைவி வழிபடப்பட்டிருக்கிறாள்.
- வரலாறு புகைமூட்டமாய்க் காணப்படும் ஓர் காலத்தில், தமிழகத்திலிருந்தே கண்ணகி இங்கு நேரடியாக அறிமுகமாகி, கிழக்கிலங்கை எங்கணும் கோயில் கொண்டிருக்கலாம் என்பதற்கு, "மூன்று அம்மன்களை" மரபுரை சான்றாகிறது.
- பட்டிமேட்டுக்குச் சமனான அல்லது சற்று முந்தைய வரலாற்றுடைய தம்பிலுவில் கண்ணகி, திருக்கோவில் தேசத்துக்கோவிலுக்கு அருகேயிருந்த அமைவிடச் சிறப்பால், இப்பகுதியை ஆண்ட சிற்றரசரதும், மட்டக்களப்புத் தேச மக்களினதும் முக்கிய வழிபடு தெய்வமாக மாறி, ஊர்தோறும் கோயில் கொள்ளலானாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அதே அமைவிடச் சிறப்பாலேயே, ஆறாம் விஜயபாகுவாதி கோட்டை இராச்சிய மன்னர்கள் தொடங்கி, இரண்டாம் இராஜசிங்கன், வீரபராக்கிரம நரேந்திரசிங்கனாதி கண்டி இராச்சிய மன்னர்கள் வரை , தம்பிலுவில் கண்ணகியம்மன் இலங்கையின் முடியாட்சி மன்னர்களும் போற்றும் சரித்திரப் புகழ் வாய்க்கப் பெற்றிருந்தாள்.

வரலாற்றுக் காலத்தில், இவ்வம்மனின் வரலாற்றை இம்மட்டே வரையறுத்துக் கொள்ள முடியும். எதிர்கால ஆய்வுகள், மேலும் பல விடைதெரியா வினாக்களுக்குப் பதில் பகரலாம்.

அடிக்குறிப்புகள்:

1. Nur Yalman, "Under the Bo Tree",1967, pp. 326-328"
2. Dennis.B.McGilvray, "Crucible of Conflict", 2008,
3. Lester R.Hiatt, "The Pattini Cult of Ceylon : a Tamil Perspective", "Social Compass", Vol. 20:2, 1973 June, pp. 231-249
4. Gananath Obeyesekere, "The Cult of the Goddess Pattini", 1984, pp.592-597.
5. F.X.C. நடராசா, மட்டக்களப்பு மான்மியம், 1998, பக். 78,79, வித்துவான் கமலநாதன், கமலா கமலநாதன், "ம.பூ.ச", 2005, பக்.52,53, குளிக்கல்வெட்டு (பாடல்.3) கூறும் முதல் மூன்று குடியாரில் கண்டன் குடி, சருகுபில்லி ஆகியோர் பண்டுதொட்டு, திருக்கோவில் ஆலய வண்ணக்கராகவும், அதன் நிர்வாகிகளாகவும் பணியாற்றி வருகின்றனர். கட்டப்பத்தான் குடி, தம்பிலுவில் அம்மன் கோவிலின் நிர்வாகத்தில் முக்கிய பங்கெடுத்து வருகிறது.
6. கி.பி 1215இல் இலங்கை மீது படையெடுத்த கலிங்க மாகோனின் ஆட்சிக் காலத்தில் திருக்கோவில் ஆலயம், மிகப் புகழ் வாய்ந்திருந்ததை நம்மால் பல அகப்புறச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடிகிறது
7. F.X.C. நடராசா, மட்டக்களப்பு மான்மியம், 1998, பக். 30,வித்துவான் கமலநாதன், கமலா கமலநாதன், "ம.பூ.ச", 2005, பக். 18 மாகோன் படையெடுப்புக்கு சற்று முன்னர் நிகழ்ந்ததாக ம.பூ.ச கூறுகின்ற இச்சம்பவங்கள், சோழராட்சிக் காலத்திற்கு (கி.பி 993- 1070) அண்மையிலேயே இடம்பெற்றிருக்கவேண்டும் எனக் கொண்டால் அது தவறாகாது.
8. பேராசிரியர்.கா.இந்திரபாலா, "ஈழநாட்டுத் தமிழ் சாசனங்கள்"கட்டுரை - "சிந்தனை" இதழ், யூலை-அக்டோபர் 1968, பக்.42, பேராசிரியர்.சி.பத்மநாதன், "இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் II" 2013. பக்.431-434, கண்ணகியம்மன் கோயிலில் காணப்பட்ட இக்கல்வெட்டு, அதில் மயில் பொறிக்கப்பட்டுள்ளதாலும், அதிற் கூறப்படும் "சிவஞானசங்கரர் கோவில்" எனும் பதம் முருகன் கோவிலைக் குறிக்கலாம் என்ற கருதுகோளிலும் ஆங்கிலேய அதிகாரி, கியூ நெவிலால் 1885களில் திருக்கோவிலில் எடுத்துச் சென்று வைக்கப்பட்டு, இன்றளவும் அங்குள்ள ஏனைய கல்வெட்டுக்களுடன் வைத்துப் பேணப்படுகிறது.
9. ஊரக்கை வெளி என்பது, இன்றைய தம்பிலுவில் அம்மன் ஆலயத்தை அண்டி பெரியகளப்பின் அக்கரையிலுள்ள பரந்த வயல்வெளி. இங்கேயே பழைய தம்பிலுவில் குடியிருப்பு இருந்ததாகவும், ஊர் இன்றைய இடத்துக்கு இடம்பெயர்ந்ததும், அது ஊரின்அக்கா ஸ்ரீ ஊரக்கை என்றானது எனும் நகைச்சொல்மமொன்று அவ்வயலுக்கு உண்டு.
10. நா.நவநாயகமூர்த்தி, "தம்பிலுவில் கண்ணகி வழிபாடு", 1999
11. பட்டிமேட்டு அம்மன் மீது 18ஆம் நூற்றாண்டளவில் பாடப்பட்டதாகக் கருதப்படும் பொற்புறா வந்த காவியம், பொற்புறா வடிவில் வந்த அம்மனை, இலங்கையெங்கணும் நகருலாவாகக் கொணர்வித்து, தம்பிலுவில்லில் குடியமர்த்தியதாகவும், பின்பு இறக்காமம், வெருகங்குடாவெளி(?), காரைதீவு ஊர்களிலும் இறுதியில் பட்டிமேட்டிலும் அம்மன் கோயில் கொண்டாளென்றும் விவரிக்கிறது.
12. வீ.சீ.கந்தையா, மட்டக்களப்புத் தமிழகம், 1962, ப. 157, 158 "தெற்கிலிருந்து வடக்கே அம்மன் பறந்த" இதே கதையை பண்டிதரும் குறிப்பிடுகிறார். கிழக்கிலங்கை, முக்கிய கண்ணகி வழிபாட்டுப் புலமாகக் காணப்படுவதை விளக்குவதற்கு, பலரும் பல்வேறு விதமாகக் கூறிவரும் கருதுகோள்களில் ஒன்று, அது அங்கு தெற்கிலிருந்து வடக்காகப் பரவியது என்பதாகும்.
13. இந்திரபாலா, மேலது, பக்.44. சி.பத்மநாதன், மேலது, பக்.431-434,. வீ.சீ.கந்தையா, மட்டக்களப்பு சைவக்கோவில்கள், 1983, பக். 55


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா-2014

**01, ஆகஸ்ட் 2014 வெள்ளிக்கிழமை, முதலாம் நாள் மாலை**

**மாலை அமர்வு பி.ப 03.00 - 07.30**

**இடம்** : தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கலை அரங்கு

**அரங்கு** : "கவுந்தியடிகள்" அரங்கு.

**தலைமை** : கலாபூஷணம் திரு. த. மகேந்திரா (புராண படன சாதகர்)


## சிறப்பு அதிதிகள்




**திரு. ம. மலரவன்**
(வண்ணக்கர், தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)



**திரு. கே. சண்முகம்பிள்ளை**
(தலைவர், தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயம்)



**திரு. தா. மானாகப்போடி**
(வண்ணக்கர், தம்பிலுவில் ஸ்ரீ சித்திவினாயகர் ஆலயம்)



**திரு. கா. விஜயகுலேந்திரன்**
(தலைவர், தம்பிலுவில் ஸ்ரீ சித்திவினாயகர் ஆலயம்)




வரவேற்புரை + நிகழ்ச்சித் தொகுப்பு
**திரு. க. சத்தியசீலன்**
(ஆசிரியர், பாணமை அ.த.க. பாடசாலை)



அரங்க அறிமுகம்
இணைப்பாளர் **திரு. கண. இராஜரத்தினம்**
(முகாமைப் பணிப்பாளர்,
திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், விநாயகபுரம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தலைமையுரை
**கலாபூஷணம். த. மகேந்திரா**
(புராண படன சாதகர்)



நன்றியுரை
**க. கணேசன்**
(நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர்)



**கவுந்தியடிகள் அரங்கு**



**கவுந்தியடிகள் அரங்கில் அவையோர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துகை.

**"கொம்புமுறி விளையாட்டு"**

அனுசரணை : தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம் மற்றும் சைவ நெறிக் கூடம்,


அம்பாறை மாவட்டம், தம்பிலுவில்.



இணைப்பாளர்கள் : **திரு.சோ.சதானந்தம்** (விழாக்குழு உறுப்பினர்)

**திரு.க.சிற்றம்பலம்.** (விழாக்குழு உறுப்பினர்)





அண்மைக்காலமாக இப் பிரதேசத்தில் அருகிவரும் பாரம்பரிய நிகழ்வான கொம்புமுறி விளையாட்டை

இளம் தலைமுறையினருக்கு அறிமுகம் செய்வதுடன்,

அதனை மீட்டிப் பார்க்கும் நோக்குடன் இந்நிகழ்த்துகை இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையுரை

# தம்பிலுவில் கிராமத்தில் கண்ணகி வழிபாடும் கொம்பு விளையாட்டும்

கலாபூஷணம். த. மகேந்திரா
(புராண படன சாதகர்)



இலங்கையில் கண்ணகி வழிபாடு கயபாகு மன்னனினால் கொண்டுவரப்பட்ட ஒன்றாகும். இவ்வழிபாடு இலங்கையின் கரையோரப்பகுதிகளிலே மிகவும், சிறப்புற்று விளங்கிவருகின்றது. மட்டக்களப்பின் தெற்கிலே உள்ள கிராமங்களிலும் இவ்வழிபாடு மேன்மை பெற்று விளங்கியிருந்தது. கண்ணகி அம்மன் வழிபாடு எப்போது எங்கள் பகுதியில் தொடங்கியதோ அன்றிலிருந்தே கொம்பு விளையாட்டும் தொடங்கியது என்றே கூறவேண்டும். கண்ணகியின் கோபம்தணிக்க இடைச்சேரிமக்களால் மஞ்சள் கொம்பு விளையாடி 'அம்மம்மா கூ' என்று கூறி அன்று அவளை மனம் குளிரச்செய்தார்கள். அதனால் அதனை எங்கள் கிராமத்தவர்கள் அன்றிலிருந்து 1981ம் ஆண்டுவரை நடாத்திவந்துள்ளனர். இதற்கு கண்ணகி அம்மன் ஆலயத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கின்ற இறுதியாகக் கொம்பு விளையாட்டிற்குப்பயன்படுத்திய கொம்பும் அதில் இடப்பட்ட ஆண்டுமே சாட்சியாகும்.

எங்கள் கிராமத்தில் இக்கொம்புவிளையாட்டு, மழையின்றிப் பயிர்களும், மக்களும் கஷ்டத்துள்வாடும் போதும், வெப்பத்தினால் ஏற்படும், கண்நோய், அம்மை நோய் சின்னம்மை, குக்கல், வயிற்றுக்கடுப்பு, வைசூரி போன்ற நோய்களினால் உயிர் இழந்தும், பெரும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் வேளைகளில் ஊர்மக்கள் கூடி அன்னையின் கோபத்தினால்தான் இந்த நிகழ்வு எனக்கூறி அம்மனுக்கு நேர்த்தி செய்து கொம்புவிளையாடி அம்மனை மகிழ்விபோமெனப் பேசி முடிவெடுப்பார்கள்.இப்படி முடிவை எடுத்து அதற்கு கால்கோளாகத்தேங்காய் நேர்ந்துவைத்தல் நிகழ்வு நடை பெறும். இதற்கு எங்கள் ஊரிலுள்ள கோவலர் கோவிலைச் சேர்ந்த வடசேரி மக்களும், கண்ணகியம்மன் கோவிலைச் சேர்ந்த தென்சேரி மக்களும் ஒன்று சேர்ந்து தேங்காய் நேர்ந்து அன்னைக்கு நேர்த்திவைப்பார்கள்.

இதன் பின்பு மழைக்காவியம், கொடும்பாவி எரித்தல் போன்ற நம்பிக்கையூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். அவ்வேளையில் அம்மனின் அருட் கடாட்சத்தினால் மழை பொழிந்து ஆறு, குளங்கள் எல்லாம் நிறைந்து முழுவிளைச்சலும் நோயற்ற வாழ்வும் பெறுவர். இதனால் தம்பிலுவில் கிராமத்து மக்களுக்கு அன்னை கண்ணகியின்மீது அளவற்ற பக்தியும் மேலான நம்பிக்கையுமுண்டாகும். இன்று மக்கள் தங்கள் துயர்களைய அன்னையையே நாடி நிற்கின்றனர். இலையுதிர்காலம் வந்ததும் இருகோயில் நிர்வாகமும் கூடி முடி வெடுத்து ஓர் ஊர்க்கூட்டத்தை மக்களுக்கு அறிவித்து அம்மனின் ஆலய முன்றலிலுள்ள ஆல மரத்தடியிலே கூடுவார்கள். இக்கூட்டத்திற்குக் கிராமமக்கள் அனைவருமே சமூகம் கொடுப்பார்கள்.

இக்கூட்டத்திலேதான் கொம்பு விளையாடுவதற்கான தீர்மானங்களை எடுப்பார்கள். இத்தீர்மானத்திற்கு அமைவாக கொம்பு விளையாட்டு நடைபெறும். இக்கொம்பு விளையாட்டை எங்கள் கிராமத்திலுள்ள எம்முன்னோர் வகுத்துவைத்த முறையின் படி வடசேரி (கோவலர் பக்கம்) இடசேரி கண்ணகி பக்கம் பக்கமாக இருந்தே விளையாடுவார்கள். வடசேரி என்பது கண்டங்குடி, சருவிலிகுடி, வைத்தினார் குடி, பணிக்கனார்குடி, செட்டிகுடி, குருக்கள் குடி எனும் குடிகளைச் சேர்ந்தவர்களாகும். அதேபோல் தென்சேரி என்பது, கட்டப்பத்தான் குடி, சிங்களக்குடி, கோரைக்களப்புக்குடி, வேடக்குடி, முன்னங்கைச்சவடிக்குடி, குருக்கள்குடி, மழுவராயன்குடி, பொற்கொல்லர் குடி (விஸ்வகோத்திரம்) எனும் குடிகளைச் சேர்ந்தவர்களாகும். ஊர்க்கூட்டத்தில் இருசேரியாருக்கும் இரண்டு கொம்புத்தலைவர்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுப்பார்கள், பின்பு அவர்களுக்கு உதவியாக இரு குழுக்களையும் தேர்ந்தெடுப்பார்கள், பின்பு இரு சேரியாருக்குமிடையில் ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்த்துவைப்பதற்கு இருபகுதியிலும் இருந்து ஒரு சமாதானச்சபையையும் தெரிவு செய்து கொம்புவிளையாட்டு ஆரம்பிக்கும் தினத்தையும் தேர்ந்தெடுப்பார்கள். அதன்பின் உரிய நாளில் கொம்பு விளையாட்டிற்கான எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டு ஆரம்ப நிகழ்வாகத் தேங்காய் உடைத்தல் கொம்புச் சந்தி என்னும் இடத்தில் இரு பிரிவினரும் வந்து சேர்ந்து தொன்று தொட்டு நடந்துவரும் **பள்ளுக்குவளைதல்** என்னும் நிகழ்வு நடக்கும். தென்னம்ஓலைகட்டப்பட்டு தீமூட்டப்பட்ட பந்தத்தினைப்போட்டு அதனைச்சுற்றிவளைத்து பள்ளுப்பாடல், கும்மிப் பாடல் பாடி ஆடுவார்கள். இந்நிகழ்வு இன்றும் அம்மனின் தேர் ஊர்வலம் செல்ல வெளிக்கிடும்போது கொம்புச்சந்தியிலே நடைபெற்று வருகின்றது.

தேங்காய் உடைத்தல் நிகழ்வு அதன்பின் நடை பெற்றுமுடிந்ததும் கொம்பு விளையாட்டுத்தொடங்கும். இதில் ஒரு கொம்பு முறிப்பார்கள். இக்கொம்பை **'கொழுகொம்பு'** என்று கூறுவார்கள். இக்கொம்பு அம்மனுக்கே வெற்றியாய் அமையும். அவ்வேளையில் எல்லோரும் சேர்ந்து ஆடிப்பாடி அம்மனை மகிழ்விப்பார்கள், அதன்பின்பு நாட்களை நிட்சயித்து கொம்புத்தட்டுக் கொம்பு மூன்றும் அதன்பின் ஏழும் முறித்து விளையாடி முடிந்த பின்பு **'தண்ணீர்க் கொம்பு'** முறிப்பார்கள். இதுவும் அம்மனுக்கே வெற்றியாகும்.

கொம்பு விளையாடும் நாட்களில் கொம்பினைக் கோயிலில் இருந்து கொம்புச் சந்திக்குக் கொண்டு வருவதற்கு இரு சாராரும் ஒவ்வொருவரைத் தெரிவு செய்து வைப்பார்கள். இவர்களை அந்த நேரத்தில் **'பட்டாண்டி'** என்றே அழைப்பார்கள்.

இப்படியாகக் கொம்புகளைக் கொம்புச் சந்திக்குக் கொண்டுவருவதற்குமுன் கோயிலில் இருந்து வெளியே கொண்டுவரும் போதும் பள்ளுப்பாடி ஆடியே வருவார்கள். இருசாராரும் பின் கொம்புச்சந்தியில் இரண்டு கொம்பினுடன் பட்டாண்டிமார்வந்து சேர்ந்ததும், பள்ளுக்குவளைதல் என்னும் நிகழ்ச்சி நடைபெற்று முடிந்தபின் கொம்பு பிடிப்பவர்கள் பட்டாண்டியிடமிருந்து கொம்பினைப் பெற்றுக்கொண்டு கொம்பு பிடித்து முறிக்கும் இடமான செவ்வாக்குத்தியின் பக்கத்தேசென்று விளையாட்டைத் தொடங்குவார்கள். அங்கு முக்கியமாக வடம் (கயிறு) அச்சுலக்கை என்பன காணப்படும். இப்படியாக கொம்புத்தட்டுக் கொம்பு மூன்றும், கூடாரக் கொம்பு ஐந்தும் முறித்து விளையாடும் நேரங்களில் வென்றபகுதியினர் கொம்புச் சந்தியிலே பாடி ஆடி மகிழ்வார்களே தவிர வேறு எங்கும் ஆட மாட்டார்கள்.

ஆனால் ஏடகக்கொம்பு முறிக்கத் தொடங்கினால் ஊரைச்சுற்றி வென்றவர்கள் ஆடிக்குதூகலிப்பார்கள். ஏடகக் கொம்பு முறி விளையாட்டுத் தொடங்குவதற்கு முன்பு இருசாராரும் தங்களுக்கென ஏடகங்களை அமைக்கத் தொடங்கி ஏடகம் சோடனை செய்வதற்குமுன்னர் இரு ஏடகங்களையும் இரு பகுதியினரும் கொம்புச்சந்திக்கு கொண்டு வருவார்கள். அங்கு வட சேரி ஏடகம் சிறிது உயர்ந்தும், தென் சேரி ஏடகம் சிறிது பதிந்தும் இருக்கும். இவ்வேளையில் ஏடகத்திற்குச் சீலை எறிதல் எனும் பாரம்பரிய நிகழ்வு நடைபெறும். அந்நிகழ்வு முடிந்தும் இரு ஏடகங்களும் அவரவர் பகுதிக்குச் சென்றுவிடும். ஆனால் அதன்பின்பு ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றப்பகுதியைச் சேர்ந்தவர்களுடைய ஏடகம் சோடனை செய்யும் பகுதிக்குச் செல்லமுடியாது.

இப்படியாக ஏடகம் சோடனைகள் முடிந்தபின்பு இரு ஏடகமும் கொம்புச்சந்தியில் வந்து நின்று பள்ளுக்குவளைந்து முடிந்ததும் ஊர்வலத்திற்காக ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று ஊரைச்சுற்றி அடுத்தநாள் காலையில்தான் கொம்புச் சந்தியைவந்தடைந்து பள்ளுக்குவளைந்த பின்பு தங்கள் தங்கள் கோயிலுக்குச் செல்லும். பின் கொம்பு முறிவிளையாட்டுத் தொடங்கு முன்னும் ஏடகம் இரண்டும் கொம்புச்சந்தியில் வந்து சந்தித்துப் போனபின்புதான் ஏடகக்கொம்பினை பட்டாண்டி எடுத்து வெள்ளை மேற்கட்டியின் மேளதாளங்களுடன் கொம்புச்சந்திக்குக் கொண்டுவருவார்கள். இரண்டுபட்டாண்டியும் வந்ததும் கொம்புபிடிப்பவர்கள வந்து கொம்புகளை வணங்கி வாங்கி எடுத்துக்கொண்டு கொம்புமுறிக்கும் இடத்திற்குச் செல்வார். இக்கொம்பு முறிக்கும் காலத்தில்தான் இருச்சாராரிடத்தும் வாரக்கட்டு வேகமாகவே இருக்கும். இப்படி எடுத்த கொம்பு அன்று முறிக்கமுடியாது போய்விட்டால் அதனை மீண்டும் கோயிலுக்குள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமாட்டார்கள். இருபகுதியினரும் பந்தலிட்டு அதனுள்ளே இருப்பார்கள். இந்த நிகழ்வை **'தங்கு கொம்புவைத்தல்'** என்று கூறுவார்கள். அடுத்த அந்தக் கொம்பு முறிக்கும்வரைக்கும் பட்டாண்டி மாருக்கு நீராகாரம் மட்டும்தான். உணவு வழங்கப்படுவதில்லை. கொம்பு முறிந்தபின்பு தான் அவர்கள் கோயிலுக்குச் சென்று உணவு அருந்தலாம்.

கொம்பு வென்றவர்களுடைய ஏடகம் வெற்றிக்கொம்போடு ஊர்வலமாகச் செல்லும். இவ்வேளையில் அதிகமாக வாரக்கட்டு பாடல்களை மற்றப்பகுதியினருக்கு எதிராகப்பாடி ஆடி, நடித்து அன்று இரவுமுழுவதும் மகிழ்வார்கள். இப்படியாக ஏழு ஏடகக் கொம்பும் விளையாடி முடிந்ததும் பின்பு தண்ணீர்க் கொம்பு முறித்தல் நிகழும். அது அம்மனுக்கே வெற்றியாய்வரும். அதன் பின் இரு சாராரும் குதூகலித்து ஆடி அம்மனின் தங்களது நேர்த்தியை முடித்த சந்தோசத்தில் அதன் பின்பு இருசாராரும் தங்கள் பக்கம் வென்ற கொம்புகளை எல்லாம் ஒன்றாக இணைத்துக்கட்டி தலைகளிலேவைத்து ஊர்வலமாக வருவார்கள். அவ்வேளையில் வீதிகளின் இருமருங்கும் மஞ்சள், பத்திரம், அறுகு முதலியவை சேர்ந்த நீரை கொம்பின் மீதும் மக்கள் மீதும் சொரிவார்கள். இப்படி ஊர்வலம் முடிந்துவந்ததும் கொம்புச்சந்தியிலே செவ்வாக்குத்தி அருகேவந்து பள்ளுப்பாடி வடம் வெட்டிச் செவ்வாக்குத்திக்கு நீர் சொரிந்து அம்மனுக்கு குளிரும்படியாகக் குளுத்தி பாடி கோயிலுள் சென்று வென்றகொம்புகளை ஆவணப்படுத்திவைப்பார்கள். ஊரும் மக்களும் ஒருகுறையுமின்றி அம்மனையே நம்பிப் பக்தியுடன் வாழ்வார்கள்.

'கூடல்' பரல் - 03 (2014) பக்கம் 89 இல் திருமதி. எஸ். கேசவன் (சிரேஸ்ட விரிவுரையாளர்) அவர்களால் தொகுக்கப் பெற்ற ''மட்டக்களப்புத் தேசத்தில் உள்ள கண்ணகையம்மன் ஆலயங்கள்'' எனும் பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் பிரதான இரண்டு கண்ணகையம்மன் ஆலயங்களில் பெயர்கள் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டமைக்கு வருந்துகின்றோம்.

01. செட்டிபாளையம் கண்ணகையம்மன் ஆலயம்
02. மண்முனை - தாழங்குடா கண்ணகையம்மன் ஆலயம்.

**- தொகுப்பாசிரியர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா-2014

**02, ஆகஸ்ட் 2014 சனிக்கிழமை, இரண்டாம் நாள் காலை**

**இயலரங்கு**


**காலை அமர்வு மு.ப 08.45 - 01.00**

**இடம்** : தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.
**அரங்கு** : **"சேரன் செங்குட்டுவன்"** அரங்கு.
**தலைமை** : திரு. வ. ஜயந்தன் (விழாக்குழுத் தலைவர்)


பேராளர் பதிவும் ▶




◀ நிதி அன்பளிப்பும்




முதன்மை அதிதி
பொறியியலாளர் **செ. திலகராஜா**
(கிழக்கு மகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்)



முதன்மை அதிதி
கலாநிதி **செ. குணபாலன்** (முதுநிலை விரிவுரையாளர் - தலைவர், முகாமைத்துவ பீடம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)



முதன்மை அதிதி
கலாநிதி **வே. யுகபாலசிங்கம்** (முதுநிலை விரிவுரையாளர், மெய்யியல்துறை, யாழ்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு)



சிறப்பு அதிதி
வைத்திய கலாநிதி **வி. மோகனகாந்தன்**
(ஆதார வைத்தியசாலை, கல்முனை வடக்கு)



சிறப்பு அதிதி
**திரு. நா. அருட்செல்வன்**
(மக்கள் வங்கி, முகாமையாளர் திருக்கோவில்)



சிறப்பு அதிதி
**திரு. சீ. ஜெயரூபன்**
(உதவிப் பிரதேசசெயலாளர், திருக்கோவில்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்கல விளக்கேற்றல்















இயலரங்கில் அவையோர்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தமிழ்மொழி வாழ்த்து
**திருமதி. மதிவதனி பாலேந்திரகுமார்**
குழுவினர்



கீதம்
**செல்வி. கௌசல்யா இராமலிங்கம்**
பி.ஏ. சங்கீதம்



வரவேற்புரை
**திரு. ஆர் சயனொளிபவன்**
(மட்டக்களப்பு இணைப்பாளர், விழாக்குழு)




அரங்க அறிமுகம்
( இணைப்பாளர்)
**திருக்கோவில் கவியுகன்**







வரவேற்பு நடனம் **செல்வி. அஸ்விகா புண்ணியசீலன்**



வெளியீட்டுரை: **கதிரவன் த. இன்பராசா**
(தொகுப்பாசிரியர் - 'கூடல்')

**'கூடல்' (பரல்-3) - விழாமலர் - 2014**
**வெளியீடு**

அனுசரணை :

**வைத்திய கலாநிதி க. முருகானந்தன்.**






முதற்பிரதி பெறுனர்: **திரு. சிந்தாத்துரை இதயகாந்தன்**
(ஆராய்ச்சி உதவியாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, வவுனியா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கண்ணகி கலை இலக்கியக் கூடலின் இணையத்தளம் தொடக்கி வைப்பு. அனுசரணை : **"கவிஞன்"**, சிற்றிதழ்

அறிமுகவுரை : **திரு.ச.மதன்.** (**"கவிஞன்"** ஆசிரியர்- செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

தொடக்கி வைப்பவர் : **கலாநிதி. அரிமா. அ.செல்வேந்திரன்** (செயற்குழு உறுப்பினர். கண்ணகி கலை இலக்கியக் கூடல்)





கவியரங்கம்

தலைப்பு : **"வந்தாள் கண்ணகி வந்தாள்..."**

கவியரங்கத் தலைமை : **முல்லை வீரக்குட்டி** (விழாக்குழுச் செயலாளர்)



கவியரங்கத் தலைமை
**முல்லை வீரக்குட்டி**



கவிஞர்
**தம்பிலுவில் தயா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிஞர்
**குறிஞ்சி வாணன்.**



கவிஞர்
**தம்பிலுவில் ஜெகா.**



திருமதி
**நவயுகா ராஜ்குமார்**



செல்வி
**பத்மியா பாக்கியராஜா**



**கவியரங்கில் அவையோர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலங்காடி அறிமுகவுரை

**திரு.சு.கேசவமூர்த்தி**

(உரிமையாளர், கேசவன் புத்தகநிலையம், கொழும்பு)



கண்காட்சி அறிமுகவுரை


கலாநிதி. **திருமதி.மாலதி டீ அல்விஸ்**

மொழிபெயர்ப்பு- **திரு.ஞா.விநாயகமூர்த்தி**




நன்றியுரை

**கோ. சேந்தன்** (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)



நிகழ்ச்சித் தொகுப்பு

**ந. மகேந்திரன்** (புள்ளிவிபர உத்யோகத்தர்)



விவரண ஒளிப்படக்காட்சி-கண்ணகி கலை இலக்கிய விழா 2013.

அறிமுகவுரை : **திரு. அ. அன்பழகன் குரூஸ்**

(செயலாளர், "கண்ணகி கலை இலக்கியக்கூடல்")

ஆரம்பித்து வைப்பவர்: **திரு.த.கைலாயபிள்ளை**

(தலைவர், "கண்ணகி கலை இலக்கிய விழா 2013"


-தலைவர், விபுலாநந்த இல்லம், அக்கரைப்பற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலங்காடி














நூலங்காடி திறந்து வைப்பு: **பேராசிரியர் மா. செல்வராஜா**

அனுசரணை : **கேசவன் புத்தக நிலையம், கொழும்பு.**

இணைப்பாளர் : **திரு. பா.கிருபாகரன்** (விழாக்குழு உறுப்பினர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# க ண் கா ட் சி









கண்காட்சி திறந்துவைப்பு

**திரு.சி. சாமித்தம்பி**

(கிழக்கு மாகாணப்பணிப்பாளர், தேசிய பொலிஸ் ஆணைக்குழு
- செயற்குழு உறுப்பினர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)

இணைப்பாளர் : **திரு.ஞா.விநாயகமூர்த்தி**

(தலைவர், சத்தியசாயி சேவா நிலையம், கிழக்குப்பிராந்தியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா–2014

**02, ஆகஸ்ட் 2014 சனிக்கிழமை, இரண்டாம் நாள் மாலை**

**மாலை அமர்வு பி.ப 03.00 - 07.00**

**இடம்** : தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.

**அரங்கு** : **"கோவலன்"** அரங்கு.

**தலைமை** : திரு. வ. ஜயந்தன் (விழாக்குழு தலைவர்)

# அதிதிகள்



முதன்மை அதிதி
**திரு. க.விமலநாதன்**
(மேலதிக அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்டம்)



முதன்மை அதிதி
பேராசிரியர் **வ. மகேஸ்வரன்**
(தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)



முதன்மை அதிதி
**திரு. ஆ.இரகுபதி பாலசிறீதரன்.**
(தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்)



சிறப்பு அதிதி
**திரு.வே.ஜெகதீசன்**
(பிரதேச செயலாளர், ஆலையடிவேம்பு)





சிறப்பு அதிதி
**திரு. மா.கணேசன்**
(கணக்காளர். பொது வைத்தியசாலை, அம்பாறை)




சிறப்பு அதிதி
**திரு. சோ.இரவீந்திரன்**
(அதிபர். தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம்)










# மங்கல விளக்கேற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரவேற்புரை
**திரு.சோ.சுந்தரமூர்த்தி**
(ஓய்வு நிலை அதிபர்)



அரங்க அறிமுகம்
இணைப்பாளர் **திரு. எஸ்.பி. நாதன்.**
(ஆசிரியர், தம்பிலுவில் ம.ம.வி)



திருக்கோவில் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையேயான மனன, கட்டுரைப் போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களின் ஆற்றுகை.

**திருக்கோவில் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையேயான மனன மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களின் விபரம்**

| பிரிவு | போட்டி | மாணவர் பெயர் | பாடசாலை | கோட்டம் | நிலை |
|---|---|---|---|---|---|
| 01 | பாவோதல் | செல்வன். நா.சகீர்தன் | திகோ/ தம்பிலுவில் மத்திய ம. வித்தியாலயம் | திருக்கோவில் | 01 |
| 01 | பாவோதல் | செல்வி. ஜெ.அகஸ்திகா | திகோ/ கோமாரி மெ.மி.த மகா வித்தியாலயம் | பொத்துவில்-த | 02 |
| 01 | பாவோதல் | செல்வன். கி.சுவீர்த்தனன் | திகோ/ ஶ்ரீஇராமகிருஸ்ண கல்லூரி, அக்கரைப்பற்று | ஆலையடிவேம்பு | 03 |
| | | | | | |
| 02 | பாவோதல் | செல்வி. ஜெ.ஜனாளினி | திகோ/ தம்பிலுவில் சரஸ்வதி வித்தியாலயம் | திருக்கோவில் | 01 |
| 02 | பாவோதல் | செல்வி. சி.இந்துஜா | திகோ/ திருநாவுக்கரசு த.ம வித்தியாலயம் | ஆலையடிவேம்பு | 02 |
| 02 | பாவோதல் | செல்வி. ச.திசாந்தினி | திகோ கோமாரி மெ.மி.த.ம வித்தியாலயம் | பொத்துவில்-த | 03 |
| | | | | | |
| 03 | பாவோதல் | செல்வி.ஜீ.பிரணித்தா | திகோ/ தம்பிலுவில் மத்திய ம. வித்தியாலயம் | திருக்கோவில் | 01 |
| 03 | பாவோதல் | செல்வி.கு.கிளாரி | திகோ/ கோமாரி மெ.மி.த மகா வித்தியாலயம் | பொத்துவில் -த | 02 |
| | | | | | |
| 03 | கட்டுரைவரை | செல்வி. தி.அமிர்தவர்ஷினி | திகோ/ பொத்துவில் மெ.த.ம வித்தியாலயம் | பொத்துவில் த | 01 |
| 03 | கட்டுரைவரை | செல்வி. தே. நிலக்ஷினி | திகோ/ கோமாரி மெ.மி.த மகா வித்தியாலயம் | பொத்துவில் -த | 02 |
| 03 | கட்டுரைவரை | செல்வி. தெ.கிஷானி தெய்வேந்திரதாஸ் | திகோ/ ஶ்ரீ இராமகிருஸ்ண கல்லூரி, அக்கரைப்பற்று | திருக்கோவில் | 03 |
| | | | | | |
| 04 | கட்டுரைவரை | செல்வி. உ.கஜனி | திகோ/ கோமாரி மெ.மி.த மகா வித்தியாலயம் | பொத்துவில் -த | 01 |
| 04 | கட்டுரைவரை | செல்வி. ட.டினிஸ்காந்தினி | திகோ/ பொத்துவில் மெ.த.ம வித்தியாலயம | பொத்துவில் -த | 02 |
| 04 | கட்டுரைவரை | செல்வி. க.லிதுர்ஷனா | திகோ/ தம்பிலுவில் மத்திய ம. வித்தியாலயம் | திருக்கோவில் | 03 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"கண்ணகி காவடிப் பாடல்கள்"
**செல்வி. அகஸ்யா தேவதாஸ்.**



சிறப்புரை: "மாதர்க்கு அணி"
**தமிழருவி த. சிவகுமாரன்.**
(ஸ்தாபகர் - செயலாளர், வவுனியா தமிழ்ச் சங்கம்)





நாட்டிய நாடகம் – தம்பிலுவில் ம.ம.வி மாணவிகள்.
"நளவெண்பா சுயம்வர காண்டம்"
நெறியாள்கை : **திருமதி. மதிவதனி பாலேந்திரகுமார்.** (நடன ஆசிரியை, தம்பலுவில் ம.ம.வி)



மனன, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசு வழங்கல்.





நன்றியுரை
**திரு.மு. புவிதாசன்** (தாதிய மேற்பார்வையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவலன் அரங்கில் அவையோர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கண்ணகி கலை இலக்கிய விழா-2014

**03, ஆகஸ்ட் 2014 ஞாயிற்றுக்கிழமை, மூன்றாம் நாள் காலை**

**காலை அமர்வு மு.ப 09.20 - 01.30**

**ஆய்வரங்கு** : "கண்ணகி வழக்குரைக் காவியம்"
**இடம்** : தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.
**அரங்கு** : **"இளங்கோவடிகள்"** அரங்கு.
**தலைமை** : பேராசிரியர் சி. மௌனகுரு

## அதிதிகள்



முதன்மை அதிதி
**வைத்திய கலாநிதி. க.முருகானந்தன்.**
(கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்)



சிறப்பு அதிதி
**திரு. ஆர். சுகிர்தராஜன்.**
(வலயக் கல்விப் பணிப்பாளர், திருக்கோவில்)



சிறப்பு அதிதி
**திரு. பா.பரமேஸ்வரன்.**
(பிரதி அதிபர், ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு).




சிறப்பு அதிதி
**திருமதி. யோகா யோகேந்திரன்.**
(மூத்த எழுத்தாளர்)



சிறப்பு அதிதி
**டாக்டர். திருமதி. தவமலர் கோகுலதாஸ்.**
(கால்நடை வைத்தியர், திருக்கோவில்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மங்கல விளக்கேற்றல்











வரவேற்புரை
**திருமதி. கலைவாணி பிரதீபன்**
(பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்)



அரங்க அறிமுகம்.
இணைப்பாளர் **திரு.சோ.பரஞ்சோதி.**
(அதிபர், சரஸ்வதி வித்தியாலயம், தம்பிலுவில்)



தலைமையுரை
**பேராசிரியர் சி. மௌனகுரு**




கண்ணகி வழக்குரைக் காவியம் பாடல் பற்றிய அனுபவப் பகிர்வு.
**திரு.க.தங்கத்துரை.**
(கப்புகனார், தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வரங்கத் தலைமையுரை



# கண்ணகி கலை இலக்கிய விழா – 2014

பேராசிரியர்.சி.மௌனகுரு

கண்ணகி இலக்கியங்களும், கண்ணகையம்மன் தெய்வ வழிபாட்டு முறைகளும் அதனோடு ஒட்டிய வசந்தன், கொம்புமுறி ஆகிய கலைகளும் கிழக்கு மாகாணப் பண்பாட்டின் முக்கிய அம்சங்களாகும்.

இவ் வகையில் கண்ணகி கதை கூறும் சிலப்பதிகாரக் காவியத்தினின்று, கதை அமைப்பிலும் உட்பொருட்களிலும் பலவிதங்களில் வேறுபட்டதான கண்ணகி வழக்குரை எனும் காவியமும் கிழக்கிலங்கைக் கண்ணகி அம்மன் கோயில்களில் படிக்கப்படும் உயிர் வாழும் காவியமாக இருந்து வருகிறது.

சடங்குமுறைகளோடும் பக்திப் பின்னணியோடும் இக் காவியம் நோக்கப்படுகிறது. எனினும் அது தனக்குரி காவிய அமைப்பையும் பாத்திர வார்ப்புகளையும் மொழி நடையையும் இலக்கிய நயத்தையும் கொண்டுள்ளது.

சிலப்பதிகாரம் தமிழகத்தில் அறியப்படாத காலம் ஒன்று இருந்தது. உ.வே சாமிநாதய்யர் அதனைப் பதிப்பிக்க முன்னர் அது சிறப்பதிகாரம் என்று வழக்கில் இருந்தது என்று ஒரு கதையுமுண்டு. உ.வே.சாமிநாதாய்யர் ஏட்டு வடிவில் இருந்த அதனை எழுத்து வடிவில் பதிப்பித்த பின்னர் அது அறிஞர் மத்தியில் அறிமுகமானது. அறிஞரும் கற்றோரும் மாத்திரம் அறிந்த சிலப்பதிகாரத்தை தமிழ் பொது மக்களுக்கு அறிமுகம் செய்தவர். ம.பொ. சிவஞானக்கிராமணியர் ஆவர். பின்னால் அது மு. வரதராசன். அ.கி. ஞானசம்பந்தன், ரா.பி. சேதுப்பிள்ளை, கலைஞர் கருணாநிதி போன்றோரால் பிரபல்யப்படுத்தப்படலாயிற்று. இன்று தமிழ்க் காப்பியமாக அது வலம் வருகிறது.

கண்ணகி வழக்குரை காவியமும், ஏட்டுப்பிரதியாக கிழக்கிலங்கைக் கண்ணகி அம்மன் கோயில்களில் படிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளது. இதனை எழுத்து வடிவில் கொணர்ந்தார் பண்டிதர் வி.சீ கந்தையா அவர்கள்.

கண்ணகி வழக்குரை சம்பந்தமான சில கட்டுரைகளை வித்துவான் FXC நடராசா, ம.சற்குணம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோர் எழுதிய போதும் பரவலாக இதனை ஆராய்ந்தோர் குறைவே. அரசரத்தினம் அவர்களின் ஆய்வு நூல் குறிப்பிடத்தக்க ஒன்று.

கண்ணகிவழக்குரையை ஒரு இலக்கியமாகக் காணும் முயற்சியே இவ் ஆய்வு அரங்கமாகும். ஆய்வு நெறிநின்று கண்ணகி வழக்குரையை அணுக இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்ணகி வழக்குரையின் காவியத் தன்மையினையும் அக்காவியத்தில் அமைந்துள்ள பாத்திரங்களின் வார்ப்பினையும் அதன் இலக்கிய நயத்தையும், அக்காவியம் கூறும் விஷேட செய்திகளான இசை, நடனம், போர்க்கலை, கப்பல் கட்டும் கலை என்பனவற்றையும் வெளிக்கொணர எண்ணியதன் விளைவே இவ் ஆய்வரங்காகும்.

இக்காவியத்தின் காவிய அமைப்பு பற்றியும் தமிழ் காவியமரபில் அதன் இடம் பற்றியும் கட்டுரை சமர்ப்பிக்கவுள்ளார் திரு. விநாயகமூர்த்தி அவர்கள். கண்ணகி வழக்குரையில் பாத்திரங்கள் எவ்வாறு வார்க்கப்பட்டுள்ளன என்று கூறவுள்ளார் திரு குணபாலசிங்கம் அவர்கள். கண்ணகி வழக்குரையின் இலக்கியநயம் பற்றி உரை நிகழ்த்தவுள்ளார் ரூபி வலன்டினா அவர்கள். அதிற் கூறப்படும் இசை, நடனம் பற்றிக் கூறவுள்ளார் பிரதீபன். அது கூறும் கப்பல் கட்டும் கலை, போர்க்கலை பற்றிக் கூறவுள்ளார் செல்வி. தங்கேஸ்வரி அவர்கள். இவர்களின் கட்டுரைகள் மூலம் நாம் கண்ணகி வழக்குரை சம்பந்தமான ஒரு சட்டகத்தை அறியமுடியும். வழிபாடாக அன்றி இலக்கியமாகவும் வரலாற்று ஆவணமாகவும் கண்ணகி வழக்குரையை அறியும் முயற்சி இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாவற்றிற்கும் முன்னால் புகழ் பெற்ற தம்பிலுவில் கண்ணகையம்மன் கோயில் கப்புகனார் தங்கத்துரை அவர்கள் தமது அனுபவங்களையும், கண்ணகை வழக்குரையைத் தாம் எவ்வாறு நோக்குகிறார் என்பதைக் கூறுவார்.

கண்ணகி வழக்குரையோடு உணர்வு பூர்வமாக வாழ்பவர்களும், அதனைப் புற நிலைநின்று பார்க்கும் ஆய்வாளர்களும் சங்கமிக்கும் ஆய்வரங்காக இது அமைகிறது. பொதுமக்களுக்கு அறிவுபூர்வமாக கண்ணகி வழக்குரை காவியத்தைக் கொண்டு செல்லும் முயற்சி இது.

இவ் ஆய்வுக் கட்டுரைகளின் தாரதம்மியங்களைக் கூற நாம் இங்கு இருவரை அழைத்துள்ளோம். ஒருவர் பேராசிரியர் செ.யோகராசா. மற்றவர் கலாநிதிப் பட்ட ஆய்வாளர் திருமதி. தயாகாந்தன் பல்கலைக்கழக ஆய்வாளர், வெளிஆய்வாளர் எனப் பல திறத்தினத்தினரும் பங்கு கொள்ளும் ஆய்வரங்கு இது.

வருடம் தோறும் கண்ணகிகலை இலக்கிய விழாவில் நடக்கும் ஆய்வரங்கில் இம்முறை நாம் கண்ணகி வழக்குரைக்குள் ஆழமாகச் செல்ல இருக்கிறோம்.

## நினைவில் அகலா நெடுமால்

**அமரர் க. ஆறுமுகம்**




**21.09.1949 - 21.02.2015**

நண்பர் அமரர் ஆறுமுகத்துடனான எனது முதல் சந்திப்பு 1962 இல் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாயத்தில் (தற்போதைய கிழக்குப் பல்கலைக்கழகக்கட்டிடம்) நிகழ்ந்தது. நான் பொத்துவில் மெதடிஸ்தமிஷன் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்று வரும்போது ஆறுமுகம் ஏற்கனவே கன்னங்குடாவிலிருந்து புலமைப்பரிசில் பெற்று வந்து விடுதியில் தங்கிப் படித்துக்கொண்டிருந்தார். எமது நட்பும் உறவும் அவர் மரணிக்கும்வரை அரைநூற்றாண்டினைக் கடந்தது.

கண்ணகி கலை இலக்கிய விழாவுக்கான கால்கோள் இட்டதில் அவருக்கும் பங்கு உண்டு. 2011 ஜூன் 18, 19ம் திகதிகளில் முதலாவது கண்ணகிகலை இலக்கிய விழா அதாவது "கண்ணகி இலக்கியவிழா 2011" மட்டக்களப்பு மகாஜனக் கல்லூரியிலே நடைபெற்றபோது அதன் தொடக்கவிழாவில் கண்ணகி இலக்கியவிழாக் குழுப் பொருளாளராக வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவுக்கு நிதி சேகரிப்பதற்காகத் தனது உடல் நிலையையும் பொருட்படுத்தாமல் எம்மோடு பாணமை வரை பயணம் செய்தார். பின் கண்ணகி கலை இலக்கியக் கூடல் அமைப்பு உருவானபோது அதன் துணைத்தலைவர்களில் ஒருவரானார். தன் வாழ்நாளில் சிறந்த கலை இலக்கிய சமூகச் செயற்பாட்டாளனாகத் திகழ்ந்தார். கண்ணகி கலை இலக்கிய கூடல் அவரது மறைவினைப் பாரிய இழப்பாக எதிர்கொண்டது. கண்ணகி இலக்கிய விழாப் பட்டயத்திற்கு அமைவாக ஆண்டுதோறும் கண்ணகி கலை இலக்கிய விழா நடைபெறும்வரை அமரர் ஆறுமுகமும் எமது நெஞ்சை விட்டகலா நெடுமாலே.


**செங்கதிரோன் த. கோபாலகிருஸ்ணன்**
தலைவர்
கண்ணகி கலை இலக்கியக் கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை I

# கண்ணகி வழக்குரைக் காவியத்தின் காவிய அமைப்பு



ஆய்வாளர். சி.விநாயகமூர்த்தி
உதவிக்கல்விப்பணிப்பாளர் (தமிழ்மொழி), வலயக்கல்வி அலுவலகம், திருக்கோவில்

ஆய்வு என்பது இன்று எல்லாத்துறைகளிலும் ஊடுருவி வியாபகம் பெற்றுள்ளது. உலக மக்களின் வாழ்வியல் வளர்ச்சிப்படிகளின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆய்வு அடிநாதமாய் இருந்து வந்துள்ளது. தேடித் தேடி மனதைத் தொலைத்து விடுகின்ற அளவுக்கு ஆய்வுப் பயணங்களும் நீண்டு செல்கின்றன. ஆய்வு என்ற தமிழ்ச்சொல்லுக்கு அகலம், அழகு, ஆராய்தல், நுட்பம், வருத்தம் என பல பொருள் உண்டு. ஆராய்ச்சி, ஆராய்தல், ஆராய்வு, ஆகிய வேறு சொற்களும் ஆய்வு எனும் சொல்லுக்கு மாற்றுச் சொல்லாக வழங்குகின்றது. பார்த்தல், உற்றுக்கவனித்தல், தேர்ந்து தெளிதல், ஊகத்தை மெய்ப்பிக்க முயலுதல், உண்மையைக் கண்டறிய முயலுதல், மனித அறிவுக்கு மேலும் வழிகோலுதல் என்றெல்லாம் பலவாறாக ஆய்வுக்கு விளக்கமளிக்கப்படுகிறது. இன்று இந்த ஆய்வுக் கதிர் கண்ணகி வழக்குரையின் மீது பதிந்துள்ளது. கண்ணகி வழக்குரை காவியத்தின் காவிய அமைப்பு எத்தகையது அதாவது கண்ணகி வழக்குரை காவியத்தில் எந்தளவுக்கு காவிய அமைப்பு இடம்பெற்றுள்ளது என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கம்.

**காவியம் என்றால் என்ன?**

வடமொழி இலக்கிய மரபைத் தழுவி தமிழில் எழுந்த இலக்கிய வடிவங்களுள் காவியமும் ஒன்று. வடமொழியில் காவியம் என்ற சொல்லே தமிழில் காப்பியம் என வழங்குகின்றது. கவிதையால் அல்லது தொடர்நிலைச் செய்யுளால் பாடப்படுவன எல்லாம் காவியம் என பொதுவாகக் கூறப் பெறுகின்றது. காப்பிய ஆசிரியர்களின் கருத்துப்படி கடவுள் வாழ்த்து முதலாக தன்னிகரில்லாத தலைவனை மையமாக வைத்து அவனது நாடு, நகர், பிறப்பு, வளர்ப்பு வீரச்செயல்கள் முதலியவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் பயக்கக் கூறுவது பெருங்காப்பியமாகும். தமிழ்மொழியில் எழுந்த காப்பியங்களில் ஐந்திணைப் பெருங்காப்பியம் என்றும் ஐந்திணை சிறுகாப்பியம் என்றும் வகைப்படுத்திக் கூறுவது மரபு, இவ்வகையுள் அடங்காத சிறந்த காப்பியங்களும் எழுந்துள்ள, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி ஆகியன பெருங்காப்பியங்களாகவும் சூளாமணி, யசோதரகாவியம், உதயணகுமார காவியம், நீலகேசி, நாக குமார காவியம் என்பன சிறுகாப்பியங்களாகவும் வகைப்படுத்தப்பெற்றுள்ளன.

**காவிய இலக்கணம்**

காவியம் என்றால் என்ன என்பது பற்றி விதி முறைகள் கூறும் இலக்கண நூல்களும் தமிழில் எழுந்துள்ளன. வடமொழித் தண்டி நூலை ஒட்டி தமிழில் முதலாவதாக கி.பி 8ம் நூற்றாண்டில் தண்டியலங்காரம் என்ற காவிய இலக்கண நூல் காவியங்களில் இயல்புகள் பற்றி தெளிவாக கூறின. தொடர்ந்து பன்னிரு பாட்டியல் (கி.பி 9 - 10), வெண்பாப் பாட்டியல் (கி.பி 12 - 13), நவநீதப்பாட்டியல் (கி.பி 13 - 14), மாறனலங்காரம் (கிபி 15-16), சிதம்பரப்பாட்டியல் (கி.பி 15 - 16) ஆகிய தமிழ் நூல்களில் காவிய இலக்கணம் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

இவற்றில் தண்டியலங்காரம் என்ற காவிய இலக்கண நூலே முதலாவதாகவும் தெளிவான தாகவும் காவிய இயல்புகள்பற்றி விளக்கங்களை கூறின. இந்நூலில் பின்வரும் பாடலில் காவிய இலக்கணம் தெளிவாக கூறப்பெற்றுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்காப்பிய நிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றில் ஒன்று
ஏற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகடல் நாடு வளர்நகர் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்று இனையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல் கலவியிற் களித்தலென்று
இன்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியில் தொடர்ந்த சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப

வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்பவற்றில் ஒன்றோ பலவோ முதலில் இடம் பெற்றும் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பொருள் பயக்கும் நடையினை உடையதாய் தன்னிகரில்லாதத் தலைவனைப் பெற்று மலை கடல், நாடு, நகர், பருவம், சூரியோதயம், சந்திரோதயம் முதலிய வருணனைகள் அமைந்து, புனல் விளையாடல், கள்ளுண்டுகளித்தல், மக்களைப் பெறுதல், புலவியில் புலத்தல், கலவியில் களித்தல் முதலியன புனையப் பெற்று மந்திரம், தூது, செலவு இகல் வென்றி என்ற ஐந்தும் சந்தி என்னும் நாடக உறுப்பே போலத் தொடர்ந்து கூறப் பெறுவதாய் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் ஆகியவற்றில் ஏதேனுமொரு பகுப்பினைப் பெற்றுக் கேட்போர் விரும்பித் தொடர்ந்து கேட்கும் வண்ணம் கற்றோரால் இயற்றப் பெறுவது பெருங்காப்பியமாகும்.

இச்செய்யுளில் கூறப்பெற்றுள்ள இலக்கணங்களுக்கு அமைவாக இயற்றப் பெற்றவை பெருங்காப்பியங்களாகும். மேற்சொல்லப் பெற்ற காப்பிய உறுப்புக்களில் சில குறைந்து வந்தாலும் அவை பெருங்காப்பியமேயாகும். சில உறுப்புக்கள் குறைதல் என்பது அறம், பொருள், இன்பம், வீடு, என்ற நாற்பொருளில் அன்று வருணனைகளில் சில குறைந்து வருதலாகும். அதாவது

கூறிய உறுப்பிற் சில குறைந்தியலினும்
வேறு பாடின்றென விளம்பினர் புலவர்

ஆனால் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற் பொருளில் ஒன்றோ பலவோ குறைந்து வருவது காப்பியம் ஆகும். காப்பியம் என்ற சொல்லே பிற்காலத்தில் சிறுகாப்பியம் என மருவிற்று. தண்டியலங்காரத்தின்படி காப்பிய இலக்கணங்கள் யாவும் அமையப்பெற்றிருப்பது பெருங்காப்பியம் என்றும் நாற் பொருளில் ஏதாவது குறைவு படுவது காப்பியம் என்றும் வகைப்படுத்தப்பெற்றுள்ளது. எனவே பெருங்காப்பியம் தவிர்ந்த ஏனையவை காப்பியம் என்ற வகையில் அடங்கும்.

அறமுதனான்கினுங் குறைபாடுடையது
காப்பியம் என்று கருதப்படுமே
என்பது நூற்பா

எனவே "சிறுகாப்பியம்" என்ற சொற்பிரயோகம் பிற்கால வழக்கில் இணைந்து கொண்டதெனலாம். எது எவ்வாறு இருப்பினும் பெருங்காப்பியம், காப்பியம் அல்லது சிறுகாப்பியம் என்பதெல்லாம் தமிழில் எழுந்த காப்பியங்கள் என்பது தெளிவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகி வழக்குரை எந்தளவுக்கு காவிய அமைப்புடையது என்பதே எனது ஆய்வுப் பணியாகும். இதன் காவிய அமைப்பை நோக்குவதற்கு முன்பாக கண்ணகிவழங்குரை என்றால் என்ன என்பதை முதலில் நோக்கவேண்டியுள்ளது.

**கண்ணகி வழக்குரை**

கண்ணகி வழக்குரை என்பது இலங்கையில் யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் (கி.பி 1250 - 1620 ) எழுந்த ஓர் பொதுமக்கட் சார்பு இலக்கியமாகும். கோவலன் கண்ணகி என்போரது வாழ்க்கை வரலாறு இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியதில், சில நீக்கங்களுடனும் பல பதிய புனைந்துரைப்புக்களுடனும் யாக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் கண்ணகி வழக்குரை என்றும், யாழ்ப்பாணத்தில் கோவலனார் கதை என்றும் முல்லைத்தீவுப் பகுதியில் சிலம்பு கூறல் என்றும் இந்நூல் அழைக்கப்படுகிறது.

இதன் ஆசிரியர் யார் என்பது இன்னும் ஆய்வுக்குரிய ஒன்றாக உள்ளது ஐந்தாம் செகராசசேகரனால் இயற்றப்பட்டது என்ற கருத்தும் நிலவுகின்றது. சகவீரன் என்பவரே கண்ணகி வழக்குரையை எழுதினார் என்று பல நூற் பிரதிகளில் காணப்படுகின்றன. இந்நூலின் பதிப்பாசிரியர் வீ.சி.கந்தையா காங்கேயன் என்பவர்தான் நூலாசிரியர் என்றும் கூறியுள்ளார். சிலர் பதிப்பாசிரியரை நூலாசிரியர் என்று தவறாகப் புரிந்து கொண்டும் உள்ளனர் அதாவது வீ.சி.கந்தையா கண்ணகி வழக்குரையின் ஆசிரியர் என்ற தப்பபிப்பிராயமும் நிலவுகிறது. போர்துக்கேயரால் சிறைப் பிடிக்கப்பட்ட வெற்றிவேற்சட்டம்பியார் இதைப்பாடினார் என்ற கருத்தும் நிலவுகின்றது. தவிர ஆரியர்கோன், அதியரசன், தேவையர்கோன் முதலான பெயர்கள் நூலாசிரியரை குறிப்பதாக ஊகிக்க இடமுண்டு. புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் கூற்றுப்படி இராமநாதபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டு ஈழத்திலே குடியேறி மட்டக்களப்பில் வாழ்ந்த காங்கேசன் என்ற ஒரு புலவர் இந் நூலைப்பாடி இருத்தல் கூடும் என்பதும் சிந்திக்கத்தக்கது.

கண்ணகி வழக்குரை வரம்பெறு காதை முதல் குளிர்ச்சி காதை வரை 11 பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது கோவலன் பிறந்த கதை, அம்மன் பிறந்த கதை, கப்பல் வைத்த கதை(மீகாமன் காதை), கடலோட்டு காதை, மணி வாங்கின காதை முதலான கதை அமைப்புக்கள் சிலப்பதிகாரத்தில் இல்லாதவை அதேபோன்று வஞ்சிக்காண்டமும் (ஏனையவை புகாரக் காண்டம், மதுரைக்காண்டம்) வழக்குரைகாதையில் இடம் பெறவில்லை எனினும் கதைக்கரு எல்லாநூல்களிலும் ஒன்றாகவே உள்ளது.

**காவிய இலக்கணத்திற்கு கண்ணகி வழக்குரை அமைந்துள்ளதா?** இல்லை

**மீறப்பட்டுள்ளதா?** ஆம்

**மீறப்பட்ட விதம்**

(01) காப்பிய ஆசிரியர் யார்?

(02) தன்னிகரில்லாத் தலைவன் யார்?

(03) அறம்,பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருள் கூறப்பட்டதா?

(04) காவிய அமைப்பு - பெரும் பிரிவு உபபிரிவுகள் கூறப்பட்டதா?

(05) காப்பிய நாயகன் நாயகி உறவும் புதல்வரை பெறுதலும் கூறப்பட்டதா?

(06) பிற காப்பிய இலக்கணங்கள் இடம் பெற்றுள்ளனவா?

**வழக்குரை காதையின் சிறப்பம்சங்கள்**

(01) கவித்துவச் சிறப்பு

(02) அழகியல் உணர்ச்சி

(03) ஓசை நயம்

(04) பக்கி உணர்ச்சி

(05) துன்பியல் உணர்ச்சி

(06) பிரதேச வழக்கு

மேற் கூறிய காவிய இலக்கண நூல்களிலே சொல்லப்பட்ட விதிமுறைகளை அளவு கோலாகக் கொண்டே காவியம் என்றால் என்ன? என்பதை அளந்து பார்க்க வேண்டியுள்ளது. எனது சிற்றறிவுக் கெட்டியவரையில் மேற்சொன்ன காவிய இலக்கண நூல்களைத் தவிர தமிழ்மொழியில் காவியம் என்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? என்பது பற்றி விதிமுறைகள் கூறிய நூல்கள் எழுந்ததாகத் தெரியவில்லை. ஆக காவிய இலக்கணங்கள் கண்ணகி வழங்குரையில் உண்டா? என ஆராய்கின்றபோது சில பண்புகளிலே கண்ணகி வழக்குரை விலகி நிற்பதை அறியலாம்.

கண்ணகி வழக்குரை ஈழத்தில் எழுந்த சிறந்த தமிழ் இலக்கியம் என்பதில் ஐயமில்லை. கிழக்கிலங்கையிலும்சரி வடஇலங்கையிலும் சரி கண்ணகி வழிபாட்டின் கருவூல மாகவும் தமிழர் தம் பண்பாட்டின் அடையாளமாகவும் இந்நூல் போற்றப்படுவதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இக்கட்டுரையின் நோக்கம் இந்நூல் எந்தளவுக்கு காவியப்பண்புகள் கொண்டுள்ளன என்பதே ஆகும். கட்டுரையில் தலைப்பு காரணமாக சில கருத்துக்களை கூறவேண்டிய கடப்பாடு உள்ளது.

தமிழ் மொழியிலும் சரி, பிற மொழிகளிலும் சரி நூல்கள் எந்தளவுக்கு பிரபலம் பெற்றுத் திகழ்கின்றனவோ? அந்தளவுக்கு நூலாசிரியரும் பிரபலம் பெற்று விடுவார். இன்னும் ஒரு படி மேலாகக் கூறினால் நூலாசிரியரே உலகப் புகழும் பெற்றுவிடுவார் கிரேக்கத்தில் ஹோமர், இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியர், தமிழில் கம்பர் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். தமிழ் இலக்கிய உலகில் கம்பனைப்போல், இளங்கோவைப் போல், திருத்தக்க தேவரைப் போல் வீரமாமுனிவரைப் போல் காப்பிய ஆசிரியர்களைக் காண்பது அரிது. இந்தவரிசையில் கண்ணகி வழக்குரையின் ஆசிரியர் யார் என்று அறுதியிட்டுக் சுறமுடியாமல் இருப்பதும், பல கண்ணகி கோவில்களிலே இருந்த ஏட்டுச் சுவடிகளைத் தேடிக்கண்டெடுத்து தொகுக்கப் பெற்ற தொகுப்பு நூலாக இருப்பதும், அந்தந்தப் பகுதிகளிலே வாழ்ந்த கவியாற்றல் மிக்க கவிஞர்கள் பலரது கற்பனைகளின் தொகுப்பாக இருக்கின்றதுமான கண்ணகி வழக்குரையை எவ்வாறு காவியம் என்று கருதலாம்.தவிர இளங்கோவடிகளின் சிலப்பதிகாரக் காப்பியத்தின் தழுவலாக அமைந்திருப்பதும் சிந்திக்கத்தக்கது.

பண்டைய காலத்தில் சிறிய செய்யுள் பகுதியொன்றை இயற்றி விட்டு அதற்கு காவியம் என்று பெயர் சூட்டுகின்ற நிலையும் இருந்துள்ளது. உதாரணமாக: மழைக்காவியம், ஊர்சுற்றுக்காவியம், முத்துமாரியம்மன் காவியம் போன்ற இன்னும் பல சிற்றிலக்கிய வடிவங்களையும் காவியம் என்ற பெயர் சூட்டி தகுதி வழக்குப்போல் அழைக்கின்ற மரபும் இருந்து வந்துள்ளது. இந்த அருட்டுணர்வினால் கண்ணகி வழக்குரைக்கும் காவியம் என்ற சிறப்புப்பெயர் அல்லது பொதுப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்றும் எண்ணத்தோன்று கின்றது.

செய்யுள் அமைப்புக்களைப் பார்க்கின்றபோதும் இன் நூல் பல கவிஞர்களின் ஆக்கம் என்பது புலனாகின்றது. சிலப்பதிகாரம் பெரும் பாலும் தொடர் நிலைச் செய்யுளாலும் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் என்பன பெரும்பாலும் விருத்தப்பாவாலும் இயற்றப்பட்டிருப்பது போல் கண்ணகி வழக்குரை தனி ஒரு செய்யுள் வகையால் இயற்றப்படவில்லை அதாவது அந்தாதித்தொடை, அகவல், வெண்பா, தாழிசை, விருத்தம் முதலான பல செய்யுள்களால் இயற்றப்பட்டிருப்பதும் இவற்றிலே கலிவிருத்தங்களை "நடை" என்றும், "நடைசாரி" என்றும், மற்றய சந்த விருத்தங்களை "சிந்து" என்றும் குறிப்பிடப்பட்டிருப்பதெல்லாம் இன் நூல் பல கவிஞர்களின் ஆக்கம் என்பதையே வெளிப்படுத்துகின்றது.

காப்பிய நாயகன் அல்லது பாட்டுடைத் தலைவன் காப்பியத்தின் உயிர் எனலாம். தன்னிகரில்லாத தலைவன் என்றே கதைநாயகன் அழைக்கப்படுவான். அவன் தனக்கு நிகரில்லாத வீரன். கோவலன் தன்னிகரில்லாத் தலைவனாகக் கருதப்படலாமா? என்பதும் வினாவுக்குரியது. தண்டியலங்காரம் கூறும் அறம், பொருள், இன்பம், வீடு பற்றியும் முழுமையாகக் கூறப்படவில்லை. காப்பியங்களின் அமைப்புக்களாகக் கூறப்படும் காண்டங்கள், காதைகள் அல்லது சருக்கங்களையும் முழுமையாகக் காணமுடியவில்லை

காப்பியத்தின் கதை உண்மைத் தன்மை வாய்ந்ததாகவும் மனிதனின் ஆழ்ந்த அனுபவத்தில் வேரூன்றி வெளிப் பட்ட தாகவும் இருத்தல் வேண்டும். கற்பனையாகச் சொல்லப்படும் கதைகள் காவியத்திற்கு உயிரோட்ட முள்ளதாக இருக்காது. வரம்பெறுகாதை, கப்பல்வைத்த காதை, கடலோட்டு காதை, பொன்னுக்கு மறிப்புக் காதை என்பன கற்பனைப் புனைவுகளாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

ஐம்பெருங் காப்பியங்களிலும், ஐஞ்சிறு காப்பியங்களின் வகைப்பாடுகளுள்ளும் அமையப் பெறாத சிறந்த பல காப்பியங்கள் தமிழ் மொழியில் உண்டென்பது பல தமிழ் அறிஞர்களின் கருத்து. இந்தவகையில் கம்பராமாயணம் கந்தபுராணம் என்பன மிகச்சிறந்த காவிய இலக்கணங்கள் கொண்ட நூல்களாகும். இவற்றிலே சித்திரிக்கப்படுகின்ற தன்னிகரில்லாத் தலைவர்களும் அவர்களோடு இணைத்துக் கூறப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம், பொருள், இன்பம் வீடு என்பனவும். இவைதவிர்ந்த கவித்துவச் செழுமை, அணிப்பிரயோகங்கள் முதலான காவியப்பண்புகளும் சிறந்த காவியங்களுக்கு முன் உதாரணமாகச் சொல்லக் கூடியவை இத்தகைய காவியப்பண்புகளோடு. நாம் கண்ணகி வழககுரையை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது எந்தளவுக்கு இந்நூல் காவியப்பண்புகளிலிருந்து விலகி நிற்கின்றது என்பது புலனாகும்.

தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றுள்ளன. கதை, காவியம், புராணம், பரணி, உலா, பிள்ளைத்தமிழ், தூது, பள்ளு, நாவல், சிறுகதை, கவிதை, நாடகம், பாட்டு முதலியன எல்லாம் இலக்கிய வடிவங்களே. ஆனால் ஒவ்வொன்றும் வெவ்வேறான அமைப்புக்களை அல்லது வடிவங்களை அல்லது விதிமுறைகளைக் கொண்டுள்ளன. விதிமுறைகளையே இலக்கணங்கள் என்கிறோம். குறித்த விதிமுறையில் தவறியவை அந்த வகையீட்டினுள் அடங்காது என்பது சங்ககாலத்து சான்றோர் முதல் இன்றுள்ள பேரறிஞர்கள் வரை பின்பற்றப்படுகின்ற ஓர் தமிழ் மரபு. செய்யுள் வகைகளுக்கும் இது பொருந்தும். ஒவ்வொரு செய்யுள் வகைக்கும் ஒவ்வொரு இலக்கணம் உண்டு. காவியம் என்ற இலக்கிய வடிவத்திற்கும் விதிமுறைகள் உண்டு. காவியங்களுடன் பரீட்சயம் உள்ளவர்கள். "கண்ணகிவழக்குரையைக்" கையிலெடுத்ததும் அது எந்தளவுக்கு காவிய இலக்கணங்கள் கொண்ட நூல் என்பதைப் புரிந்து கொள்வர்.

எனினும் கண்ணகி வழக்குரை ஈழத்தில் எழுந்த மிகச்சிறந்த பொதுமக்கட் சார்பு இலக்கியம் என்பது திண்ணம். ஏலவே கூறியது போல் கண்ணகி வழிபாட்டின் கருவூலமாக இது போற்றப்பட வேண்டியது. சமண முனிவர் சிலப்பதிகாரத்தில் சித்திரித்த பத்தினித் தெய்வத்திலும் பன்மடங்கு உயர்ந்து பிறவியிலேயே தெய்வீக அம்சங்களுடன் அவதரித்து பத்தினித் தெய்வமாக மிளிர்ந்த கண்ணகியையும் அத்தெய்வம் தெய்வீக ஆற்றலை இலங்கை முழுவதும் பரப்பியதற்கும், அனேக அடியார்களின் குல தெய்வமாக கண்ணகை அம்மன் போற்றப்பட்டதற்கும் மூலகாரணம் கண்ணகி வழக்குரையே ஆகும்.

"நன்று புராணம் செய்தார் நல்ல கவிதைகள் தந்தார்" என்று பாரதியார் கூறுவதுபோல் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே கண்ணகி கோவில்கள் அமையப் பெற்ற கிராமங்களில் வாழ்ந்த கண்ணகி அம்மனின் அருட்கடாட்சம் கிடைக்கப் பெற்ற அற்புதக் கவிஞர்கள் பலர் இந்நூலைப் பாடியுள்ளனர் இக்கவிஞர்களிடத்து பண்பட்ட உள்ளமும், சீரிய அனுபவமும் இருந்ததென்பதை பாடல்களைப் படிக்குந்தோறும் விளங்குகின்றது. இந்த இடத்தில் ஒன்றைக் கூறவேண்டி உள்ளது. கிழக்கிலங்கை கண்ணகி கோவில்களிலே "கண்ணகி வழக்குரை பாடப்படுகிறது என்றால் இந்நூலின் முதலாவது கதையான வரம்பெறு காதையிலிருந்து பதின்மூன்றாவது காதைவரை பாடப்படுகின்றது என்பது அல்ல. பெரும்பாலும் இந்நூலில் பிற்சேர்க்கைகளாக இணைக்கப்பட்டிருக்கும் கண்ணகி அம்மன் குளுர்த்திப் பாடல்கள், கண்ணகி அம்மன் ஊர் சுற்றுக் காவியம் என்பனவே பாடப்படுகின்றன.

எனினும் "கண்ணகி வழக்குரை" நூல் முழுமையும் சிறந்த கவிதைகளாலியன்றுள்ளது. இதில் இடம்பெற்றிருக்கும் பாடல்கள் அனைத்தும் ஆற்றல் மிக்கவை. சாகாவரம் பெற்ற பாடல்களாக இன்று வரைக்கும் மக்கள் உள்ளங்களில் இடம்பிடித்துள்ளன. திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் எனப் பெருமைப் படுவதுபோல் கண்ணகை அம்மன் குளுர்த்திப் பாடல்களுக்கும் உருகாதவர்கள் யாரும் இருக்கமுடியாது. பக்தி நனி சொட்டச் சொட்டப் பாடப்படுகின்ற இப்பாடல்களால் பத்திப்பிரவாகம் இன்றும் கரைபுரண்டோடிக்கொண்டே இருக்கின்றது. ஊர்சுற்றுக் காவியத்தில் இருக்கின்ற அழகியல் உணர்ச்சிகளும் சமரசநோக்கும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உயரிய சிந்தனையும் இந்நூலின் பெருமையை உச்சிக்கு கொண்டு செல்கின்றது.

**அங்கணா மைக்கடவை காரேறு நகர்எருவில்**
**ஆனதம் பிலுவிலொடு வீரமுனை தன்னிலும்**
**பங்குசேர் பட்டிமேடு உயர்செட்டி பாளையம்**
**வந்தாறு மூலையொடு மற்றுமுள பதியும்**
**திங்கள்நேர் ஒத்தநுதல் எங்குமீ திற்பெரிய**
**தெய்வீக மென்னவிளை யாடியெப் பொழுதும்**
**எமக்குமாய் நிற்குமொரு பங்கமா தின்பெருமை**
**எந்தனா விற்கனவில் என்றுமக லாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியொடு தொழுவோர்கள் இடரகல வருள்கொண்டு
பண்டுசெறி தம்பிலுவில் பட்டிமா நகரம்
மொய்த்தபுகழ் வீரமுனை கல்முனைகல் லாறு
மகிழூர்செட்டி பாளையம் எருவில்மண் முனையூரும்
வைத்தமகி ழடிச்சோலை முதலைக் குடா
வளமைவரு புதுக்குடி நகரமொடு வந்தாறுமூலை
இத்தனை தலங்களிலும் அங்கணா மைக்கடவை
எனவந்து காரைநகர் இனிதிருந் தவளே.

பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை
பவிசுபெறு கல்முனைகல் லாறுமகி ழூரெருவில்
செட்டிபா ளையம்புதுக் குடியிருப்பு மண்முனை
செல்வமுத லைக்குடா கொக்கட்டிச் சோலை
அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை
அன்பான சிற்றாண்டி நகரதனில் உறையும்
வட்டவப் பூங்குழல் மண்முனைக் கண்ணகையை
மனதினில் நினைக்கவினை மாறியோ டிடுமே.
(ஊர் சுற்றுக்காவியம்)

இதுபோன்று இந்நூலில் காணப்படும் பக்தி உணர்ச்சி ஆன்மிக சிந்தனைகள் ஊழ்வினைக்கருத்துக்கள் துன்பியல் உணர்ச்சி, கலையம்சங்கள் முதலாவை எல்லாம் தனித்தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டிய விடயங்கள். சமுத்திரத்திலே அமிழ்ந்து முத்தெடுப்பது போல் கண்ணகி வழக்குரையாகிய சமுத்திரத்திலே அமிழ்ந்து ஆயிரக்கணக்கான முத்துக்களை எடுக்கலாம். தமிழ்மொழியின் பல் தர ஆற்றல்களையும் வெளிப்படுத்தக்கூடிய உண்மைகள் இதிலே மறைந்து கிடக்கின்றன. இந்நூல் ஒரு காவியமா எனப்பார்ப்பதை விடுத்து, ஒரு காவியம் என பூசிமெழுகி நிரூபிப்பதை விடுத்து இப்புனித நூல் தந்த படிப்பினைகள் எவை?, மக்கள் வாழ்வை இந்நூல் எந்தளவுக்கு வளமூட்டியிருக்கின்றது?, எந்தளவுக்கு வளமூட்டவல்லது?, தமிழர் தம் பண்பாட்டிலே இதன் பெறுமாணம் என்ன? என்பது போன்ற பார்வைகள் மேலும் பயன் விளைவிப்பனவாய் அமையும்.

**முடிவுரை:**

காவிய இலக்கணம், காவிய ஆசிரியர், செய்யுள் வகைகள், தொகுக்கப் பெற்ற விதம் என்பவை தொடர்பாக பார்க்கின்ற போது இந்நூலை காவியமாகக் கருதமுடியாது. கவித்துவச்சிறப்பு அணிப்பிரயோகங்களின் கையாட்சி, பொதுமக்கட் சார்பு அவர்களை ஈர்த்துக்கொண்ட தன்மை சாதாரண மக்களின் வாழ்வியல் அனுபவங்களை புலப்படுத்தும் விதம் மக்கள் வாழ்வை விட்டு நீங்காத தன்மை முதலானவைகளின் அடிப்டையில் பார்க்கின்ற போது "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" போல் நெஞ்சை அள்ளும் கதையாக இது திகழ்கின்றது. தமிழ்த்தாய்க்கு கவிதையாலே மணிமகுடம் சூட்டிய நூல்களின் வரிசையிலே கண்ணகி வழக்குரையும் தமிழ் அன்னையை அலங்கரித்து நிற்கின்றது என்றால் அது மிகையாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை II



# கண்ணகி வழக்குரைக் காவியத்தில் பாத்திர வார்ப்பு

ஆய்வாளர் . திரு. வ. குணபாலசிங்கம்
(ஆசிரியர், கரடியனாறு ம.வி, மட்டக்களப்பு)

**1. அறிமுகம்:**

இலங்கையின் தமிழ் இலக்கியத் தடத்தில் கண்ணகி வழக்குரை முக்கிய பதிவாகின்றது. பொது மக்கள் மத்தியில் வழங்கி வந்த சிலப்பதிகாரக் கதைகளின் தாக்கத்தினால் உண்டான விளைவே கண்ணகி வழக்குரை ஆகும். இதனை தமிழறிஞர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

**'தமிழிலக்கியப் புலவர்களே சிலப்பதிகாரத்தை அறிந்தவர்கள். பொதுமக்கள் தாங்கள் பெற்ற செவிவழிச் செய்திக்கேற்பக் கண்ணகியின் கதையை பலவகையாகக் கூறிவந்தார்கள்"**

எனக்குறிப்பிட்டுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கதாகும். அதாவது சிலப்பதிகாரக் காவியத்திலிருந்து கண்ணகி வழக்குரை காவியம் விலகிச் செல்லுகின்ற தன்மை இதனாலேயே ஏற்பட்டிருக்ககூடும் என அறிந்து கொள்ளமுடிகின்றது.

கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள வழிபாடுகளுள் கண்ணகி வழிபாடு சிறப்பானது. இவ்வழிபாடுதான் கண்ணகி வழக்குரை காவியத்திற்கு மூலமாக இருந்திருக்க வேண்டும். கிழக்கிலங்கையிலுள்ள கண்ணகையம்மன் கோயில்களின் சடங்கு காலங்களில் கண்ணகி வழக்குரை காவியம் பாடப்படுவது வழமை. இவ்வழமையின் பின்புலத்தை ஆராயுமிடத்து கண்ணகி வழக்குரை காவியத்தின் உருவாக்கம் பற்றிய தெளிவினைப் புரிந்து கொள்ளமுடியும்.

கண்ணகி வழக்குரையின் ஆசிரியர் பெயர் பற்றி இந்நூலில் தெளிவான குறிப்புக்கள் ஏதும் கிடையாது. இருப்பினும் இந்நூலினுள் ஆங்காங்கே சில செய்யுள்களில் காணப்படும் குறிப்புகளைக் கொண்டு இந்நூலாசிரியரின் பெயரை ஓரளவிற்கேனும் ஊகித்துக் கொள்ள முடிகின்றது. இந்நூலின் கப்பல் வைத்த காதையில் வரும் ஐந்தாவது செய்யுளில் பாகை மன்னன், தேவைதருமாரீசன் என்றும் நூலாசிரியர் தன் பெயரை இக்காவியத்தில் குறிப்பிட்டுள்ளார். கலியாணக் காதையில் வரும் ஒன்பதாம் செய்யுளில் காங்கேசன் என்னும் குறிப்புள்ளது. மாதவி அரங்கேற்று காதையில் வரும் ஒன்பதாம் செய்யுளில் காங்கேசன், சகவீரன், தேவையர்கோன், குடிநயினாப்பணிக்கன் என்னும் குறிப்பும், பொன்னுக்கு மறிப்புக் காதையில் இரங்கிய காதல் என்னும் பகுதியில் வரும் மூன்றாவது செய்யுளில் சகவீரன் என்னும் பெயர் தவிர்ந்த ஏனைய பெயர்களைக் காணமுடிகின்றது. எனவே இந்நூலாசிரியருக்கு காங்கேசன் என்னும் பொதுப்பெயரும் சகவீரன், தேவையர்கோன், தேவைமாரீசன், குடினயினாப்பணிக்கன் என்னும் சிறப்புப் பெயர்களும் இருந்திருக்கக்கூடும் என்பது ஆய்விற்குரியது.

கண்ணகி வழக்குரை வரம்பெறு காதை முதல் குளிர்ச்சி காதை ஈறாக பதினொரு காதைகளையும் 2226 செய்யுள்களையும் கொண்டமையப் பெற்றுள்ளது. புகார் காண்டச் சம்பவங்களும், மதுரைக்காண்டச் சம்பவங்களும் இந்நூலில் விரவிக் காணப்படுவதுடன் வஞ்சிக் காண்டச் சம்பவங்கள் இடம் பெறவில்லை என்பது தெளிவு. இக்கண்ணகி வழக்குரை சிலப்பதிகாரத் தழுவலாயினும் சிலப்பதிகாரத்திலிருந்து மாறுபட்டுச் செல்லும் சில சம்பவங்களும் காணப்படுகின்றன. கோவலனார் பிறந்த கதை, அம்மன் பிறந்த கதை, மீகாமன் கதை, தூரியோட்டு, கப்பல் வைத்தல் கதை, வெடியரசன் போர், நீலகேசி புலம்பல், வீர நாரணன் கதை, மணிவாங்கின கதை, விளங்கு தேவன் போர், பொன்முறிப்புக் கதை முதலியன அடங்கும். குறிப்பாக கண்ணகி வழக்குரையில் இடம் பெறும் வரம் பெறு காதை, குளிர்ச்சிக் காதை,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கப்பல் வைத்த காதையின் இலங்கைச் சம்பவங்கள் முதலியன சிலப்பதிகாரத்திலிருந்து கண்ணகி வழக்குரையை தனித்துவமுடையதோர் இலக்கியமாக கணிக்க உதவுகின்றன. கண்ணகி வழக்குரை காவியத்தின் பாத்திரப் படைப்புகள் பற்றிய புரிதல்களை வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

## 2. கண்ணகி வழக்குரையும் பாத்திரவார்ப்பும்

ஒரு இலக்கியம் புனையப்படும் போது அவ்விலக்கியத்தின் முழுமைக்கு வலுச்சேர்ப்பவை அதில் உருவாக்கப்படும் பாத்திரப் படைப்புகளாகும். கதைக்கரு, கதைக்கான காலச்சூழல், கதையை நகர்த்திச் செல்லல் முதலிய அடிப்படைகளை வைத்துக் கொண்டே பாத்திரங்கள் உருவாக்கப்படுவது வழமை. இவ்வகையில் கண்ணகி வழக்குரை ஆசிரியர் தமது காவியத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். இதில் ஆரம்பம் முதல் நிறைவு வரை பாத்திரங்களை அறிமுகம் செய்யும் முறையும், அவைகளின் பொருத்தப்பாடும் நோக்கத்தக்கது.

கண்ணகி வழக்குரை காவியத்தில் கதைக்களத்திற்கு ஏற்றாற் போல் பாத்திரங்களை பிரதான பாத்திரங்கள், துணைப்பாத்திரங்கள் என வகைப்படுத்தி நோக்குதல் பொருத்தம். இவ்வகையில் பிரதான பாத்திரங்களாக கண்ணகி, கோவலன், மாதவி, பாண்டிய மன்னன் ஆகியோரையும் துணைப்பாத்திரங்களாக கண்ணகியின் தந்தை மாநாகர், கோவலனின் தந்தை மாசாத்துவான், பாண்டிய மன்னனின் மனைவி கோப்பெருந்தேவி, மாதவியின் தாய் சித்திராபதி, மாதவியின் தோழி வயந்தமாலை, கண்ணகியின் சிலம்பிற்கு நாகமணியைப் பெறும் பொருட்டு அறிமுகமாகும் மீகாமன், வெடியரசன், நீலகேசி, வீரநாரணன், விளங்கு தேவன், அதியரசன் அவனது மனைவி வருணவல்லி, திரைசேர் மடந்தை, நாகராசன், மகாநாகம் முதலியோர்களையும், சினேந்திரன், விஞ்சையன், மாதரி, செய்கருமம் பொருட்டான பாத்திரங்களாக கம்மாளர், தட்டார், சோதிடர், வேதியர், கணிதர், பணிக்கர் முதலியோரையும், மேகநாதன் எனப்பெயர் கொண்ட யானையினையும் கண்ணகி வழக்குரையின் பாத்திரங்களாகக் கொள்ளமுடியும்.

### 2.1. கண்ணகி

கண்ணகி வழக்குரை காவியத்தின் பிரதான பாத்திரங்களில் முதன்மையானதும், மூலமானதுமான பாத்திரமாக இனங்காணப்படுவது கண்ணகி பாத்திரமாகும். கண்ணகி வழக்குரையில் கண்ணகி என்னும் பாத்திர உருவாக்கம் அவதானத்திற்குரியது. மாங்கனியில் இருந்து பிறந்தவள், பின்னாளில் வரப்போகும் அனர்த்தம் உணர்ந்து பேழையில் வைத்து ஆற்றில் இடப்பட்டவள். மாநாகரின் வளர்ப்பு மகள். கண்ணகியின் பிறப்பு ஒரு மாங்கனியில் இருந்து தொடங்குகின்றது. கண்ணகி வழக்குரை ஒரு வழிபாட்டு நூல் என்ற வகையில் அதன் ஆசிரியர் கண்ணகியை ஆரம்பம் முதலே தெய்வத்தின் அம்சமாகக் காட்டியிருப்பது ஆச்சரியத்திற்குரியதன்று. அதாவது சிலப்பதிகாரம் பாடவந்த இளங்கோவடிகள் கண்ணகி என்னும் பாத்திரத்தை படைத்த நோக்கத்திற்கும் வழக்குரையாசிரியர் கண்ணகி என்னும் பாத்திரத்தைப் படைத்த நோக்கதிற்கும் இடையில் வேறுபாடுகளுண்டு. இளங்கோவின் கண்ணகி இலக்கியக் கதாநாயகி, காங்கேசனின் கண்ணகி வழிபாட்டுக்குரிய பத்தினித் தெய்வம்.

வழக்குரை ஆசிரியர் கண்ணகியின் பாத்திரப் படைப்பை சராசரி வாழ்க்கை நடாத்தும் ஒரு பெண்ணில் இருந்து அவளை வேறுபடுத்திக் காட்ட முனைவதனை அவதானிக்க முடிகின்றது.

கண்ணகி வழக்குரையில் மாதவி அரங்கேற்றற் காதையில் கோவலன் மாதவியை அடைவதற்குரிய முத்து மணிமாலை யானை மீது வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுகின்றது. அம்மாலையை வாங்குவது வணிக குலத்தவருக்குப் பெருமை எனும் கருத்து நிலவியது. கண்ணகியும் அவ்வாறே தனது குலப்பெருமையை வெளிப்படுத்த காட்டிய ஆர்வம் ஈண்டு நோக்கத்தக்கது. அவள் மனம் மகிழ்ந்து

**என்ன தவஞ் செய்தேனென் றெழில் பரப்பும் பாளைகளும்**
**பொன்னிலங்கு நிறைகுடமும் பொருத்த வைத்துப் பூமாரி**
**கன்னமுறப் பொழிந்திடவே கற்பூரத்தால் வலம் பெறவே**
**அன்ன நடைத் தோழியர்கள் ஆலாத்தி ஏந்தி நின்றார்** (செ. 326)

அதாவது மாலை ஏந்திய யானை வலம் வரும் போது, கண்ணகி தன் வீட்டு வாசலில் நிறை குடம் வைத்து கற்பூர விளக்கேற்றி, ஆலாத்தி ஏந்தி அதனை வரவேற்று நின்றாள். வணிக குலத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமை தூக்க தன் கணவனையே தியாகம் செய்கின்றாள். இத்தனைக்கும் திருமணமாகி நான்கே நாட்கள் கழிந்த நிலையில் இச்சம்பவம் நிகழ்கின்றது. இது சராசரி வாழ்வியலில் ஈடுபடும் பெண்களில் இருந்து கண்ணகியை வேறுபடுத்திப்பார்க்க கண்ணகி வழக்குரை ஆசிரியர் மேற்கொண்ட உத்தியாகும்.

பொன்னுக்கு மறிப்பு எனும் காதையில் கண்ணகியின் பல்வேறு வகையான குணாம்சங்கள் வெளிப்படுகின்றன. மாதவிக்கு கோவலனால் அளிக்கப்பட வேண்டிய பொன் ஒரு நாள் கொடுபடத் தவறியமையினால் மாதவியின் தாய் சித்திராபதி அவளை வற்புறுத்துகின்றாள். அவளால் அதனை நிராகரிக்க முடியவில்லை. கோவலனுடன் இது சம்பந்தமாகப் பிணக்குறுகின்றாள். இதையறிந்த கண்ணகி தன் கண்களிரண்டும் கலங்கிய நிலையில் மனம் நொந்து தோழியை அழைத்து தமது ஆபரணங்கள் அனைத்தையும் கோவலனுக்குப் போய்ச் சேரும்படி செய்தாள். கோவலனுக்காக இரங்குவது மட்டுமன்றி உதவி செய்யவும் முற்படுகின்றாள்.

வழிநடைக் காதையில் மாதவியைப் பிரிந்த கோவலன் கண்ணகியை மீண்டும் நாடுகின்றான். அவனது குற்ற உணர்வு அவனை வாட்டியது. ஆனால் கண்ணகியோ எதுவித சலனமுமின்றி மன நிறைவுடன் மகிழ்வாக வரவேற்கிறாள். வழிநடைக் காதையில் நடை வழியில் கண்ணகியின் பாதங்கள் நோவதனை கோவலன் உணர்ந்தான். அவனது மனக்கிலேசத்தை மாற்ற கண்ணகியும் அவனுக்கு சீதை, துரோபதை, தமயந்தி முதலான கற்பரசிகளின் விதி வசத்தைக் கூறிக் கோவலனைத் தேற்றலானாள்.

இடைச்சியம்மையின் இருப்பிடத்தில் தங்கியிருக்கும் காலத்தில் தமது சீவியத்திற்காக தனது ஒற்றைக் காற்சிலம்பை விற்றுவரச்சொல்லுகையில், தனக்கு இவ்வாறான சிறு வியாபாரத்தில் பரிச்சயம் இல்லை எனக்கூறுகின்றான் கோவலன். அதற்குக் கண்ணகி செட்டிக்கு வியாபாரம் சொல்லித்தர வேண்டியதில்லை எனக்கூறுகின்றாள். பின்னர் அதற்கு உடன்படுகின்றார். சிலம்பினை விற்கும் பொருட்டு கோவலனை வழியனுப்புகையில் கண்ணகி தன் துணைவருக்கு பின்வருமாறு ஆலோசனை வழங்குகின்றாள்.

1. எப்பொழுதும் சிவபெருமானை வணங்கிக்கொள்வதும்
2. மதுரைப்பதியில் நல்லவர்களோடு இணக்கஞ்செய்து கொள்வதும்
3. விலைமாதர் கொடுமையில் அகப்படாதிருத்தலும்

எனக்கூறுவதிலிருந்து தன் துணைவர் முன்னர்விட்ட பிழையை மீண்டும் விடக்கூடாது என்பதில் கவனமாக இருப்பதனை உணரமுடிகின்றது.

இவை போன்ற ஏராளமான எடுத்துக்காட்டுகளைக் கண்ணகி வழக்குரையில் தெளிவுற ஆசிரியர் எடுத்துக்கூறியிருக்கும் பாங்கு சிறப்பானது. அதில் வழக்குரைக்கும் காட்சி அனைவரது கருத்தையும் கவருகின்றது.

சோழநாட்டின் பெருமை கூற சிபிச்சக்கரவர்த்தி, மனுநீதிகண்ட சோழன் முதலியோரின் நீதி தவறாது கோலோட்சிய திறத்தினை பாண்டிய மன்னனுக்கு நினைவூட்டி, மதியுரைஞ்ஞர் அல்லாத பொற்கொல்லன் போன்ற சுலபமானவர்களின் ஆலோசனை கேட்டுத் தன் கணவனை நீ கொன்றாய் என விவாதித்து, மன்னனை மீண்டும் பேச விடாமல் வாயடைத்து விடும் பாத்திரத்தை மிகவும் பக்குவமாக வழக்குரை ஆசிரியர் வார்த்திருக்கின்றார்.

## 2.2 கோவலன்

கண்ணகி வழக்குரையில் கோவலன் ஒரு தவப்புதல்வன். சோழநாட்டில் பெரும் வணிக குலத்தில் பிறந்த செல்வ மகன். வணிக நுட்பங்களைத் தந்தையாரிடம் இருந்து கற்றுக்கொண்டவன். உலகியல் வாழ்வில் தமக்கு வரப்போகும் அபாயகரமான சூழலை அறியாதவன் என்றவாறு அதன் ஆசிரியர் கோவலனது பாத்திரத்தை அறிமுகம் செய்கின்றார்.

கலைகளில் அவனுக்கிருந்த ஈடுபாடு கலையரசியாகிய மாதவியின் பால் அவனை ஈர்க்க வைக்கின்றது. மாதவியுடன் இன்ப வாழ்வு நடாத்தும் காலம் கண்ணகியை நினைக்க வில்லை. தான் பொருட் செல்வத்தை இழந்த காலம் கண்ணகி குறித்த நாளுக்குரிய பொன்னை தோழியூடாக அனுப்பியமை கண்ணகியின்பால் அவனது கவனம் திரும்புகின்றது. இதன் மூலம் வழக்குரை ஆசிரியர் சூழ்நிலைக்கேற்ப மாறும் போக்குடைய பாத்திரமாகக் கோவலனை படைத்துள்ளமை கவனத்திற்குரியது.

வழக்குரையின் வழிநடைக் காதையில் கோவலன் சோழநாட்டிலிருந்து பாண்டிய நாடு செல்கையில் கண்ணகியை விட்டு தான் பிரிந்து சென்ற நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றான். அதனால் தான் அடைந்த துன்பங்களையும் அவன் நினைக்கத் தவறவில்லை. பாண்டிய நாட்டை அடைந்ததும் ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைச்சியம்மை அவர்களுக்கு அபயம் அளித்தாள். அவளது வீட்டில் கண்ணகியை விட்டு சிலம்பு விற்கச் செல்லும் போது கண்ணகியைக் கவனமாக பார்த்துக் கொள்ளும் படி வேண்டுகின்றான்.

மாதவியை விட்டுப் பிரிந்துவந்த கோவலனிடம் மாதவியின் தோழி வயந்தமாலை கோவலனை மாதவியிடம் சேர்ப்பிக்க பல முயற்சிகளை எடுத்தாள். முயற்சி கைகூடவில்லை. தன்கையில் பொருள் இல்லை என்னும் காரணத்தினால் தன்னை அகற்றி விட்டமை விலை மாதர் ஒழுக்கம் என்று கோவலன் வயந்தமாலையிடம் கூறுகின்றான். மாதவி தீயவள் அவளிடம் மீண்டும் சேர்வது முடியாத காரியம் என்பதை வயந்தமாலையிடம் கோவலன் உறுதியாகக் கூறிய மொழி அவனது தளராத மனத்திடத்தினைக் காட்டுகின்றது. மாதவியின் கலையழகில் நெகிழ்ந்து போன மனம் அவளைப் பிரிந்ததும் அவனது மனம் திடமாகியதை வழக்குரை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுவது போல் அமைகின்றமை கவனத்திற்குரியது.

கோவலன் தெருவில் சிலம்பு விற்க சென்ற வேளையில் அச்சிலம்பில் ஆசை கொண்டு பல மகளிர் அவனுடன் மோகம் கொள்ளலாயினர். அதனை கண்டிப்பாக வெறுத்த தன்மையினை வழக்குரை எடுத்துக்கூறுகின்றது.

தெருவில் சோதிடம் கேட்கின்றான். நடக்கவிருக்கும் சம்பவங்களை அப்படியே அறிகின்றார். அறிந்தும் அறியாதவர் போல் நடந்து கொள்ளும் அளவிற்கு அவருக்கு விரக்தி நிலை. பின்னர் சிலம்புடன் கொல்லர் தெருவை அடைகின்றான். வஞ்சகம் இல்லாத கோவலன் வஞ்சகக் கொல்லன் கையில் சிக்குண்டான். மன்னன்முன் தான் கள்வன் என்ற பெயர் பெற்ற ஓரே காரணத்திற்காக தன் உயிர் பற்றி அவன் சிறிதும் சலனமடையவில்லை. மாலகன் கையில் அவன் ஒப்படைக்கப்பட்ட போது அவனுக்கு தப்பித்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தினை மாலகன் ஏற்படுத்திக் கொடுத்தான். கோவலன் ஏற்கவில்லை. கொலையுண்டான்.

கோவலன் என்னும் பாத்திர படைப்பினை சூழலுக்கேற்றாற் போல் வழக்குரை ஆசிரியர் படைத்துள்ளமை ஈண்டு நோக்கத்தக்கது.

## 2.3 மாதவி

மாதவியின் பாத்திர உருவாக்கம் தேவலோக நடன மாதான ஊர்வசியுடன் தொடர்புறுகின்றது. அவள் எப்பிறப்பிலும் கலாவல்லியாக இருக்கத்தக்கவள் என்பதனை வழக்குரை ஆசிரியர் அவள் பற்றிய அறிமுகத்திலே கொடுத்துவிடுகின்றார். மாதவி சகல கலைகளிலும் வித்துவம் மிக்கவள் என்பதனை வழக்குரையில் பல இடங்களில் காணமுடிகின்றது.

மாதவிக்குக் கொடுக்க வேண்டிய பொன் ஒரு நாள் குறைவுபட தன் தாய் அவளைக் கடிந்து கொள்கின்றாள். கோவலனிடம் பொன்னை வாங்கித்தருமாறு தன் தாய் சித்திராபதி அவளை வற்புறுத்து கின்றாள். தன்னால் அதனைக் கேட்க முடியாது தன் தோழியிடம் சொல்லி அதனை வாங்கித்தருவதாகவும் கூறி, கோவலனது குலப்பெருமைகளை தன் தாயிடம் எடுத்தக் கூறும் பக்குவ நிலையை ஆசிரியர் மாதவிக்கு வழங்கியிருக்கும் போக்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு நாளைக்குரிய பொன்னை கண்ணகி தன் தோழியூடாக அனுப்பி வைக்கின்றாள். அதில் ஒரு மாப்பொன் குறைவு என்பதைத் தன்தாயூடாக மாதவி அறிகின்றாள். மற்றும் கண்ணகி போட்ட நகைகளை தான் அப்படியே போடவும் மாதவி விரும்பவில்லை என்பதனையும் வழக்குரை ஆசிரியர் எடுத்துக் கூறுகின்றார்.

கோவலனுக்காக ஏங்கும் மாதவி தான் விட்ட பிழைகளை காகித ஓலை மூலம் தன் தோழியூடாக சேர்பிக்கின்றாள். அது கைகூடவில்லை. தன் உயிர் போக்கத் துணிகின்றாள். அவ்வேளை தன் மகளின் நினைவு அவளுக்கு வருகின்றமையானது தன் குழந்தையின் எதிர்காலத்தில் அவளுக்கு இருந்த நம்பிக்கையை நினைவுபடுத்துகின்றது.

அத்துடன் கோவலனுடன் மாதவி வாழ்ந்த காலத்தை அவளால் மறக்க முடியாத அளவிற்கு அவளது மனநிலையை கண்ணகி வழக்குரை ஆசிரியர் எடுத்துக்கூறும் விதம் தனித்துவமானது.

## 2.4. பாண்டிய மன்னன்

தன் துணைவியின் காற்சிலம்பை விற்க வந்த கோவலன் தட்டான் ஒருவனிடம் எதிர்ப்படுகின்றான். தட்டான் பாண்டிய மன்னனின் அரண்மனையில் காணாமல் போன சிலம்பை மன்னனுக்கு நினைவு படுத்தினான். மன்னன் கோவலனை அழைத்தான். கோவலன் உண்மை நிலையைக் கூறியதும் மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் அடைந்து விட்டான். அதை மீண்டும் தட்டான் தூண்டி விடுகின்றான். அதற்கும் மன்னன் உடன் படவில்லை. தன் அரசியிடம் அதனைக்கூறி உறுதிப்படுத்துமாறு மீண்டும் கூறுகின்றான். அரசியாரும் இது தன்னுடையது அல்ல எனக்கூறுகின்றாள். தட்டான் மனம் தளர்கின்றான். மன்னனிடம் அரசியாரின் பதிலை மாற்றிக் கூறுகின்றான். மன்னன் தட்டானால் இக்கட்டான சூழலுக்குள் தள்ளப்படுகின்றான்.

கோவலனைத் தண்டிக்க முனைகின்றார். மேகநாதன் என்னும் யானைக்கு மதமூட்டி கோவலனைக் கொலை செய்ய முயற்சிக்கின்றான். அது நிகழ்ந்தேறவில்லை. கள்வன் மாந்திரீக வித்தை தெரிந்தவன்; இவனை மழுவால் வெட்டிக் கொல்ல வேண்டும் எனத்தட்டான் கூறுகின்றான். இதனை ஏற்ற மன்னன் மழுவரசனாகிய மாலகன் என்பவனை அழைத்து கோவலனைக் வெட்டிக் கொலை செய்யுமாறு பணித்தான். மாலகனும் உடன்பட்டு கோவலனை கொலைக்களம் அழைத்துச் சென்றான். செல்லும் வழியில் கோவலனிடம் நடந்தவைகளை மாலகன் விபரமாகக் கேட்கின்றான். கோவலனின் குற்றமற்ற பதிலுடன் அவனைத் தப்பிச் செல்லுமாறு பணிக்கின்றான். கோவலன் மறுக்கின்றான்.

பாண்டிய மன்னனின் சிறந்த அரசியல் நீதி முறையிலே தவறு உண்டாவதனை மாலகன் என்னும் பாத்திரம் ஊடாக வழக்குரை ஆசிரியர் விளக்கும் தன்மை மனங்கொள்ளத்தக்கது.

கண்ணகி தன் கணவன் பாண்டிய மன்னனால் கொலையுண்ட சம்பவத்தினை அறிந்தாள். மன்னனிடம் நீதி கேட்டு வந்தாள். மன்னன் அவளது வாதத்தின் முன் தோற்றுப்போனான். பாண்டிய வம்சத்தினருக்கே தன்னால் பழியுண்டாவதை உணர்ந்து மன்னன் அவ்விடத்திலே உயிர் துறந்தான். அரசியாகிய கோப்பெருந் தேவியும் அவ்விடத்தில் மாண்டாள்.

ஆக, கண்ணகி வழக்குரையில் துலங்கும் பிரதான பாத்திரங்களை மையப்படுத்தி துணைப்பாத்திர ங்களின் உதவியுடன் கதை நகர்த்தப்படும் விதம் சிறப்பாக உள்ளமை கவனத்திற்குரியது

### 2.5. மாசாத்துவான்

கோவலனின் தந்தை. ஒரு தந்தை தன் மகனுக்கு யாது செய்தல் வேண்டும் என்னும் எண்ணக்கருவை மனதிலிருத்திவைக்கும் பாத்திரம். விட்டுக்கொடுப்புக்கும் நட்புக்கும் தலை வணங்கக்கூடியவர். கண்ணகி பேழையில் அடைந்து வருவதைக்கண்ட மாசாத்துவான், மானாகர் இருவரில் முன்னையவர் பெட்டி எனக்கு எனக்கூறுகின்றார். மற்றையவர் பெட்டியிலுள்ளது எனக்கு எனக்கூறுகின்றார். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு அதனை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை உண்டாக்கி வருங்காலத்தினை எதிர்கொள்ளும் பாத்திரமாக மாசாத்துவானை வழக்குரை ஆசிரியர் படைத்துள்ளார். பேழைக்காக முரண்பட்டிருந்தால் கண்ணகியினதும் கோவலனதும் திருமணம் சிலவேளையில் நிகழாமல் கூட இருந்திருக்கலாம். அத்துடன் மாசாத்துவான் குலப்பெருமை காக்கும் துணிவு கொண்டவராக சித்தரிக்கப்படுகின்றார்.

### 2.6. மானாகர்

கண்ணகியின் தந்தை. தனது மகளின் எதிர் காலத்தில் நம்பிக்கை கொண்டவர். மகளின் திருமணத்தின் பொருட்டு அவர் சிலம்பு உள்ளிட்ட பூணாரங்களை செய்வதற்கு அவர் காட்டிய ஆர்வம் தனது வணிக குலத்தின் பெருமையைக் காட்டுவதாக அமைகின்றது. கண்ணகியின் காற்சிலம்பிற்கு நாகமணி எடுப்பதற்கு யார்? பொருத்தமானவர் என்பதனை அறிந்து, மீகாமன்தான் அதற்கு சரியானவர் என்பதை எண்ணித்துணிந்த பின்னர் மீகாமனது பரம்பரை பற்றிய தகவல்களை அறியும் போக்கு வணிக குலத்தினருக்குரிய ஆராய்ந்து முடிவெடுக்கும் தன்மையையும் அவர்களது தொழில்வாண்மையினையும் படம்பிடித்துக் காட்டுகின்றது. தனது மருகனார் மாதவியின் நடன அரங்கேற்றத்திற்குச் செல்ல ஆயத்தமான வேளை இது தங்களுக்குத் தகாது என ஆலோசனை வழங்குபவராகவும் மானாகர் பாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 2.7. சித்திராபதி

மாதவியின் தாய். பொருள் மீது அலாதி பிரியம் கொண்டவள். கணிகையர் குலத்தினருக்குரிய அனைத்துத் திறன்களையும் தன்னகத்தே கொண்டிலங்கியவள். தமக்கு கோவலனிடம் இருந்து சேர வேண்டிய பொருளில் சிறிது அளவு குறைவு பட்டதும் அதனைச் சுட்டிக்காட்டத் தவறாத குணமுடையவள். பொருள் மீது பற்று வைப்பதனால் உண்டாகும் விளைவினைக் காட்ட உருவாக்கப்பட்ட பாத்திரப்படைப்பே சித்திராபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2.8. சோழ மன்னன்

மாதவியின் நடன அரங்கேற்றத்திற்கு அரச அங்கீகாரம் வழங்கியவன். இவன் இங்கு இராசஇராச சோழன் என அடையாளப் படுத்தப்படுகின்றான். மாதவியின் ஆடலரங்கை அலங்காரம் செய்யப்பணிக்கையில் அவ்வரங்கில் சிபிச்சக்கரவர்த்தியின் கதை, மனுநீதிச் சோழனின் கதை முதலியவைகளை ஓவியமாக வரைய ஏற்பாடு செய்கின்றான். இது சோழமன்னர் பரம்பரையின் சிறப்புக்களை கோடிட்டுக்காட்ட வழக்குரை ஆசிரியர் எடுத்தாண்ட உபாயமாகும். கலைகளில் ஆர்வம் கொண்டவன். மாதவியின் நடன அரங்கேற்றத்திற்கு இவன் அனுசரணை வழங்காது விட்டிருந்தால் மாதவியும் கோவலனும் சேர்வதற்குரிய சந்தர்ப்பம் குறைவாகக் காணப்பட்டிருக்கும். மாதவியையும் கோவலனையும் சேரவைத்ததில் இவனுக்குள்ள பங்கு குறிப்பிடத்தக்கது. வழக்குரையில் மாதவி அரங்கேற்றுக் காதையில் மாதவியின் கணிகையர் குலப்பெருமையை உயர்த்துவதற்கு மன்னன் காட்டிய ஆர்வம் இங்கு விதந்து கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### 2.9. மீகாமன்

மானாகர் தனது மகளின் காற்சிலம்பிற்கு கிடைப்பதற்கரியதான நாகமணியை எடுப்பதற்கு இனங்காணப்பட்ட கடல்பிரயாண வீரனாகவே மீகாமன் என்னும் பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. மீகாமன் மகாபாரதக்கதையுடன் தொடர்பு படுத்தப்படுகின்றான். இவன் பரத வம்சத்திற்குரியவன் என்பதனை காட்டுவதன் ஊடாக குலப்பெருமை பகிரப்படுகின்றது. வழக்குரை காதையில் மீகாமன் என்னும் பாத்திரத்தை ஒரு பிராதன பாத்திரமாகக் கொள்ளும் அளவிற்கு அவனது முக்கியத்துவம் விளக்கம் பெறுகின்றது. மீகாமன் இல்லாவிட்டிருந்தால் கண்ணகியின் சிலம்பிற்கு நாகமணி இல்லை. நாகமணி இல்லை என்றால் வழக்குரைக்கு சாட்சியம் இல்லாமல் போயிருக்கவும் கூடும்.

### 2.10. வெடியரசன்

வடஇலங்கையை ஆட்சி செய்த மன்னன். நீலகேசியின் கணவன். விளங்கு தேவன், வீரநாரணன் ஆகியோரின் சகோதரன். இலங்கையின் சிறந்த வீரன். கடல் எல்லையை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தவன்.

### நிறைவுரை

இலங்கையின் தமிழ் இலக்கிய மரபில் கண்ணகி வழக்குரைக்குள்ள முக்கியத்துவம் ஈண்டு புலப்படுகின்றது. சிலப்பதிகாரத்திற்கு நிகரான வகையில் அதன் ஆசிரியர் அக்காவியத்தை நகர்த்தியிருக்கின்ற முறைமை சிறப்பானது. கதை நகர்த்தலில் பாத்திரப்படைப்புக்களை அவர் கையாண்டுள்ள விதம் அவதானத்திற்குரியது. சிலம்பின் மதிப்பற்ற தன்மையினை வெளிக்காட்டவே மீகாமன் என்னும் பாத்திரமும் அவனுடன் சம்பந்தப்பட்ட கதை நிகழ்ச்சிகளும் மிகையாக விபரணம் செய்யப்பட்டுள்ளமையை உணரமுடிகின்றது. ஆக, கண்ணகி வழக்குரை ஆசிரியரின் ஒவ்வொரு பாத்திரப் படைப்பும் ஒவ்வொரு குணாதிசயங்களை வெளிப்படுத்துவதுடன், இப்பாத்திர வார்ப்புகள் அக்காவியத்தின் முழுமைக்குத் துணைபுரிகின்றன.

### உசாத்துணை நூல்கள்

1.சிலப்பதிகாரம் - மூலமும் புலியூர்க்கேசிகன் தெளிவுரை - பாரி நிலையம், சென்னை - 1958

2.கண்ணகி வழக்குரை (பதிப்பாசிரியர்) வீ.சி.கந்தையா, இந்து சமய விருத்திச்சங்கம் காரைதீவு - 1968

3.சிலப்பதிகாரத்தில் பண்பாட்டுக் கோலங்கள் - இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் - 2003

4.ஈழத்து தமிழ் நூல் வரலாறு - F.X.C. நடராசா, அரசு வெளியீடு, கொழும்பு - 1970

5.கண்ணகையம்மன் பத்ததியும் பாடல்களும் (பதிப்பு) கண. ஆறுமுகம் - விபுலம் வெளியீடு - 2010

6.மட்டக்களப்புத் தமிழகத்தில் இந்துப்பண்பாடு (பதிப்பு) சி. மௌனகுரு - இரண்டாவது உலக இந்து மகாநாட்டு மலர் - மட்டக்களப்பு பிரதேசக்கிளை - 2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை III

# கண்ணகி வழக்குரைக் காவியத்தில் கப்பல் கட்டும் கலையும் போர்கலையும்



ஆய்வாளர் . செல்வி. க. தங்கேஸ்வரி பீ.ஏ.
தொல்லியல் (சிறப்பு)

கண்ணகி வழக்குரைக் காவியத்தில் கூறப்பட்டுள்ள கப்பல் கட்டும் கலை, போர்க்கலை இரண்டையும் ஆராயுமுன் இவ்விரு கலைகளுக்கும் முன்னோடியான சில தெளிவுகளை தெரிந்து கொள்ளுதல் அவசியமானது. மறத்தமிழரின் இரு கண்கள் போன்று விளங்கிய இவ்விரு கலைகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. தொடர்புற்றே தொடர்ந்து வந்துள்ளன. இதனை வரலாறு காட்டுகின்றது. பண்டைக்காலங்களில் கட்டுமரம், தோணி, வள்ளம், படகு என ஆரம்பித்த கடற்பயணங்கள் பாரிய பாய்மரக் கப்பல்களாக பரிணமித்தன. அதேபோன்று ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் என தொடங்கிய போரானது கடல் கடந்து நாடு பிடித்தல், வணிகம், என இன்றும் நீண்டு இன்றும் நிலைத்துள்ளது. இக்கூற்றை கண்ணகி வழக்குரை காவியத்தின் மூலம் தெளிவாகக் காணமுடியும்.

**பண்டைக்கால கப்பல் கலை**

நமது மூவேந்தர்களுமே இவ்விரு கலைக்கும் விதிவிலக்கல்ல. சங்க காலத்திலே பாண்டிய மன்னனான இரும்பெருவழுதி பெருங்கடல் வாணிபத்திலும் கடல்படு திரவியங்களைத் தேடுவதிலும் வல்லவனான இப்பாண்டிய மன்னன் மீன்கொடி கட்டிய கப்பலில் திரைகடலோடித் திரவியங் கொண்டதாக அறியமுடிகின்றது. இவன் ஒரு போதும் கடற்பயணத்தில் கலம் கவிழ மாட்டானாம். இதுபோல் நாவாய் பற்றிய செய்திகள் சங்க கால நூல்கள் மூலம் அறியமுடிகின்றது. பத்துப்பாட்டு, பெரும்பானாற்றுப்படை, கலித்தொகை மதுரைக்காஞ்சி பட்டிப்பாலை போன்ற சங்க நூல்களில் காணமுடிகின்றது.[1]

**மேலும் சங்க நூல்கள் காட்டும் சில கடற்பயணங்கள்**

**தென்குமரி வடபெருகல்
குணகுட கடலாவெல்லை
.........................................
.........................................
நாடார நன்கிழி தரு
மாடியற் பெரு நாவாய்"** என மதுரைக்காஞ்சி 20-33 வது வரிகள் நாவாய் (கப்பல்) பற்றி கூறுகின்றது.[2]

இதே போன்று பட்டினப்பாலையில் 184-194 வரிகளில் கரிகால் பெருவளத்தானை கடியலூர் உருத்திரங் கண்ணனார் பின்வருமாறு பாடுகின்றார்.[3] (பத்துப்பாட்டில் உள்ள பட்டினப்பாலை வரிகள்)

**'செல்லா நல்லிசை மரபினர் காப்பி
னீரின் வந்த நிமிர்பரிப் பரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப்பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாசமு மகிலும்
தென் கடல் முத்தும் குணகடற்றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத்துணவும் காழத் தாக்கமும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளத்தலை மயங்கிய நனந்தலை மறுகி
னீர்நாப் பண்ணு நிலத்தின் மேலும்..........

என கடல் வாணிபம் காட்டப்படுகின்றது. சோழர் காலத்தில் கப்பல்கள் பெரிதாக கட்டப்பட்டன. சோழர்கள் கடல் கடந்து போரிட்டனர். வாணிபமும் செய்தனர்.

### சோழப் பேரரசின் கப்பல் கலை

பராந்தக சோழனின் வழிவந்த சோழப் பேரரசு கங்கை முதல் இமயம் வரை விரிந்து வேங்கி, கலிங்கம், கோசலம் என எங்குமே புலிக்கொடி பறந்தது. கடல் கடந்து கடாரம், கம்பூஜம், ஸ்ரீவிஜயம், ஈழம் எங்குமே போரிட்டார்கள். நாடுகளைப் பிடித்தார்கள், வணிகம் செய்தார்கள். கடல் கடந்த வாணிபத்தால் பெரும் செல்வம் கொழிந்தது. இதனைப் பல செப்பேடுகள் சான்று காட்டுகின்றன.[4] இராஜராசன், இராஜேந்திரன் காலத்தில் மேலும் பரந்து தென்கிழக்காசிய நாடுகள் முழுவதிலும் புலிக்கொடி பறந்தது. ஆயிரம் யானைகளை ஏற்றும் கப்பல்களையும் கொண்டு போய் போரிட்டானாம் இராஜேந்திர சோழன். கப்பல் கட்டும் கலை சிறப்பாக இருந்ததனாலேயே இவை எல்லாம் முடிந்தது.

நாநாதேசத்திசையாயிரத்தை நூற்றுவர் (நாநாதேகர்) மணிக்கிராமத்தவர் நகரத்தார் வளஞ்சியர் அஞ்சுவண்ணத்தார் போன்ற வணிகக் குழுக்கள் பட்டுகள், முத்துக்கள், மணிகள், அகில், கற்பூரம், சந்தனம், மிளகு, ஏலம், குங்குமப்பூ என பல தரப்பட்ட பொருட்களை பாரசீகம் அரேபிய நாடுகள், சுவர்னபூமி, ஸ்ரீ விஜயம், சுவர்ணதீபம், சீனா, சுமந்திரா, காம்பூஜம், போன்றபல நாடுகளுடன் வியாபாரம் செய்தனர். நாநாதேகர் என்போர் வணிகர் மட்டுமல்ல வீரர்களுமாவர். இவர்கள் எறிவீரர் முனை வீரர் இளஞ்சிங்க வீரர் என அழைக்கப்பட்டனர்.[5] இதற்கு எல்லாம் காரணமானது கப்பல் கட்டும் கலையின் சிறப்பேயாம்.இத்தகைய சூழலிலே தான் மாநாகரும் மாசாத்துவரும் வணிகர்களாக இருந்தனர்.

### பண்டைக்கால சோழர் கால கப்பல் கட்டும் கலை (முறை)

பண்டைக் காலங்களில் கப்பல் கட்டும் கலை சிறப்புற்றிருந்தமையே போர் மூலம் பல நாடுகளை பிடிக்கவும், வாணிபம் செய்யவும் முடிந்தது. கட்டுமரம், தோணி, வள்ளம் என பயணம் செய்த நம் முன்னோர் பாரிய பாய்மரக் கப்பல்களை உருவாக்கினர். கடற்பயணம், கப்பல்பயணம், கப்பல் அமைப்பு பற்றியெல்லாம் கூறும் பண்டைய நூல் “செங்கோன் தரைச் செலவு”, எனும் மறைந்த தமிழ் நூலாகும். இதே போன்று “கப்பல் சாஸ்திரம்” “நாவாய் சாத்திரம்” என்பனவும் கூறுகின்றன என அறிய முடிகின்றது. நாவாய், திமில், மரக்கலம், நீள்மரம், அம்பி என்ற பெயர்களும் கப்பலைக் குறிப்பன.

### பண்டைய கப்பல் வகைகள்

தமிழர்கள் தமது கப்பல்களை 1. வணிகக்கப்பல் 2. பயணக்கப்பல் 3. போர்க்கப்பல் என தேவைக்கேற்ப வடிவமைத்தனர். இவை சோதிட விதிப்படி எந்த வேளையில், எப்படி கட்டப்பட்டன, எப்போது வெள்ளோட்டம் விடவேண்டும். அதன் பாவனை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பன போன்ற முறைகளும் மேற்படி கப்பல் சாஸ்திர நூல்களில் கூறப்பட்டுள்ளன. பீமா, பயா, கர்பரா ஆகிய கப்பல்கள் கடற்பயணத்திற்கு ஒவ்வாதன. அதேபோல சிறப்பான பத்துவகைக் கப்பல்கள் ஊர்த்துவா, அணித்துவா, சுவர்ணமுகி, கர்ப்ய்யினி, மந்தாரா போன்றனவாம். இதில் மிகவும் நற்பயன் உள்ள கப்பல் ஊர்த்துவாவாகும். இதேபோன்று பாய்வகைகள் ஏனைய பாகங்கள் பற்றியும் கூறியுள்ளன.

### கப்பலின் பாய்வகைகள்

மூன்று வகை பாய்கள் பண்டு கப்பல்களில் இருந்தன. அவை 1. திருக்கத்தி 2. காணப்பொய் மரம் 3. கோசி பாய்மரம். இவற்றிலே ஒரு பாய், இரண்டு பாய், மூன்று பாய்கள் கொண்டதுமாக கப்பலைப் பொறுத்து அமையும். பாய்கள் அடியில் பெருத்தும் நுனியில் சிறுத்தும் இருக்கும். இங்கு இப்பாய் சீலைகள் அ. கட்டிப்பிணைத்தல் ஆ. பாய் விரித்தல் என்ற சொற்பதங்கள் பாவிக்கப்பட்டன.

கப்பல்கள் இரண்டு விதமான சக்தியைக் கொண்டன. 1. பவன அமுக்கத்துடன் அதாவது பாய்களை காற்று மோதி முன்னோக்கி தள்ளுவது 2. துடுப்பு வலித்தல் அதாவது தண்டு, சவள் வலித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடுவது இதற்கு மனிதர்கள் அதிகம் தேவைப்படுவர். எனவே கடலில் கப்பல்களை நங்கூரமிட்டு நிற்பர். காற்று வீறும் திசைக்கேற்ப பாய்களை ஏற்றிப் பயணிப்பர்.

பாய்மரங்களின் எண்ணிக்கையை பொறுத்தே வர்ணம் பூசப்படும். நான்குகூம்பு உள்ளவைகளுக்கு வெள்ளை நிறமும், மூன்று கூம்பு உள்ளவைகளுக்குச் சிவப்பு நிறமும், இரண்டிற்குமஞ்சள் நிறமும், ஒரு கூம்பு உள்ளவற்றிற்கு நீல நிறமும் பூசப்படும்.

### கயிறு

ஒரு கப்பலின் பாய்களை நிறுத்துவதற்கு ஆஞ்சான், தம்பான், வேடான், பளிங்கை, மூட்டான் போன்ற கயிறு வகைகள் பாவிக்கப்பட்டன.

### பண்டைய கப்பல்களின் பாகங்கள் சில

பண்டைய கப்பல்களை ஆராய்ந்தால் அதன் ஒவ்வொரு பகுதியும் நாம் அறிந்திராத பெயர்களைக் கொண்டுள்ளன. சிலவற்றை மட்டும் நோக்கலாம்.

ஏரா - என்பது ஒரு கப்பலின் முதுகுப் பகுதியில் இருக்கும் பாரிய தண்டு (அடிமரம்) ஏரா எனப்படும். ஏராவை மகா எனவும் கூறுவர். ஏராமுதுகெலும்பு போலவும் வங்குக் கால்கள் விலா எலும்பை ஒத்ததாகவும் இருக்கும்.

ஓடுகைகள் - பாய்மரத்தில் பாய்கள் பிணைக்கப்படும் குறுக்குவிட்ட மரங்கள் ஓடுகை எனப்படும். ஒரு கப்பலில் இருக்கக்கூடிய ஓடுகைகள் வலிய பாய்மர ஓடுகைகள் வலிய காவிய ஓடுகை வலிய பருமல் ஓடுகை என்பனவாகும். இவற்றை விட மேலும் ஓடுகைகளும் உள்ளன. கப்பலில் உறுதியும் பாதுகாப்பும் பாய்மரங்களிலும் ஓடுகைகளிலும் தான் தங்கியிருக்கின்றது. இப்பாய்மரங்களுக்கும் ஓடுகைகளுக்கும் இயற்கைச் சீற்றத்தை எதிர்த்து தாக்குப்பிடிக்கக்கூடிய வல்லமை இருத்தல் வேண்டும்.

முகரி - கப்பலின் முன் பாகம் முகரி என்படும். முகரி அழகிய வேலைப்பாடுடன் கப்பல் தளத்திலிருந்து உயர்ந்து மேலெழுந்து நிற்கும். கம்பீரமான யானை, புலி, அன்னம், மயில், கிளி, ஆண்மகன் போன்ற முகம் கொண்டதாக அமையும். முகரிக்கு இன்னோர் பெயர் துரோதை. பின்பக்கம் அனியதுரோதை எனப்படும்.

நங்கூரம் - இடர் ஏற்படுமிடத்து கப்பல் அசையாமல் நிற்பதற்கு இடப்படும் பாரப்பொருளானது நங்கூரம் எனப்படும். இதன் நிறை கப்பலின் பாரம் பரிமாணம் என்பவற்றைப் பொறுத்து அமையும். ஏராவின் நீளத்திற்கு ஏற்ப அடிக்கு 26 இறாத்தல் என்ற அளவில் அமையும்.

### கப்பலின் வேறு பாகங்கள்

முக்கியமான சில பெயர்களை மட்டும் பார்க்கலாம். வாரிநீக்கம், சிந்தை உசத்தி, அட்டிசித்தி உசத்தி, அட்டிட மடி உசத்தி, தட்டு உசத்தி, தலுக்காலு உசத்தி, பருமல் அடி, இசுக்கா அடி, வடகாவி, வடசவரி, வடகூர், வடமரம், நூல் ஏணி, கலிச்சுற்று, கோசா, அளியதண்டு, ஈயக்குண்டு கட்டுக்கொடி, கூசா படலம், மகமை ரேவடி, திண்ணை, ஞானப்பாரம், இசுக்காள அடி, பருமல் அடி, அணியம் போன்ற இன்னும் பல.[6]

### கண்ணகி வழக்குரை காவியத்தில் கப்பல் வைத்தல் (கட்டுதல்)

பண்டு கப்பல் கட்டுதலை கப்பல் வைத்தல் என அழைப்பது வழக்கம். மாசாத்துவனார், மாநாகர் இருவரும் கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் பேசி முடிக்கின்றனர். ஆபரணங்கள் கொடுப்பது பற்றிய பேச்சுவார்த்தை எழுகின்றது. பசும்பொன்னால் பல்வேறு விதமான ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. அதில் காற்சிலம்பு முக்கியம் பெறுகின்றது. சிலம்பினுள்ளே நாகமணிப்பரல்கள் வைக்க வேண்டும் என தீர்மானம் வருகிறது. தென்திசையில் உள்ள நாகதீவிற்குப் போய் நாகமணி பெறவேண்டும். அதற்கு கப்பல் கட்ட மரம் வேண்டும். இதற்கு தகுதியானவன் மீகாமன் என்ற பரதர் குல வீரன். இவன் அதியரசன் மச்சகந்தி பரம்பரையில் வந்தவன். மீகாமனை அழைத்து பல பரிசுப்பொருட்களுடனும் (பாகுடம்) திறைப் பெட்டிகளுடனும் தென்னிலங்கை மன்னனிடம் அனுப்பி வைக்கின்றனர். மீகாமன் தென்னிலங்கை மன்னனைச் சந்தித்து முகமன் கொண்டாடி கப்பல் கட்டுவதற்கான மரங்களைப் பெற்று வருகின்றான். கடல் முழுக்க கட்டுமரமாகவே தோன்றியது என வர்ணிக்கப்படுகின்றது.[7]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தான் கடந்து தூரிகை யெல்லாம் சமுத்திரமெல்லாம் நிறைய
காண் கொண்ட கட்டுமரம் கருதியே எல்லோரும்"

(கண்ணகி வழக்குரை தூரிகையோட்டு காதை பக்கம் 47 பாடல் 181) என்ற வரிகள் மூலம் அறியலாம். தூரிகையோட்டலுக்கு ஒரு தனி அத்தியாயம் வகுக்கப்பட்டுள்ளது.

**கப்பல் கட்டுதல்**

சோழநாட்டு மேஸ்திரிமார் கப்பல் கட்ட ஆயத்தமாகின்றனர். கப்பல் கட்டுவதற்கு பலரது உதவி தேவைப்படுகின்றது. கணக்கர், அழுத்தவேலை செய்பவர், மாலுமிகள், வாஸ்துகாரர், கண்வாளர் (கம்மாளர்), சாஸ்திரியர், மேஸ்திரி, கப்பல் தலைவன் (தண்டையன்), வேலையாட்கள் என பலர் தேவைப்படுகின்றனர். எல்லாரும் வந்து சேர்ந்தனர். இருந்தும் கப்பல் வைப்பதில் இடர்பாடுகளும் பல உள்ளன. 1. முதலில் கப்பல் கட்டுவதற்குரிய மூலப்பொருள் (மரம்) தேடல் 2. கரையில் கப்பலை கட்டி மிதக்க விடல் 3. அதை இலகுவாக இயக்குவதற்குரிய உந்து சக்தி என பல விடயங்கள். இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு முதலில் சாஸ்திரமும் மூர்த்தமும் பார்க்கப்படுகின்றது. நல்ல மூர்த்தத்தில் மரங்களை வெட்டி செப்பனிட ஆயத்தமாகின்றனர். மூர்த்தம் பார்க்கப்படுகின்றது. இலுப்பை, வேம்பு ஆகிய மரங்களிலே கப்பல் கட்ட பாவித்தார்.

**மூர்த்தம் இராசி பலன் பார்த்தல்**

கன்னி மிதுனம் மீனம் மகரம் பின்னே வரும் இராசி எட்டும் பிழை இல்லை வெள்ளி திங்கள் திறன் மிகும். புதன் சனி கருமம் செய்யக்கூடாது. வியாழன் ராகு காலம் விட்டு வரும் ஆறு நாளும் வங்கம் வைக்க நல்ல நாள். அதிலும் துலா இராசியில் வைத்தல் சிறப்பானது என ஆராய்ந்து நாள் பார்த்து முதலில் மரங்கள் வெட்டி செதுக்க ஆயத்தமாகின்றனர். உடனடியாக கணபதிக்கு பொங்கலிடப்படுகின்றது.

**கணபதிக்குப் பூசை செய்தல்**

விநாயகருக்கு பால் பொங்கல் பொங்கி பாளை தெங்கு இளநீர் கட்டி அலங்கரித்துப் பணியாரம் கரும்பு, வாழை வைத்து படையல் செய்து திருவிளக்கிட்டு தேங்காய் உடைத்து பூமாலை, இளநீர், சாத்தி சந்தண தூபதீபம் காட்டி வழிபாடு செய்திருக்கின்றனர். ஆட்டுப்பலியும் கொடுக்கப்படுகின்றது. விநாயகருக்கு ஆட்டுப்பலி கொடுப்பது நமக்கு ஆச்சரியமாக இருக்கலாம். பலி கொடுப்பது கப்பலுக்கு வரும் இடரிலிருந்து காப்பாற்றும் என்ற நம்பிக்கையாகலாம்.

பின்னர் வாஸ்த்து திசையில் வியாழன் வெள்ளி யோகம் என்று அட்டமி தவிர்த்து குறித்த மூர்த்த நாளில் முதலில் நூலடித்து ஏராவை சமம் செய்துவைத்து ஏனைய கட்டுமான வேலைகளைத் தொடங்குகின்றனர்.

'கோலெடுத்து ஏராவைக் குறித்தளந்து எல்லையிட்டு நூலடித்துச் சமன் செதுக்கு ஏராவை வையுமென்றார்"[8]
(கப்பல் வைத்தல் பாடல் 203)

நூல் அளந்த பகுதியிலே மணற்பரப்பி கிழக்கு நோக்கி அந்த மண்ணிலே ஏறா கீறி பட்சி இரண்டும் கீறி சூலம் கீறிபணிகளை தொடங்குகின்றனர். (பாடல் 206) ஏராவை வைத்தபின்னர் கம்மாளர் பலகைகளை காய்ச்சி வளைத்துச் செப்பனிட்டு செதுக்கி ஒவ்வொன்றாகப் பொருத்துகின்றனர். இங்கு கப்பல் கட்டுவதிலே ஏரா எனப்படும் மகாவும் வங்குக் கால்களும் பலவகைகளும் முக்கியம் பெறுவதைக் காண்கின்றோம். தொடர்ந்து வங்குக்கால்கள் பலகைகள் எல்லாம் இணைக்கப்படுகின்றன.

பலகைகள் எல்லாம் செதுக்கி காய்ச்சி வளைந்து ஏராவுடன் சேர்த்துப் பொருத்துகின்றனர். இப்படிப் பொருத்துவதற்கு கலப்பத்து என்னும் கலவையைப் பாவிக்கின்றனர். யுத்தம் செய்தவதற்கு ஏற்றபடி சாதாரணமான வரிமானங்கள் மேலும் இருபுறமும் ஐந்து ஐந்து வரி சேர்க்கப்படுகின்றது. இது 'வெடியரசை வென்று யுத்தம் செய்வதற்கு" என்று கூறப்படுகின்றது[9] ஆகவே வெடியரசன் யுத்தம் கண்ணகி வழக்குரையில் எதிர்பார்த்ததொன்று (பாடல் - 224) ஒழுங்காக படி துவாரங்கள் அறுக்கப்பட்டு பலகை மரங்கள் பொருத்துகின்றனர். துறப்பணம் என்னும் கருவியாலே துளையிட்டு மரங்கள் பொருத்தப்படுகின்றன. ஒட்டு வேலைகளுக்கு குங்கிலியம் சட்டியில் உருக்கப்பட்டு ஒட்டப்பட்டன. (இன்றய காலத்தில் கூட ஒட்டு வேலைகளுக்கு குங்கிலியம் பாவிப்பதைக் காண்கின்றோம்) அது மட்டுமல்ல பேய் பிசாசை விரட்டும் தன்மையும் குங்கிலியத்திற்குண்டு. நமது முன்னோர் கைக் கொண்ட ஒவ்வொரு விடயமும் அர்த்தமுள்ளவையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலைபடபாடுகளும் அலங்காரமும்**

யாழி சிங்கம் போன்ற உருவங்களின் வரிகளினால் அலங்காரங்கள் செய்யப்பட்டன. இவைகளும் துளையிட்டு அழுத்தமாகப் பொருத்தப்பட்டன. கால்களிலே சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. கப்பலில் சுற்றி வர போர் செய்வதற்கான நடை பலகை பொருத்தப்பட்டது. கப்பலைச்சுற்றி வீரர் நின்று போர் புரிவதற்கு ஏற்ற வகையில் தளவரிசை மேலும் செய்யப்பட்டது. மக்கணம் வில்வாரிக் கயிறு மாரணம் சவிசா தாராயம் போன்ற கயிறுகள் எண்ணெய் தடவி மட்டையுடன் சேர்த்து மேல் சாரி வார் பூட்டிக் கட்டினார். இக்கயிறுகள் பழுதுபடாமல் இருக்க ஒருவித பசை பூசப்பட்டது. பண்டு ஒரு கப்பலுக்கு பாய்களை நிறுத்துவதற்கு அஞ்சான், தாம்பான், வேடான் பளிங்கை, மூட்டான் போன்ற கயிறு வகைகள் பாவிக்கப்பட்டன. வீரர் போர் செய்யும் போது நடைபாதை குலுங்காமல் இருக்க இருபக்கமும் கோப்புக்காலும் சலங்குமிட்டார்கள் கடைசியாக ஒரு நல்ல மூர்த்தத்திலே கப்பலை ஓடவிட்டுப் பார்த்தார்கள்.

கப்பலை ஓடவிட்டு போது அட்ட தேவதைகளை நிறுத்தி பால் பொங்கிப் படையலிட்டுச் சடங்கு செய்து பலி கொடுத்து ஆயிரங் கப்பல்களையும் கடலில் விட்டுச் சுக்கானை பிடித்து ஏலேலா கூறி வில் முரசு மத்தளம் எல்லாம் ஒலிக்க கடல் பயணம் தொடங்கியது.

**போர்க்கலை பற்றிய பொதுவான நோக்கம்**

கண்ணகி வழக்குரை காவியத்தில் போரை ஆராயுமுன் பண்டைக்கால போர் முறை பற்றிய ஒரு பொது அறிமுகத்துடன் கண்ணகி வழக்குரை போருக்குப்போவது பொருத்தமானது. பண்டு போரிலே பல்வேறு போர் விதிமுறைகள் கையாளப்பட்டன. போர் செய்வதற்குப் பல காரணங்கள் இருந்துள்ளன.

அ. ஆநிரை கவர்தலும், ஆநிரை மீட்டலும்
ஆ. ஆநிரை மட்டுமல்ல பிற நிரை (எருமை ஆடு)
இ. மண்ணுக்கான போர்
ஈ. வீரத்தைக் காட்டுவதற்கான போர் - பேரரசு என்று சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி
உ. மானப்போர்
ஊ. தாம் விரும்பிய பெண்டிரை மணம் செய்வதற்கான கன்னிப்போர்
எ. திறை கொண்டு பெயருதல்
ஏ. யானையும் குதிரையும் கவர்தல்
ஐ. செல்வம் கவர்தல்
ஒ. மகளிர் கவர்தல்
ஓ. முடி கவர்தல்
ஔ. பகைவரை அடக்குதல் / வணிகத்துக்கான போர்[10]

இப்படியான போர்கள் சங்ககாலம் இருந்து பல்லவர் சோழர் பாண்டியர் சேரர் காலங்களிலெல்லாம் ஏற்பட்டன. இப்படியான போர்களிலே பல யுக்திகள் பலவிதமான ஆயுதங்கள் பலவிதமான படைகள் பாவிக்கப்பட்டன ஒவ்வொரு மன்னனுக்கும் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தரைப்படை சிலரிடம் தேர்ப்படை என்பன இருந்துள்ளன.

போர்க்களத்திற்கு மன்னன் தனது நம்பிக்கைக்குரிய தளபதி தலைமையில் படை அனுப்புவான். நேரடியாகவும் மன்னன் களத்தில் இறங்குவான். போர்களத்திற்கான ஆட்சேர்ப்பு முறை பயிற்சி முறை என்பன எப்பொழுதுமே இடம் பொற்றன. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே புதிதாகவும் நடைபெறும் அரசனுக்காக மெய்ப்பாதுகாவலர் இருப்பார். இவர்கள் அரனுடனே உணவு உண்பார். தம் உயிர் ஈந்து அரசனைப் பாதுகாப்பார்.

சாளுக்கியருடைய மெய்ப்பாதுகாவலர் - சகவாசிகள் எனப்பட்டனர்.
சோழருடைய மெய்ப்பாதுகாவலர் - வேளைக்காரர் எனப்பட்டனர்
பாண்டியருடைய மெய்ப்பாதுகாவலர் - ஆபத்துதவிகள் எனப்பட்டனர்
கொய்சளருடைய மெய்ப்பாதுகாவலர் - கருடன் எனப்பட்டனர்.

1. காலாட்படையிலே வில்வீரர், ஈட்டி வீரர் இருந்தனர் இவர்கள் பஞ்சு பொதிந்த இறுக்கமான மேற்சட்டை அணிந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கேடய வீரர்கள் இவர்கள் வாளும் கூரிய கத்தியும் இடுப்பின் வாரில் சொருகி இருந்தனர்.
3. தரைப்படையினர் (காலாட்படை) பஞ்சு பொதிந்திருந்த இறுக்கமான தொப்பி அணிந்திருந்தனர். வில் அம்பு வைத்திருந்தனர்.
4. யானைப் படையினர் யானைக்கு முழுமையான ஆடைகள் அணிந்திருந்தனர். நன்கு சாணை பிடித்த கூர்மையான கத்திகள் கொம்பில் கட்டப்பட்டிருந்தன. இதனால் பகைவருக்கு பாரிய சேதம் ஏற்படும் யானையில் கட்டப்பட்டிருந்த அம்பாரியில் ஒவ்வொரு பக்கமும் நால்வர் அல்லது ஐவர் இருந்து போர் செய்யக்கூடியவாறு இருந்தது.
5. படைவீரர்களுக்கு ஒழுங்கான போர் பயிற்சி தேகப்பியாச பயிற்சிகள் வழங்கப்பட்டன இதற்கான மண்டபங்களும் இருந்தன. சுருக்கமாகச் சொன்னால் அயர்ந்து தூங்கும் போதும் அஞ்சா நெஞ்சம் உடையோராக இருந்தனர்.

போர் தொடங்கும் போது முரசு அறைந்து கூப்பிடுவர். முடிவில் வெற்றியிலும் முரசு முழங்கும். இவை பண்டைக்கால பொதுவான முறைகளில் சில[11]

இவற்றிற்கமையை கண்ணகி வழக்குரை காவியத்தின் போர் சற்று மாறுபாட்டு நடைபெற்றது. இது கடற்போராகும் யானைப்படை குதிரைப்படை தேர்படை போன்றன இல்லாவிட்டாலும் காலாட்படைக்குரிய கேடய வீரர்கள் வாள் வீரர்கள் அம்புவீரர்கள் கேடய கத்தி வீரர்கள் ஈட்டித்தலை வீரர்கள் எல்லோருமே இருந்தனர். யுத்தம் நடப்பது தரையில் அல்ல கடலில் கப்பலில் நடைபெறுகின்றது. இந்த வீரர்கள் தரைப் போரிலும் கடற்போரிலும் பயிற்சி பெற்ற இயமனை ஒத்தவர்கள்.

**கண்ணகி வழக்குரைக் காவியத்தில் போர்**

போரையும் எம்முன்னோர் ஒரு கலையாகவே கருதினர். எனவே தான் போர்க்கலை எனப்பட்டது. போர் நடக்குமிடம் போர்க்களம் எனப்பட்டது. மீகாமன் தலைமையில் ஆயிரம் கப்பல்கள் நாகமணி பெற செல்லத்தயாராகியதும் சுக்கான் பிடிப்பான் ஏலே ஏலேலோ பாடி கப்பல்கள் புறப்பட்டன.

**வெடியரசன் மனைவி நீலகேசி துர்நிமித்தங்கள் காணல்**
**(வெடியரசன் போருக்கு முந்திய நிகழ்வகள்)**

வட ஈழ மன்னன் வெடியரசன். கடலரசு என சிறப்பாக விளிக்கப்பட்ட மன்னன் முக்குகர்களின் தலைவன். வெடியரசன் மனைவி பல. துர்நிமித்தங்களைக் கொண்ட கனவுகள் காண்கின்றாள். நட்சத்திரங்கள் விழுகின்றன. பல் விழுகின்றது. உலகமெல்லாம் எரிகின்றது. கல் மழை பொழிகின்றது. இப்படிமேலும் பல இவற்றைக் கேட்ட வெடியரசன் ஒரு பொருட்டாகவே கொள்ளவில்லை. வழமைப்படி தனது ஆட்களை கடலுக்கனுப்பி மரக்கலரங்கள் தென்படுகின்றதா என அறிந்து வரும்படி கூறினான் கடல் எங்கும் பரந்து மரக்கலங்கள் தென்படுகின்றன என செய்தி கிடைக்கின்றது[12]

**"பாருமென அவர் சென்று படர்ந்த பாய் மரமிசைய துரமுற உயர்ந்த கொப்பிற் றெத்தியுச்சந்தனிலேறி"** பார்கின்றனர். **"நீத்தமெல்லாம் மரக்கலங்கள் நிறை வந்து தோனுதென்று பார்தவப்போ தூரத்தே பாய்தலைகள் தோன்றிடவே"** - பாடல் 24, பக்கம் - 65

**போருக்குப் பறப்படல்**

கப்பல்கள் கடலில் நிறைந்து போய்த் தெரிகின்றன. உடன் தனபதிகள் சலதி நாரணன் சமரில் நாரணன் பருதி நாரணன் சுருதி நாரணன் என பல வீரர்கள் கடலரசனை வந்து கண்டனர். உடன் படை வீரர்களுக்கு வேண்டிய படைக்கலம் உணவு முதலிய சகலதும் வழங்கினான்.

தனது உடைவாளை மனைவியிடம் இருந்து பெற்றுக் கொண்டான். தனக்காகத் தயாராக நின்ற கப்பலில் கொம்பு தாரை, சங்கு, முதலிய வாத்தியங்கள் முழங்க ஏறினான். இயமனையும் விட கொடிய வீரர்களை மீகாமக் கப்பல்களை வளைவதற்கு ஏறச் சொல்கிறான் பொறிமுலம் பிடிக்கவும் திட்டமிடுகிறான்.

இதே நேரம் மீகாமனும் தனது படை வீரரை நோக்கி பகையரசனுடைய கப்பல்கள் தென்படுகின்றதா என பார்க்குமாறு கூறினான். வெடியரசனுடைய கப்பல்கள் தென்படுகின்றன எனவீரர்கள் கூறினார். மீகானும் முன்னேறுகிறான். இருதரப்புக்களும் சந்திக்கின்றன.

**மீகாமன், வெடியரசன் வாக்கு வாதம்**

மீகாமன் வழிவிடாய் எனக் கேட்கிறான். வெடியரசன் வழியை விடுவதில்லை என்கின்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குவாதம் வலுக்கிறது. நாகமணி வாங்கவிடமாட்டேன். உனது குடலைப் பிடுங்குவேன் என வெடியசன் கூறுகிறான். மீகாமன் அதற்கும் மறுத்து வெடியரசன் யுத்தத்திற்கே அறைகூவுகின்றான். வீரர்கள் முன்னே உன்னை விண்ணுலகம் அனுப்பாவிட்டால் என் பெயர் மீகாமன் இல்லை எனச்சபதம் இடுகின்றான். உனது ஆயிரம் கப்பல்களையும் தீக்கு இரையாக்குவேன். பேராழிக்கு இரையாக்குவேன் என வெடியரசன் சபதம் இடுகிறான். வாக்கு முற்றிய நிலையில் வலிந்து போருக்கு வரலாயினர்.
(பாடல் 79)

**யுத்தம் ஆரம்பம்**

தாரை, தவில், கொம்பு, சின்னங்கள் இடியென முழங்க போர் தொடங்குகிறது. இராம - இராவண யுத்தம் போலவும், பாரத யுத்தம் போலவும் நடந்தது. வெற்றி தோல்வியின்றி நீண்ட நேரம் போர் நடக்கின்றது. கணைகள் மாரி போலப் பொழிகின்றது. பாம்புப் படை, சக்கரப்படை என்போர் சண்டையிடுகின்றனர். வேல் படையினர் வேல் எறிகின்றனர். வில் அம்புப்படை வில்லாளர் வில்லுகளால் அம்புகள் எய்கின்றனர். கவன்களால் கல்லுகள் எய்கின்றனர். கொம்பு ஊதிய நிலையில் உக்கிரமான போர் நடக்கின்றது. வாளை உருவி வெட்டுவது ஒரு புறம் கொதி எண்ணெய்யை கோலினால் எறிகின்ற கூட்டம் ஒரு புறம். கொதி எண்ணெயை சாடியுடன் எறிவார் ஒரு புறம் இரும்புப் பாளம் காய்ச்சி எறிவார் ஒரு புறம் இவையெல்லாம் ஒரு புறம் இருக்க வெடி அம்பு விடுவார். இவையெல்லாம் இருக்க வெட்டும் சமர் மறுபுறம் ஒருவரை ஒருவர் வெட்டி சமர் செய்கின்றனர்.

**வெட்டும் சமர்**

முட்டியோடு வெட்டுவாரும் கைகளை வெட்டுவாரும், குற்றிகள் விழுவது போல வெட்டுச் சமரில் வீழ்ச்சியடைகின்றனர். வெட்டு பலவிதம் கூப்பிட்டு வெட்டுவார், மோதி வெட்டுவார், ஓடி வந்து வெட்டுவார், கைகள் அற்று கடலில் விழவெட்டுவார். இப்படி வெட்டு நடக்கிறது. இறுதியில் மீகாமன் வெட்டுகிறான். வீரர்கள் மடிகிறனர். எங்குமே பிணக்குவியலாக்கினான். இதனால் உயிர் விடுவோர், கரங்களிழந்தோர், கழுத்து அறுபட்டு விழும் வீரர்கள் சிரம் சிதறியோர் குறிப்பாக எதிர்த்த எல்லோரையும் கைவாள் கொண்டு பிணமாக்கினான். முக்கியமான கப்பல்களையும் மீகாமன் பிடித்துவிட்டான்.

**குத்துச் சமர்**

தொங்கனி என்ற ஆயுதத்தால் குற்றிய சமரில் சரீரம் கிழிய கதையால் மோதி வெட்டுவர். பார்த்தனும் கண்ணனும் பொருத பாரதப் போர் இருந்தாம்.

**வெடியரசன் தோற்றம்**

கடலரசன் (வெடியரசன்) படைகள் எல்லாம் கடலுள்ளே போதிகை போல் மிதக்கின்றன. வணிகர்களின் முத்துப் பெட்டி போல் மிதக்கின்றன. தலை போன உடல்கள் நீருக்கு வெளியே நிரம்பக் கிடக்கின்றன. மீகான் வெட்டிய வீரர்கள் எல்லாருமே இறந்துபட்டனர். கறுப்புச் சிங்கம் போல மீகாமன் கண் சிவந்து நின்ற போதும் வெடியரசன் காவிரிப்பும்பட்டினம் போன உன்னை விடமாட்டேன் என முழங்கி ஆர்ப்பரித்தான். கடைசியாக 500 கப்பல்கள் வெடியரசனை வளைத்து நின்றன. வெடியரசன் திகைத்துப் போய் நின்றான்.

இருந்தும் தோற்றால் நகைப்பார். எனவே போரிட்டால் வீர மரணம் உண்டு என மீண்டும் வீரர்களைத் திரட்டி மீகாமன் படைக்குள் புகச் சொன்னான். மீகாமன் சிங்கம் போல போரிட்ட போது வீரர்கள் குற்றுயிராய் மிதந்தனர். வீரர்கள் எல்லோரும் மடிந்து போக வெடியரசன் தனித்த தாமரை போல கப்பலில் நின்றான்.

**'வெட்டியமர் செய்த வீரரெல்லாம் பட்ட பின்**
**கட்டாண்மை மிக்க கடலரசன் - அவ்விடத்தே**
**தட்டேதும் இல்லாத தாமரை போல் வேடிதனில்**
**இட்டபடி இ∴தெனவே நின்றான்''** (பாடல் 114 -பக்84)

**'வாளாலும் வேலாலும் கொன்றிடா வகை செய்து குறித்துப் பிடியும்''** என்று மீகாமன் கட்டளை இட வெடியரசனைப் பிடித்து பாய்மரக் கப்பலிலே கட்டினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீரநாரணதேவன் போர்**

வெடியரசன் பிடிப்பட்டதும் வீரன் ஒருவன் பிணத்தைத் தெப்பமாகக் கொண்டு கரையேறி விழுந்த பிணம் தன்னைப் பற்றி நன்றியுள்ள தெப்பமாக நினைந்து நீலகேசிக்கு தகவல் செல்கிறான். அவள் தரையில் விழுந்து அலறினாள். வேட்டைக்குப் போகப் புறப்பட்ட வீரநாரணதேவன் கப்பல்கள் எல்லாம் ஒன்றுதிரட்டி வெடியரசனை மீட்க புறப்படும் போது மீகாமன் கப்பல்கள் நாகபகுதியில் உள்ள நாகமலைக்குப் போய்விட்டன. அங்கு நாகவரசைபோற்றி கனிகள் வைத்து பாகுடம் (திறை) கொடுத்து வணங்கி நாகமணி பெற்றுத் திரும்பியபோது வீரநாரணன் சண்டையிட வருகிறான். வெடியரசன் மூலம் சண்டையிட வேண்டாம் என ஓலை விடுக்கப்படுகிறது. எனினும் சண்டை மூண்டது. வில் வளைத்தனர். மேகதாரைபோல் அம்பைச் சொரிந்தனர். கவன் மூலம் கோல், வாள், தடி, கூரான ஈட்டிகள், சக்கரம், வாள், காச்சிய வெள்ளீயம், சூடாக்கிய எண்ணெய் என பல்வகை ஆயுதப் போர் செய்தனர்.

மத்தளம், பேரிகை, தாரை, கொம்பு, வெண்கலம், சல்லாரி, சேகண்டி எல்லாமே முழங்க இருபக்கப் படையும் பொருது ஆர்ப்பரித்தனர். முந்திய போரிலே பெரும்பாலும் அம்பைச் சொரிதலும் வாள் வெட்டும் காணப்பட இந்தப் போரிலே பல ஆயுதங்கள் எறி கருவிகளாக உள்ளன. எண்ணை காய்ச்சி எறிவாகி, மரக்கலத்தின் கீழ் மஞ்சிரியை அறுப்பார். சுக்கானை அறுப்பார். இப்படி போர் நடக்கும் போது இரவு வர போர் நிறுத்தப்படுகிறது. மறுநாள் போர் மீண்டும் தொடங்குகிறது.

**வெட்டுப் போர் வீரநாரணம் மரணம்**

இப்போரிலே வெட்டுதல் மேலோங்கிக் காணப்படுகிறது. பொர(போர் செய்தல்) எதிர் வெட்டுவார். எதிரெதிர் முட்டுவார். வரிசைகளை தூளாக வெட்டுவார். எங்குமே வாள் வெட்டு எனவே வீரநாரணண் வெட்டி ஆர்ப்பரிக்கிறான். மீகாமன் கோபத்துடன் வேல் எறிந்து மட்டுமல்ல வாளாலே தாறுமாறாக வெட்டினான். வீரநாரணண் வெட்டி ஆர்ப்பரிக்கிறான். வெட்டுப்போரிலே வீரநாரணன் கொல்லப்படுகிறான்.

**விளங்கு தேவன் போர்**

யாழ் இசை கேட்டு மற்போரும் பார்த்துக் கொண்டிருந்த விளங்குதேவனுக்கு வெடியரசன் வீரநாரணன் பட்ட செய்தி சொல்லப்படுகிறது. முக்கியர் கோமகன் விளங்கு தேவன் கப்பல் முழுவதற்கும் கொடி கட்டி மேல்வாள். சிறுவாள் ஏந்தி, எறிவானம், சூலம், எறிகோல், ஈட்டி, முனைக்கட்டை, கருவாள், அம்பு யந்திர வில்லு, மழுஅம்பு, பிறைஅம்பு, பிரட்டம்பு. கவுந்தி எல்லாவற்றுடன் படைத் தலைவர்களை அழைத்து 'மீகாமன் நாகமணி வாங்கினதும், என் தமையன் பட்டதும் கேட்டிருந்தீர் முக்கியரே'' என்று விழித்தவுடன் வீரர்கள் இக்கணமே வெட்டி மீள்வோம் எனச் சபதமிட்டனர்.

சேனை பதினையாயிரம், பேர், வில் வீரர்களும், புலிபோல் வந்தனர். ஒரு இலட்சம் சேனைகளுடன் விளங்குதேவன் நிற்கிறான். வீரர்களுக்கெல்லாம் பொற்சிலம்பு, கவரிகள், கையிலிடும் கவசம் எல்லாம் கொடுத்து படைகளை வெட்டுகிறான். நான் மீகாமனைக் கொல்லுவதைப் பார்த்து போங்கள் எனக் கூறுகிறான்.

போரில் ஈடில்லாத தலைவன் ஆன விளங்குதேவன் வீரவண்ணக்கச்சை கட்டி, சொட்டை கட்டி, கைகவசம், வீரக்கழல், சிலம்பு, ஐம்பொன் மாலை அணிந்து போருக்கு ஆயத்தமாகிறான். வாளை உறையிலிட்டுப் பாயும் புலி போல கப்பலில் ஆஞ்சான் கயிறை இறக்கி போருக்கு வருகின்றான் (பக்கம் 114)

**இதுபெரும் கப்பற் போராகும்**

முரசு மணியோசை தாரை கொம்பு சின்னம் ஊதி சண்டை தொடங்கினான். மூவாயிரங் கப்பல் போரிடுகின்றன. படகுகள் படகுகள் மேல் மோத, பாய்கள் பாய்களை முட்ட, முக்கியர் கோன் வீரர் ஆர்பரித்து வெட்டத்தொடங்கினார். மீகாமன் கப்பலின் முகரிகள் (முகப்புக்கள்) முறிந்தன. இரவாகியது கப்பல்கள் கல்லுவிட்டு ஒதுங்கியது. அதாவது நங்கூரம் பாய்ச்சினான். எழுவானில் (கிழக்கில்) சூரியன் உதித்ததும் அறுசுவை உணவு உண்டு மீண்டும் போர் தொடங்குகின்றது.

கப்பல் முகப்புக்களில் கைகள் சிதறிட, கடல் நுரைகள் சிதறிட வீரர்கள் வெட்டி வெட்டி பெரும் போரிட்டனர். அம்புகள் பொழிவார் எறிகோல்கள் எறிவார், தீயம்பு சொரிவார், பஞ்சரம் எறிவார், பாம்புகள் எறிவார், (குடத்தில் அடைத்திருக்கும் பாம்பு) மேலும் இரு பக்கமும் வெட்ட வெட்ட பிணங்கள் கடலில் விழ மரக்கலங்கள் கரை தட்டின. எனவே விளங்கு தேவன் மீகாமனை கூவி அழைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபக்கப்படைகள் இறந்துவிட்டன. நாம இருவரும் சண்டையிடுவோம் என இருவரும் வாள் போர் செய்கின்றனர் வேங்கை போல் பாய்ந்தனர்.

இடையில் கொடும் போரைப் பார்த்த வெடியரசன் மீகாமா என் தம்பி இளையவன் ஆவான். அவன் உன் தம்பியே என்று ஆணையிட்டான் இருவரும் ஒருமிக்க ஆயுதத்தினை வைத்தனர். மீகாமன் வெடியரசனை விடுவித்து வேண்டிய பொருளும் கொடுத்து விளங்கு தேவனையும் உடன் செல்லுமாறு விடை கொடுத்து அனுப்பினான்.

**தொகுப்புரை**

1. இதுவரை குறிப்பிட்ட விடயங்களைச் சுருக்கமாக நோக்கினால் சிலப்பதிகாரம் போல கண்ணகி வழக்குரை சமூகத்தில் அறிமுகமாகாவிட்டாலும் இவ்விரு கலைகளும் பெரிதாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பதனை முன்னரே இருந்த முறைகளுடன் காட்டி தெளிவாக்கி கண்ணகி வழக்குரையில் உள்ளதையும் வகுத்து இக்கட்டுரை மூலம் காட்டப்பட்டுள்ளது.

2. நாகமணி பெற போவதற்கு கப்பல் கட்ட வேண்டியுள்ளது. அதற்கான மரம் பெறுவதற்கு தென்னிலங்கை செல்ல தூரிகையோட்டு காதை என தனியொரு அத்தியாயமே உருவாக்கிக் காட்டி மரம் பெற்று வருவது காட்டப்பட்டுள்ளது. கடல் முழுவதும் கட்டுமரமாகவே காணப்பட்டது. என்ற விடயம் கப்பல் கட்டுதல் என்பன இங்கு தெளிவாக்கப்பட்டுள்ளது.

3. கப்பல் கட்டுதலை நம் முன்னோர் கலையாகவே ஏற்றனர் என்பதற்குரிய தெளிவு பண்டைய முறைகளுடன் தெளிவுபடுத்தி வழக்குரையில் எவ்விதம் கப்பல் கட்டப்படுகின்றது என்பதும் இங்கு விபரிக்கப்பட்டுள்ளது.

4. மீகாமன் - வெடியரசன் போரிலே தரைப்படை, கடற்படை, இரண்டிலும் பயிற்சி பெற்ற வீரர்கள் சண்டையிடுகின்றனர். வழமையான போர்களை விட உக்கிரமான போர் பல விதமான ஆயுதங்களுடன் நடைபெறுவதை மிக தெளிவாக விளக்கமாக இவ் ஆய்வில் காட்டப்பட்டுள்ளது.

5. தமிழர் பாரம்பரியமானது போரையும் கலையாகவே கொண்டது. போரிலே தோல்வியுற்ற மன்னன் துவண்டு விழமாட்டான். அடுத்த இலக்கை நோக்குவது மரபு. இங்கு போரிலே பலவித நுட்பங்கள், உத்திகள் பாவிக்கப்படும் அவையெல்லாம் ஒரு விதத்தில் கலை போன்றே அமையும். போர் மட்டுமல்ல கப்பல் கட்டுவது கூட நமது பண்டைய தமிழரது கலையே ஆகும். அதற்கேற்றபடி கண்ணகி வழக்குரைக் காவியத்தின் போர்க்கருவிகளும் காணப்பட்டுள்ளன.

**தொகுப்புரை**


01. அடிக்குறிப்புக்கள்
சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டில் 9ஆவது ஆக இடம் பெறும் பட்டிப்பாலையில் (184 - 194 பாடல் வரிகள்)

02. மதுரைக்காஞ்சி - 2030வரிகள்

03. திருவேலங்காட்டு செவ்வோடு

04. இந்திய வரலாறு - இர.ஆலயசுந்தரம் 1978 - பக்கம் 382 - 389, 435 - 495வரை

05. வல்வெட்டித்துறை கடலோடிகள்

06. கண்ணகி வழக்குரை தூரிகை போட்டு கதை - பக்கம் 47

07. கண்ணகி வழக்குரை தூரிகை போட்டு கதை - பாடல் 203

08. கண்ணகி வழக்குரை பக்கம் 54 பாடல் 224 வரி 3 ஆவது

09. சங்க இலக்கியமும் சமூகமும் - 2007

10. தென்னிந்திய வரலாறு நீலகண்ட சாஸ்திரி - பக்கம் 07

11. கண்ணகி வழக்குரை காவியம் - பக்கம் 65 பாடல் 24




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுரை V

# கண்ணகி வழக்குரைக் காவியத்தின் இலக்கியநயம்



ஆய்வாளர் . திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
(தலைவர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்)

**அறிமுகம் :**

இலங்கையில் வழிபடப்பெறும் பெண் தெய்வங்களுள் கண்ணகியும் குறிப்பிடத்தக்க பெண் தெய்வம் ஆவாள். அதிலும் இங்கு வாழும் தமிழர்களாலும், சிங்களவர்களாலும் (பத்தினி வழிபாடு) கண்ணகி வழிபடப் பெறுவது மிக முக்கியமானதோர் அம்சமாகும். சேர நாட்டில் சேரன் செங்குட்டுவனால் கண்ணகிக்கு விழா எடுக்கப்பட்டபோது இலங்கை மன்னனான கயபாகு அங்கு கலந்து கொண்டமை பற்றி சிலப்பதிகாரம் வருமாறு குறிப்பிடுகின்றது.

**கடல் சூழிலங்கைக் கயவாகு வேந்தனும்**
**எந்நாட்டாங்கண் இமயவரம்பனின்**
**நன்னாட் செய்த வேள்வியில்** (சிலம்பு, வஞ்சி: வரந்தரு காதை 16-162)

இமயவரம்பன் என இங்கு குறிப்பிடப்படுபவன் செங்குட்டுவன் ஆவான். மேலும் சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரையில் (3) கடல்சூழிலங்கைக் கயவாகு என்பான் ஆடித் திங்களில் கண்ணகிக்கு விழா எடுத்து சிறப்பிக்க அவனது நாடு மழை வளம் பெற்று சிறப்புற்றதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறு கண்ணகி வழிபாடு இலங்கையில் கயவாகு மன்னன் காலம் தொடக்கம்வழங்கி வருகின்றமையை அறிய முடிகின்றது.

தமிழர்களிடையே குறிப்பாகக் கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு பிரசித்தமானது. கண்ணகியின் கதை உயர் செந்தமிழில் சிலப்பதிகாரத்தில் போற்றப்பட்டமையைப் போலவே பன்னெடுங்காலமாக வாய்மொழி மரபிலும் வழங்கி வந்திருக்கின்றது. இலங்கையில் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் வழங்கும் ‘சிலம்பு கூறல்'', யாழ்ப்பாணத்தில் வழங்கும் “கோவலனார் கதை'', கிழக்கிலங்கையில் வழங்கும் “கண்ணகி வழக்குரை'' ஆகியவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். சிலப்பதிகாரத்தை அடியொற்றியதாக இக் கதைகள் அமையினும் சிற்சில வேறுபாடுகளை ஒவ்வொன்றிலும் காண முடியும். கதை வளர்த்துச் செல்லப்படும் முறைமை, எடுத்துரைப்பு முறைமை, பாத்திர உருவாக்கம், நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு முதலாவனவற்றில் இவ்வேறுபாடுகளை அவதானிக்கலாம்.

கிழக்கிலங்கையில் வழங்கும் “கண்ணகி வழக்குரை'' ஆரியச் சக்கரவர்த்திகளுள் ஒருவனான சயவீர சிங்கையாரியனால் (செகராச சேகரன்) இயற்றப்பட்டதாகக் கூறப்படுகின்றது. காங்கேயன் என்ற பெயர் நூலின் பலவிடத்தும் காணப்படுவதால் காங்கேயன் என்பவனே இந் நூலை இயற்றியிருக்க வேண்டும் என வி.சீ.கந்தையா பதிப்புரையிற் குறிப்பிடுகின்றார். எனினும் காங்கேயன் என்பது கங்கை குலத்து ஈசன் எனப் பொருள்பட்டு பொதுப் பெயராக நிற்கும் எனவும் 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த சயவீர சிங்கையாரியனே இதன் ஆசிரியனாவான் என்றும் எவ்.எக்சி. நடராசா கருதுகின்றார். (ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு 1970: பக். 59)

கண்ணகி கோயில்களில் கண்ணகி வழிபாட்டுக் காலங்களில் படிக்கப்பட்டும் இக் கோயில்களில் போற்றிப் பாதுகாக்கப்பட்டும் வந்த கண்ணகி வழக்குரை என்னும் காவியம் முன்னர் ஓலைச் சுவடிகளில் இருந்தது. இதன் சில பகுதிகள் பின்னர் வி.சீ. கந்தையா, எவ்.எக்.சி. நடராசா போன்ற குறிப்பிடத்தக்க சிலரால் அச்சில் வெளிக் கொணரப்பட்டன. இக் காவியத்தை முழுமையாக அச்சில் பதிப்பித்து வெளியிட்டவர் வி.சீ.கந்தையா ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அமைப்பு முறை:**

வரம் பெறு காதை தொடக்கம் குளிர்ச்சிக் காதை வரை 11 காதைகளை இது உள்ளடக்கியுள்ளது. சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்து நிகழ்ச்சிகள் இதில் இல்லை. வழக்குரைக்கும் பகுதியும் அதையடுத்து வரும் மதுரையை எரித்தலும் மற்றும் குளிர்ச்சியும் பிரதானமாக அமைவதால் இப்பகுதிகளுடன் நூல் நிறைவுறுகின்றது. கண்ணகி வழக்குரையில் வரும் காதைகளும் அவற்றின் உட்பிரிவுகளும் வருமாறு:

01. வரம்பெறு காதை அ) கோவலனார் கதை ஆ) அம்மன் பிறந்த கதை
02. கப்பல் வைத்த காதை : அ) மீகாமன் கதை ஆ) தூரியோட்டு இ) கப்பல் வைத்தல்
03. கடலோட்டுகாதை : அ) வெடியரசன் போர் ஆ) நீலகேசி புலம்பலும் வீரநாரணன் கதையும் இ) மணி வாங்கின கதை ஈ) விளங்கு தேவன் போர்
04. கலியாணக் காதை
05. மாதவி அரங்கேற்று காதை
06. பொன்னுக்கு மறிப்புக் காதை அ) பொன்னுக்கு மறிப்பு ஆ) இரங்கிய காதல்
07. வழிநடைக் காதை அ) வயந்தமாலை தூது ஆ) வழிநடை
08. அடைக்கலக் காதை
09. கொலைக்களக் காதை அ) சிலம்பு கூறல் ஆ) கொலைக்களக் கதை இ) அம்மன் கனாக்கண்ட கதை ஈ) உயிர் மீட்புக் கதை
10. வழக்குரைத்த காதை
11. குளிர்ச்சிக் காதை அ) குளிர்ச்சி ஆ) வழக்குரைக் காவியம்

**கண்ணகி வழக்குரைக் காவியத்தின் இலக்கிய நயம்:**

கண்ணகி கோயில்களின் பெட்டகங்களில் பாதுகாக்கப்பட்டு கண்ணகி விழா இடம்பெறும் வைகாசி மாதத்தில் படிக்கப்பட்டு வரும் கண்ணகி வழக்குரைக் காவியம் அச்சுருப்பெறுவதற்கு முன்னர் தெய்வாம்சம் பொருந்தியதும் பிறர் கைகளில் தரப்படத்தக்கதல்லாததும் குறிப்பாகக் கோயிலுக்கு வெளியே அனுமதிக்கப்படாததுமாகப் போற்றப்பட்டது. அந்நிலையில் அதனை இலக்கியப் பனுவலாகவும் பார்த்து அதிலுள்ள இலக்கிய நயத்தினைச் சுவைக்கும் அல்லது அதன் இலக்கிய அம்சங்களை எடுத்துக் கூறும் முறைமை இல்லாதிருந்தது. இன்னுமொரு வகையிற் சொல்வதானால் அத்தகையதொரு வாய்ப்பு அற்றிருந்தது. இக் காவியம் பதிப்பிக்கப்பட்டமையும் மக்கள் மத்தியில் பரவலாக்கம் செய்யப்பட்டமையும் இதனை இலக்கியப் பனுவலாகவும் சுதந்திரமாக நோக்குவதற்கான ஒரு சூழலைத் தோற்றுவித்தது. இத்தகைய நிலைமை அது பற்றிய ஆய்வுகளுக்கான வழியையும் திறந்து விட்டது.

இன்று அதனை வழிபாட்டிற்குகந்த பக்திக்குரிய காவியமாகவும் அதேவேளை இலக்கியப் பனுவலாகவும் நோக்குகின்ற முறைமை சமாந்தரத் தளத்தில் இயங்குவதைக் காண முடிகின்றது.

இக் காவியத்தின் இலக்கிய நயத்தினைப் பல்வேறு அம்சங்களினூடாக நோக்க முடியும். இதிற் பயன்படுத்தப்பட்டுள்ள யாப்பு முறைமை, அணிப் பயன்பாடு, வர்ணனை, மொழிப் பிரயோகம், எடுத்துரைப்பு முறைமை, பாத்திரங்களின் உருவாக்கம், உரையாடற் பாங்கு, நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப்பு, கதை வளர்த்துச் செல்லப்படும் பாங்கு, பல்வேறு விடயங்கள் ஊடாக கண்ணகி வழக்குரை என்னும் இக் காவியத்தின் இலக்கியப் பண்புகளை இனங் காணமுடியும்.

**யாப்பு:**

செய்யுள் வடிவிலமைந்த இலக்கியப் பனுவலுக்கு யாப்பு மிக முக்கியமானது. காலத்திற்குக் காலம் வெவ்வேறு யாப்பு வடிவங்கள் முக்கியத்துவம் பெற்று வந்திருக்கின்றன. கண்ணகி வழக்குரைக் காவியம் பெரும்பாலும் அந்தாதித் தொடையில் அமைந்து அகவல் அடிகளும் வெண்பா, தாழிசை என்பனவும் கலந்ததொரு விருத்தக் காப்பியமாக விளங்குகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தாதித் தொடை:
உதாரணம்:

நாட்டுகின்ற பூம்புகாரில் நற்குடியில் உள்ளவரில்
ஈட்டு நிதியால் மிகுந்த இயல்வணிகர் மாசாத்தார்
கோட்டு சிலை வாணுதலார் கொடியிடையார் மனைவியுடன்
வாட்டமறவுடன் மகிழ்ந்தே வாழ்ந்திருக்கும் காலையிலே

காலையிலேகாரிகையாளர் கதிரவனைக் கை தொழுது
.......................................................................(கோவலனார் பிறந்த கதை : 3-4)

இக்காப்பியம் கலி விருத்தங்களை "நடை" எனவும் "நடைசாரி" எனவும் குறிப்பிடுகின்றது. சந்த விருத்தங்களை "சிந்து" எனக் காணமுடியும்.
உதாரணமாக:

கணையனைய விழி மடவார், வாள் ஒத்த கண் மடவார், வடுத்தாவு விழி மடவார் (மாம்பிஞ்சின் பிளவை ஒத்த கண்கள்), பணையொத்த தோள் மடவார் என கண்ணகியின் கண் மற்றும் தோள் என்பன உவமிக்கப்படுவதனையும் எழுமதிபோல் மெல்லியலார் முகமிலங்க என மாசாத்தாரின் மனைவியின் முகம் உவமிக்கப்படுவதனையும், பிடியன்ன நடை மாது என பாண்டிமாதேவியின் நடை உவமிக்கப்படுவதனையும் குறிப்பிடலாம்.

மேலும் கோவலனைப் பிரிந்த மாதவியின் நிலையைக் கூறுவதாக அமையும் பின்வரும் பாடலில் கோவலன் - மாதவி ஆகியோருக்குப் பல உவமைகள் கூறப்படுவதைக் காணலாம்.

மாதாவிட்ட மகவதுபோல் மழையைவிட்ட பயிரதுபோல்
போதுவிட்ட வண்டதுபோல் புள்ளுவிட்ட ஓடையைப்போல்
கோதுற்ற காவேரியிற் கோவலரை அகற்றிவிட்டு
ஏதற்றார் தங்களைப்போல் ஏந்திழையும் மனைபுகுந்தாள்.

(பொன்.ம.காதை: இரங்கிய காதல் 91)

இங்கு மாதா, மழை, போது, புள் என்பன கோவலனுக்கும் பயிர் மகவு, பயிர், வண்டு, ஓடை என்பன மாதவிக்கும் உவமிக்கப்பட்டுள்ள நுட்பம் நுனித்துணரப்பாலது.

இதிகாச புராணச் செய்திகளும் உவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளமை நயந்து நோக்குதற்குரியது. உதாரணமாக: பாண்டவர்செய் படுகளம் போல், திரிபுரத்தை சிவன் எரித்த செயல் போல, அனுமனை இந்திரசித்து கட்டியதுபோல என்பன போன்ற பல உவமைகள் பொருத்தமுறப் பயன்படுத்தப்பட்டுள்ளமையைக் குறிப்பிடலாம்.

**எடுத்துரைப்பு முறையும், மொழிக் கையாளுகையும்:**

கேட்போரை அல்லது வாசகரை முன்னிலைபபடுத்தியதான உரையாடற் பாங்கினையும், அதேவேளை ஒரு பாத்திரம் தன்னைத்தானே அறிமுகம் செய்யும் முறைமையினையும் இக் காவியத்திற் காணலாம்.

வாங்குசிலை மீகாமன் வண்புகார் தனைவிட்டுத்
தேன்கமழும் தொடைமார்பன் திறல்புனையும் வெடியரசன்
ஓங்குபெரும் புகழ் அனைத்தும் உற்றபோர் செய்தனவும்
ஆங்கறிந்த படியுரைத்தேன் அமர்ந்திருந்து கேளும் எல்லாம்.

மக்களை முன்னிலைப்படுத்தியதாகவும் மக்களுக்கு முன்னே படிக்கப்பட்டதாகவும் அமைந்திருப்பதற்கு மேற்குறித்த செய்யுளை ஆதாரமாகக் காட்டலாம்.

தவிரவும் எளிமையானதும், இலகுவாகக் புரியக் கூடியதுமான மொழி நடையில் பெரும்பாலும் அமைந்து படிப்போருக்கு கதை விளக்கத்தைத் தருகின்றது. கப்பல் வைத்த காதை, அரங்கேற்றுகாதை முதலான சில காதைகளில் இடம்பெறும் சில கலைச் சொற்கள் தவிர்ந்த ஏனைய காதைகள் கதையைப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே மட்டக்களப்புப் பேச்சு வழக்கினை இக்காப்பியம் கையாண்டுள்ளது. விடுப்புப் பண்ணுதல், பணிவிடை, அடசுதல், வாண்டிச்சைப்பட்டிருத்தல், கழிசறை, அடிச்செழுப்பினாற்போல் முதலானவற்றை உதாரணமாகக் கூறலாம். அத்துடன் மட்டக்களப்பில் பயன்படுத்தப்பட்ட (இன்றும் கிராமப் புறங்களில் பயன்படுத்தப்படுகின்ற) அணிகலன்கள் சிலவற்றை இந்நூலில் காணமுடியும். உதாரணம்: கொப்புவாளி, மேல்வாளி, உட்கட்டு, காறை, காலாழி, தண்டை, பீலி முதலானவை.

**வர்ணனைகள்:**
இயற்கை வர்ணனைகளை இந்நூலில் காணலாம். அத்துடன் பாத்திரங்களை அறிமுகம் செய்யும் போதும் வர்ணனைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை அவ்விலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளன.

உதாரணம்:
**சோலைக்குள் மதுவையுண்டு தும்பியிசை பாடல்செய்ய**
**ஆலித்து மயிலாட அன்னங்கள் பார்த்துநிற்க** (கட.காதை: மணிவாங்கின கதை 149)

**ஓசை நயம்:**
கதை நிகழ்ச்சிகளுக்கேற்ற சந்தங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது இக் காவியத்தின் சிறப்பிற்கு மேலும் வளம் சேர்த்துள்ளது. யுத்தக்காட்சிகளிலும், கப்பலோட்டத்திலும் மிக் சிறப்பாக இதனைக் காணமுடியும்.

உதாரணம்:
யுத்தக்காட்சி: மீகாமன் - விளங்குதேவன் போர்
**பிடிபட்டவரைச் சிலர்தான் கொடுவார்**
**பிரியத்தோடுறு சரமது விடுவார்**
**வெடிபட்டவரைக் கடலிடை விடுவார்** (கட.கா: விள. தே.போர்:316)

மீகாமனுக்கும் வெடியரசன், வீரநாரணன், விளங்குதேவன் ஆகியோருக்கும் இடையே நடைபெற்ற போரில் இத் தன்மையினைக் காணலாம். இக் காட்சிகள் கம்பராமாயண யுத்தகாண்டத்தை நினைவூட்டகின்றன. அது போல போர் நடைபெற்ற இடத்தில் கூத்தாடும் அணங்குகள் பற்றிய சித்திரிப்பு கலிங்கத்துப்பரணியை நினைவூட்டுகின்றது.

மாதவியின் ஆடல் பற்றிய பகுதியில் வரும் 'தகதக திகுதிகு திமிகிட திமிகிடதாந் தளங்கு' எனத் தொடங்கும் பாடல் கூத்து முறைமையை நினைவிற்குக் கொண்டு வருவது.
இவை இக் காவியத்தின் இலக்கியச் செழுமைக்கு வலுச் சேர்த்துள்ளன.

**பாத்திர உருவாக்கமும், நிகழ்ச்சியமைப்பும், உரையாடற் பாங்கும்:**
கண்ணகி, கோவலன், மாதவி முதலான முக்கிய பாத்திரங்களுடன் கதையை வளர்த்துச் செல்வதற்குப் பயன்பட்டுள்ள மாசாத்தார், மாநாய்கன், பாண்டிய மன்னன், வெடியரசன், வீரநாராயணன், விளங்குதேவன், நீலகேசி, வயந்தமாலை, சித்திராபதி, பொற்கொல்லன், மாதரி முதலான பல்வேறு கதா பாத்திரங்களும் கவனமுற உருவாக்கப்பட்டு கண்ணகியின் வழக்குரையை மையப்படுத்தும் விதமாக கதைக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

வழக்குரைத்த பகுதியில் கண்ணகியின் சிலம்பின் மணி பெற்றுள்ள முக்கியத்துவம் பாண்டியன் தன் தவறை உணரவும், கோவலன் நிரபராதி என்பதை நிரூபிக்கவும் துணை நின்றது. எனவே கண்ணகியின் காற்சிலம்பிற்கு நாகமணி பெறுவதனை இரண்டு காதைகளில் விளக்கி போர் நிகழ்ச்சிகளினூடாக அதன் மதிப்பையும் புலவர் உயர்த்தியுள்ளார். கூடவே தமிழரின் போர்க் கலைத் திறனையும் வெளிப்படுத்தியுள்ள நயம் சிறப்பிற்குரியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'தருகெனத் தந்துதான் முன்வைப்பக்**
**கண்ணகி அணிமணிக் காற்சிலம்புடைப்ப**
**மன்னவன் வாய் முதல் தெறித்தது மணியே"** (சிலம்பு: மதுரை: வழ.கா 72)

என்று சுருக்கமாக சிலப்பதிகாரம் முடித்தக் கொண்ட பகுதியை வழக்குரை ஆசிரியர் மிக விளக்கமாகவும் ஆர்வ மூட்டும் தன்மையுடனும் வர்ணித்துள்ளார். கண்ணகி வருகென அழைத்தபோது பாண்டியனின் மாளிகையில் மாணிக்கப் பெட்டியிலே வைக்கப்பட்டிருந்த கண்ணகியின் காற்சிலம்பு அவளது கைக்கு வந்து சேர்ந்தமையையும் விளக்கும் விதம் அலாதியானது.

இரங்கிய காதல் பகுதி தலைவனைப் பிரிந்த (மாதவி) காதலியின் பிரிவுத் துயரை மிக உருக்கமாகக் கூறுவதாக அமைகின்றது. தம்மைப் பிரித்த காவிரியை மாதவி வைவதாக அமையும் பாடல்களும் அவள் மேல் இரக்கம் தோன்றுமாறு சித்தரிக்கப்பட்டுள்ளன.

அவலச்சுவையினையும் இக் காவியத்தில் அதிகம் காணலாம். நீலகேசி புலம்பல், கண்ணகியின் துயரம், மாதவியின் துயரம், கோவலன் தவிப்பு (மரண தண்டனை நிச்சயிக்கப்பட்டபோது) முதலான பகுதிகள் எடுத்தக் காட்டத்தக்கன.

உரையாடற் பாங்கினைப் பொறுத்தவரை இக் காவியத்தில் வரும் பாத்திரங்களின் உரையாடற் சித்தரிப்பு மேடை நாடகத்தினை மனக்கண்முன் கொண்டுவருகின்றது. தவிரவும் பாத்திரங்களின் பண்புகளை இனங்காணவும் வழி வகுத்துள்ளது. மதுரைக்குப் புறப்படும் மன்னர் கோவனுக்குக் கண்ணகை அறிவுரை கூறுவனவாக அமையும் பகுதி நயமிக்க பாடல்களைக் கொண்டவை.

அதுபோல பொன்னுக்கு மறிப்பு என்னும் பகுதியில் இடம்பெறும் மாதவி சித்திராபதி உரையாடலும் முக்கியமானது. தன் குலப்பெருமையை நிலை நிறுத்த விரும்பும் மரபு சார்ந்த தாய் ஒருத்திக்கும் அதிலிருந்து சிறிது நெகிழ்ச்சித்தன்மையுடன் வாழ நினைக்கும் மகளுக்கும் இடையிலான தலைமுறை மாற்றத்தை அடையாளப்படுத்தும் விதமாக இது கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

தொகுப்பு:

மேற்குறித்த பண்புகளின் அடிப்படையில் கண்ணகி வழக்குரை காவியத்தை இலக்கிய நயமிக்க பனுவலாக அடையாளப்படுத்த முடியும்.

திருக்குறள், சிலப்பதிகாரம், வில்லிபாரதம், நளவெண்பா, கம்பராமாயணம் ஆகிய இலக்கியங்களின் செல்வாக்கை இதில் காணலாம்.

எனவே தொகுத்து நோக்கும்போது கண்ணகி கோயில்களில் திருவிழாக் காலங்களில் பயன்படுத்தப்படும் தெய்வப் பனுவலாகப் பயின்று வரும் கண்ணகி வழக்குரை இன்று அது கூறும் போர், கலை நுட்பங்கள், ஆடல், பாடல், வாழ்க்கை முறை, இலக்கிய நயம், சமய நிலை முதலான பல்வேறு விடயங்கள் குறித்து ஆய்வு செய்வதற்கான வழியை ஏற்படுத்தியிருக்கின்றது.

செந்நெறி இலக்கிய வரிசைக்கு நிகராக வாய்மொழி வழியாக வளர்ந்திருந்த இலக்கியமாக மிளிரும் இந்நூலானது 'நூலின் பயனாகக் கருதப்படும் நல் வாழ்வினை" வலியுறுத்தி நிறைவுறுகின்றது.

**கண்ணகையார் வழக்குரையைக் காதலித்தக் கேட்போரும்**
**பன்னுதமிழ் இயலிசையின் பலகலையாய்ப் பாடினோரும்**
**மன்னவரும் மறையவரும் மனமகிழ்ந்து கேட்பவரும்**
**திண்ணமுடன் நாள்தோறும் தீதகல வாழ்வாரே** (வழக்குரைத்த காதை: 228)

**பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி**
**கேட்டாருங் கேட்டு வளரும் பிணி நீங்க**
**இக்கதையை வாசித்த யானும் பிணிநீங்க**
**எக்காலந் தாமும் இனிதாக வாழ்வாரே** (குளுத்திப் பாடல் : 88-90)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மதிப்பீட்டுக் குறிப்பு - I

# கண்ணகி கலை இலக்கிய விழா – 2014



பேராசிரியர். செ. யோகராசா

இன்றைய ஆய்வரங்கு தொடர்பான மதிப்பீட்டுரையைப் பகிர்ந்து கொள்வதற்கு முன்னர் இவ்வருட கண்ணகி கலை இலக்கிய விழா தொடர்பாக இரு பாராட்டுக் குறிப்புக்களைத் தெரிவிப்பது அவசியமானது. **ஒன்று:** இவ்வருட விழா தம்பிலுவிலில் நடைபெறுவது பற்றியது. வீ.சி. கந்தையா அவர்கள் கண்ணகி வழக்குரை ஏடுகள் தேடியபொழுது அவருக்கு ஏடுகள் கிடைத்த இடங்களிலொன்றாக தம்பிலுவில் இருப்பது மனநிறைவு தருகின்றது. **மற்றொன்று:** இன்றைய ஆய்வரங்குத் தலைப்புகள் சென்ற வருடத்தை விட பொருத்தப்பாடும் பயன்பாடும் மிக்கனவாகவிருப்பது.

இன்றைய ஆய்வரங்கிலே மொத்தமாக ஐந்து கட்டுரைகள் வாசிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்டுரை கண்ணகி வழக்குரைக் காவியத்தின் காவிய அமைப்பு பற்றியது. சமர்ப்பித்தவர் : திரு.சி.விநாயகமூர்த்தி. இவ் ஆய்வுத்தலைப்பு சிக்கலானதொன்று. ஏனெனில் தமிழின் காவிய இலக்கணம், தண்டியலங்காரம் கூறுவதை ஒட்டியது. பத்துக் காவியங்கள் தமிழில் இனங்காணப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு தண்டி இலக்கணம் அறியப்படுவதற்குமுன் எழுந்தவை ஏனைய எட்டுமே தண்டி இலக்கணத்திற்குட்பட்டவை ஒரு சிக்கல். பத்துக் காவியங்கள் வரிசையில் அடங்காத கம்பராமாயணம், பெரியபுராணம் முதலியனவும் காவியமாகவே கருதப்படுகின்றமை மற்றொரு சிக்கல். இவை ஒருபுறமாக ஈழத்திலெழுந்த கண்ணகி வழக்குரைக் காவியத்தில் வாய்மொழி இலக்கியச் செல்வாக்குமுண்டு இடைச்செருகல்களுமுண்டு. இவை யாவற்றையும் புரிந்துகொளள்ளாமலேயே இக் கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கட்டுரை, 'கண்ணகி வழக்குரைக் காவியத்தின் பாத்திரவார்ப்பு' சமர்ப்பித்தவர் திரு.வ. குணபாலசிங்கம். இக்கட்டுரை திருப்திதந்துள்ளது. ஆயினும் பிரதானபாத்திரங்கள், துணைப்பாத்திரங்கள் என வகுத்து சான்றாதாரங்களூடாக, அவ்வப் பாத்திரங்களின் குணவியல்புகளைப் பேசியிருப்பின் மேலும் சிறப்புடையதாயிருந்திருக்கும்.

மூன்றாவது கட்டுரை, 'கண்ணகி வழக்குரைக்காவியத்தில் கப்பல்கட்டும் கலையும் போர்க்கலையும்' சமர்ப்பித்தவர் செல்வி க.தங்கேஸ்வரி பீ.ஏ (தொல்லியல் சிறப்பு). பொருத்தமான ஒருவருக்கே இக்கட்டுரை வழங்கப்பட்டிருந்தாலும் எதிர்பார்த்த திருப்தியை அளிக்கத்தவறிவிட்டது. அவருரை கண்ணகி வழக்குரையில் தூரியோட்டு காதையிலும் 'கப்பல் வைத்தல்' பகுதியிலும் கப்பல் போக்குவரத்து, கப்பல்கட்டுதல் தொடர்பான பல தகவல்களுள்ளன. 'கடலோட்டுகாதையிலே போர்க்கலை தொடர்பான முக்கியமான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வரலாற்றுக் குறிப்புக்களைக் கூறமுடியும். எனினும் கட்டுரையாளர் அவற்றைத் தவிர்த்துவிட்டு, தமிழ் இலக்கியங்களிடம் பெற்றுள்ள தகவல்களை எடுத்துரைப்பதிலேயே கவனஞ் செலுத்தியுள்ளார்.

நான்காவது கட்டுரை 'கண்ணகி வழக்குரைக் காவியத்தில் இசைக்கலையும் நடனக்கலையும்' சமர்ப்பித்தவர் திரு.தெ.பிரதீபன். இக்கட்டுரையும் திருப்திதரத் தவறிவிட்டது. கண்ணகி வழக்குரை ஈழத்திலெழுந்த காவியம். இக்காவியத்தில் செந்நெறி சார்ந்த இசை பற்றிமட்டுமன்றி நாட்டாரிலக்கியம் சார்ந்த இசைமரபுகளும் இடம் பெற்றுள்ளன. இவையாவற்றையும் விட்டு விட்டு கட்டுரையாளர் தமிழக இசைமரபுகள் பற்றிக் கவனஞ்செலுத்தியது ஏனென்று புரியவில்லை.

ஐந்தாவது கட்டுரை 'கண்ணகி வழக்குரைக் காவியத்தில் இலக்கிய நயம்'. சமர்ப்பித்தவர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ். இலக்கிய நயம் காண்பதென்பது பரந்த கடலில் இறங்கி மூழ்குவதற்கு ஒப்பானது கடினமானது அத்தகைய நிலையில் கட்டுரையாளர் செந்நெறிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய நயங்கள் சிலவற்றை – கற்பனை, அணிநயம், சொல்நயம் பற்றி எடுத்துக்காட்டியிருந்தார். அவ்விதத்தில் கட்டுரையாளருரை பாராட்டும் படியாகவிருந்தது. வாய்மொழிப்பாடல் நயங்கள் சிலவற்றையும் எடுத்துக்காட்டியிருப்பின் மேலும் அவருரை வளம் மிகுந்திருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீட்டுக் குறிப்பு - II

# கண்ணகி கலை இலக்கிய விழா - 2014



**திருமதி. த. தயாகாந்தன்**
(ஆசிரியை, மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு)

முதலாவது ஆய்வுரை 'கண்ணகி வழக்குரைக்காவியத்தின் காவிய அமைப்பு' இவ்வாய்வுரைக்குரியவர் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சி. விநாயமூர்த்தி. இவ்வாய்வுரை காப்பிய இலக்கணங்களை இலக்கண நூல்களை ஆதாரங்காட்டி விளக்கியுள்ளது. கோவலனார் கதை, சிலம்புகூறல், பற்றிய செய்திகளையும் மேலோட்டமாக நோக்கியுள்ளது.

கண்ணகி வழக்குரைக்குள் நின்று அது எவ்வாறு காவிய அம்சங்களைத் தழுவியுள்ளது அல்லது ஏனைய காவியங்களில் இருந்து காவியப் பண்பில் விலகியுள்ளது என்பதைச் சற்று விரிவாக நோக்கியிருந்தால் இக்கட்டுரை மிகவும் சிறப்பாக அமைந்திருக்கும். கண்ணகி வழக்குரையின் கதைப்போக்கைப் பாத்திர மோதுகைகளோடு எடுத்துக் காட்டி அதில் இடம் பெறும் இலக்கியச் சுவை, கதையின் ஆரம்பம் பின் அது பரபரப்படைத்தல், தணிதல் என்பவையெல்லாம் விளக்கப்பட்டிருந்தால் கட்டுரை செம்மையடையும்.

ஆய்வுரை II "கண்ணகி வழக்குரைக் காவியத்தின் பாத்திர வார்ப்பு" என்பதாகும். இவ்வாய்வுரை திரு.வ. குணபாலசிங்கம் அவர்களால் வாசிக்கப்பட்டது. தமிழ் இலக்கிய மரபில் கண்ணகி வழக்குரைக்கு உள்ள முக்கியத்துவத்தை தெளிவாகப் புலப்படுத்தும் வாயிலான பாத்திர உருவாக்கம் பற்றி அக்கட்டுரை விளக்குகின்றது. ஒவ்வொரு பாத்திரமும் அதனுடன் சம்பந்தப்பட்ட கதை நிகழ்வுகளும் எடுத்துக்காட்டப்படுவதுடன் அப்பாத்திரங்கள் ஒவ்வொரு குணாதிசயங்களை வெளிப்படுத்திக் காவிய முழுமைக்குத் துணை புரிவதை இவரது கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

அடுத்த ஆய்வுரை ஆய்வாளர் க.தங்கேஸ்வரி அவர்களால் வாசிக்கப்பட்டது. "கண்ணகி வழக்குரை "காவியத்தில் கப்பல் கட்டும் கலையும் போர்க்கலையும்" என்பது ஆய்வுத் தலைப்பாகும். தமிழ்ப் பாரம்பரியத்தில் விதந்துரைக்கத்தக்க இக் கலைகள் பற்றி இவர் தனது கட்டுரையில் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். கண்ணகி வழக்குரை காவியத்துள் நின்று போர் நுட்பங்களும், போர்க்கலையும், கப்பல் கட்டும்கலையும் அதில் கையாளப்பட்ட போர்க்கருவிகளை மையப்படுத்தி விளக்கப்பட்டிருக்கின்றது. நாகமணியின் மகிமையைப் புலப்படுத்துவதான மீகாமான் - வெடியரசன் போர் பற்றிய தகவலோடு நமது முன்னோரின் கப்பல் கட்டும் கலையை அழகாகக் காட்டியுள்ளார்.

ஆய்வுரை நான்கு திரு.தெ.பிரதீபன் அவர்களால் வழங்கப்பட்டது. இவரது ஆய்வுரை "கண்ணகி வழக்குரை காவியத்தில் இசைக்கலையும், நடனக் கலையும்" என்பதாகும். இக்கட்டுரையில் கண்ணகி வழக்குரை காவியத்தில் இசைக்கலையும். நடனக்கலையும் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.


இறுதி ஆய்வுரை கண்ணகி வழக்குரை காவியத்தின் இலக்கிய நயம் என்ற தலைப்பில் திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ் அவர்களால் முன் வைக்கப்பட்டது. இக்கட்டுரை கண்ணகி வழக்குரைக்குள் நின்று கதை வளர்த்துச் செல்லப்படும் முறைமை. எடுத்துரைப்பு முறைமை, பாத்திர உருவாக்கம், நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு போன்ற விடயங்களைக் கோவலனார் கதை, சிலம்பு கூறல் என்பவற்றின் பின்னணியில் நின்று விளக்கியுள்ளார். கண்ணகி வழக்குரை கதையை யாப்பு, எடுத்துரைப்புமுறையும், மொழிக்கையாளுகையும், வர்ணனைகள், ஓசைநயம், பாத்திர உருவாக்கமும் நிகழ்ச்சியமைப்பும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடற்பாங்கு போன்ற கோணங்களில் நோக்கி கண்ணகி வழக்குரை காவியத்தை இலக்கிய நயமிக்க பனுவலாக அடையாளப்படுத்தியுள்ளார்.

ஒட்டு மொத்தமாக இன்று வாசிக்கப்பட்ட ஐந்து ஆய்வுரைகளும் தமக்குரிய பணியை செவ்வனே ஆற்றியுள்ளமையைக் குறிப்பிட்டாக வேண்டும். கிழக்கிலங்கைப் பாரம்பரியத்தின் கண்ணகி வழக்குரையையும் அதனூடாக மேற்கிளம்பும் நமது பண்பாட்டின் அடையாளங்களைப் பேணும் வகையிலும், தமிழ் இலக்கியம் என்ற தடத்தில் கண்ணகி வழக்குரையும் கால் பதிக்க வேண்டும் என்பதையும் இவ்வாய்வுரைகள் தெளிவாகக் கூறியுள்ளன. அத்துடன் இவ்வாய்வுரைகளின் வாயிலாக கண்ணகி வழக்குரைக் காதை பொதுமக்களைச் சென்றடையும் என்பது திண்ணம்.

**ஆய்வரங்கத் தொகுப்பு**



# கண்ணகி கலை இலக்கிய விழா – 2014

**பேராசிரியர். சி. மௌனகுரு (ஆய்வரங்கத் தலைவர்)**

- கண்ணகி வழக்குரை சம்பந்தமாக ஐந்து ஆய்வுக்கட்டுரைகளைக் கேட்கும் வாய்ப்பு உமக்குக் கிடைத்தது. இதில் சாதகமான பாதகமான விடயங்களைச் சுருக்கமாகக் கூறுதல் என்கடன்.

- இதில் சாதகம் யாதெனில் முதன் முறை கண்ணகி வழக்குரையை ஒரு இலக்கியமாகவும் வரலாற்று ஆவணமாகவும் கொணர கட்டுரையாளர்கள் எடுத்த முயற்சியாகும். அதில் பலரும் வெற்றி பெற்றுள்ளனர் என்றே நினைக்கிறேன்.

- இன்னொரு சாதகமான அம்சம் நமது ஆய்வாளர்கள் கண்ணகி வழக்குரையை ஆழமாகக் கற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளமையாகும்.

- மற்றொரு சாதகமான அம்சம் பல புதிய இளம் ஆய்வாளர்கள் உருவாகியிருப்பதுவாகும்.

- நேரக் கட்டுப்பாட்டை மீறியமை, சுவைபடக் கூறாமை என்பவற்றைப் பாதகமான அம்சங்களாகக் குறிப்பிடுவேன். எனினும் இத்தகைய செயற்பாடுகள் வருடம் தோறும் நடை பெறுவதும் கண்ணகி கலை இலக்கிய மரபு மீண்டும் மீண்டும் சொல்லப்படுவதும் நல்லதொரு விடயம்.

- இதனை முன்னின்று நடத்தும் செயல்திறன் மிக்க கண்ணகி கலை இலக்கிய விழாக் குழுவினர்க்குக் குறிப்பாகத் திரு. கோபாலகிருஸ்ணன் மற்றும் அன்பழகன் ஆகியோர்க்கு எனது பாராட்டுக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கூடல்' (பரல் - 3) விழா மலர் இன் அனுசரணையாளர்
வைத்திய கலாநிதி க.முருகானந்தன் அவர்களுக்குக்
கூடல் வழங்கல்



ஆய்வரங்கில் அவையோர்



நன்றியுரை
திரு.ச.ஜெயராஜா
(பொருளாளர், கண்ணகி கலை இலக்கியக்கூடல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னங்குடா கலை இலக்கிய விழா-2014

**03, ஆகஸ்ட் 2014 ஞாயிற்றுக்கிழமை, மூன்றாம் நாள்**

**மாலை அமர்வு பி.ப 05.00 - பி.ப.09.00**

**இடம்** : தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபம்.

**அரங்கு** : "மாதவி" அரங்கு.

**தலைமை** : திரு. ஆ. உலகராஜா (ஓய்வுநிலை சிரேஷ்ட போதனாசிரியர்)



முதன்மை அதிதி
**கலாநிதி. க.பிறேமகுமார்.**
(பணிப்பாளர், சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,மட்டக்களப்பு)



முதன்மை அதிதி
**திரு. ஆர்.பிரபாகன்.**
(பிரதம ஆசிரியர். வீரகேசரி வாரவெளியீடு)



முதன்மை அதிதி
**கலாநிதி அனுசூயா சேனாதிராஜா.**
(முதுநிலை விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)



சிறப்பு அதிதி
**அரிமா. பி.டி.ஏ. ஜெயக்குமார்**
(நீர்ப்பாசனப் பொறியியலாளர், பொத்துவில்)



சிறப்பு அதிதி
**திருமதி. இராஜகுமாரி சிதம்பரம்.**
(ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்- அழகியல்).



சிறப்பு அதிதி
**திரு. த. ரவிச்சந்திரன்**
(ஹற்றன் நெசனல் வங்கி முகாமையாளர், திருக்கோவில்)



மாதவி அரங்கில் அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## மங்கல விளக்கேற்றல்



வரவேற்புரை
**திரு. என்.எஸ்.தியாகராஜா.**
(ஓய்வுநிலை மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்)



அரங்க அறிமுகம்
இணைப்பாளர் **திரு. சு.சிறிதரன்.**
(உதவிக் கல்விப்பணிப்பாளர், அழகியற்கல்வி, திருக்கோவில் கல்வி வலயம்)



தலைமையுரை
**திரு. க. உலகராஜா**
(ஓய்வு நிலை சிரேஸ்ட போதனாசிரியர்)



## நிறைவு விழாவில் அவையோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையுரை

# கலையரங்கும் நிறைவு விழாவும் – "மாதவிஅரங்கு"



ஆ. உலகராஜா
(ஓய்வுநிலை சிரேஸ்ட போதனாசிரியர்)

மதிப்பிற்குரிய முதன்மை அதிதிகளே,
கண்ணியம் மிக்க சிறப்பு அதிதிகளே,

பேரன்பிற்குரிய பெரியோர்களே, பெற்றோர்களே, இணைப்பாளர்களே, தொகுப்பாளர்களே அறிவுசால் ஆசிரியப் பொருந்தகையீர் அன்பிற்குரிய மாணவ மணிகளே, அனைவருக்கும் என் வணக்கத்தை முதற்கண் தெரிவித்து உங்கள் எல்லோரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

கடந்த இரண்டு நாட்களாக ஐம்பெரும் தமிழ்க் காப்பியங்களில் தலை சிறந்த சிலப்பதிகாரத்தின் மகிமையையும் அதன் மேன்மையையும் அவற்றின் உள்ளார்ந்த அர்த்தத்தையும், அதன் எண்ணக்கருவையும் இந்த விழாவின் மூலம்தங்கள் தங்கள் சிந்தனையில் பதித்து மகிழ்ந்திருப்பீர்கள் என நான் எண்ணுகின்றேன்.

இன்று மூன்றாவது நாளும் நிறைவு நாளுமாகிய இந்த மாதவி அரங்கிலே நான் தலைமையுரையாற்ற ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததை ஒரு பாக்கியமாகக் கருதுகின்றேன். இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு நல்கிய விழாக் குழுவினருக்கு எனது இதயம் நெகிழ்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நான் ஒரு இரண்டு நிமிடங்கள் 36 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சிக்குச் செல்ல என்னைத் தயவு செய்து அனுமதிக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். 1978.12.30ந் திகதி பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்ற நேரத்தில் கலாசாலையின் தமிழ் மன்றத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டேன். அவ்வேளை பலாலியில் நடந்த முத்தமிழ் விழாவிற்கு உலகத்தமிழராய்ச்சி மகா நாட்டின் தந்தையும் தமிழ்ப் பேரறிஞனுமாகிய தவத்திரு தனிநாயகம் அடிகளாரை தமிழ் மன்றத்தின் சார்பாக 'தமிழ் மொழி வளர்ச்சி'' என்னும் தலைப்பில் பேச அழைத்திருந்தேன். அவரும் அன்புடன் வருகை தந்து இரண்டு மணித்தியாலங்கள் சிறப்பான சொற்பொழிவொன்றை ஆற்றியிருந்தார். அத்துடன் மறைந்த தமிழ்ப் பேறிஞரும் யாழ் பல்கலைக்கழக உப வேந்தருமான அமரர். சு.வித்தியானந்தன் அவர்களையும், தமிழ்ப் பேரறிஞர் திரு. அ.சண்முகதாஸ் அவர்களையும் மட்டக்களப்பிலிருந்து உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் அவர்களையும் சிறப்புச் சொற்பொழிவாற்ற அழைத்திருந்தோம்.

அன்று எனது தலைமை உரையின் இறுதியில் 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்னும் மகா கவி பாரதியாரின் கூற்றை உரக்கக் கூறியிருந்தேன். 36 வருடங்களுக்கு முன் அன்று வடக்கின் எல்லையிலே கூறிய கூற்று இன்று கிழக்கின் அந்தத்திலே தம்பிலுவில் கிராமத்தில் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகார கலை இலக்கிய விழா மூலம் மீண்டும் ஒரு முறை தேமதுரத் தமிழோசை கேட்பது ஒரு மட்டற்ற மகிழ்ச்சியாகும்.

எனவே இவ்விழா சிறக்க அயராது உழைத்த மட்டு நகர் கண்ணகி கலை இலக்கியக் கூடல் தலைவர் செங்கதிரோன் திரு. T.கோபாலகிருஸ்ணன், செயலாளர் அன்பழகன் குருஸ், பொருளாளர் S.ஜெயராசா துணைத்தலைவர் திரு.எம். சதாசிவம் ஆகியோருக்கும் எமது பிரதேச விழாக்குழுத் தலைவர் திரு. வன்னியசிங்கம் ஜெயந்தன், திரு. S.வினாயகமூர்த்தி, திரு. முல்லை வீரக்குட்டி, திரு.S.P. நாதன், திருமதி. ஜெகதீஸ்வரி நாதன், ஆகியோருடன் மற்றைய விழாக் குழு அங்கத்தவர்களையும் நான் இந்தத் தருணத்தில் வெகுவாகப் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் கண்ணகி கலை இலக்கிய விழாவில் பல்வேறுபட்ட எண்ணக்கருக்கள் தங்கள் சிந்தனையில் அகப்பட்டுக்கொண்டிருக்கும். நாம் இது கால வரை கண்ணகி அம்மன் வழிபாட்டையும் திருக்குளிர்த்தி பற்றியும் மேலெழுந்தவாரியாக அறிந்திருந்தோம். ஆனால் இக்கலை இலக்கிய விழா மூலம் இக் காப்பியத்தின் அடிப்படை வரலாற்றை படித்தவரிலிருந்து பாமரர் வரை "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் பற்றியும், "பக்தி" இலக்கியத்தையும், "பண்பாட்டு" இலக்கியத்தையும் நன்கு விளங்கியிருப்பர்.

சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர்களோ அல்லது அதைப் பற்றி ஆராய்பவர்களோ அன்றில் விமர்சனம் செய்பவர்களோ தங்களின் வித்தகத் தன்மையையும், பாண்டித்தியத்தையும் காட்ட முனைந்தார்களே தவிர சமூகத்தில் எல்லா மட்டத்தினரும்குறிப்பாக பாமர மக்கள் சிலப்பதிகாரத்தின் மகிமையை, மேன்மையை, அதன் சிறப்பை, தமிழ்மொழி அமைப்பை, அதன் உள்ளடக்கத்தைப் பற்றி அறிய வேண்டுமென நினைக்கவில்லை.

ஆனால் இவ்வகையான கண்ணகி கலை இலக்கிய விழாக்களை கிராமிய மட்டத்தில் நடாத்தும் போது பண்டிதரிலிருந்து பாமரர் வரை இக்காப்பியத்தை இலகுவாக அறிந்து கொள்வது மட்டுமல்ல நடைமுறை வாழ்க்கையிலும் அதை உள்ளீர்த்துக் கொள்ள முனைவர்.

தமிழ் அன்னையை அலங்கரிக்க வந்த புலவர்கள் அவளை அலங்கரிக்கும் அணிகலன்களாக ஐம்பெருங் காப்பியங்களை இயற்றி அலங்கரித்தார்கள். அதாவது "சீவகசிந்தாமணி" எனும் காப்பியம் தமிழன்னையின் சிகையை அலங்கரிக்கும் முடியாகவும் "வளையாபதி" கையை அணிசெய்யும் கைவளையாகவும் "குண்டலகேசி" காதை அலங்கரிக்கும் அணியாகவும்மணிமேகலை இடையை அலங்கரிக்கும் மேகலையாகவும், சிலப்பதிகாரம் சீரடியை அலங்கரிக்கும் காலணியாகவும் புனைந்து இவ் ஐம்பெரும் காப்பியங்கள் மூலம் தமிழன்னையை அழகு பார்த்தார்கள் அக்காலப் புலவர்கள்.

சிலப்பதிகாரம் இரண்டாவது நூற்றாண்டின் சங்க கால தமிழ்க் காப்பியமாக கருதப்பட்டது. பொதுவாக தமிழ் மொழி வளர்ச்சிக் காலத்தை சங்க காலம் சங்கம் மருவிய காலம் என பிரித்துக் கூறும் போது சங்க காலத்தை நோய்க் காலம் எனவும் அதாவது சமூகச் சீர்கேடுகள், கூடாவொழுக்கம், போர், மது, மங்கை, சூது வது, வன்முறைகள் மிக மேலோங்கிய காலமாகும். அங்கு ஐவகை நிலங்களுக்குரிய ஒழுக்கம் பேணப்பட்டாலும் ஒழுக்க விழுமியங்கள் உயர்வானதாக இல்லை எனலாம்.

ஆனால் 2ம் நூற்றாண்டில் "ஔடதம்" போன்ற பிணிதீர்க்கும் சிலப்பதிகாரம் போன்ற நன்நூல்க் காப்பியங்கள் உருவாக்கப்பட்டதனால் அங்கு பண்பாட்டு நடத்தைக் கோலங்கள் மேம்படத்தொடங்கின. இக்காப்பியங்கள் மூலம், தமிழும் தமிழர் வாழ்க்கையில் நல்ல உயர் பண்பாட்டு விழுமியங்களைக் கற்றுக் கொள்ளவும், கடைப்பிடிக்கவும் வாய்ப்பாக அமைந்ததனால் சிலப்பதிகாரம் மென் மேலும் முதன்மை பெற்ற தமிழ்க் காப்பியமாக விளங்குகின்றது.

அனேகமான தமிழ்க் காப்பியங்கள் அரசனை அல்லது இறைவனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டே பாடப்படுகின்றன. ஆனால் சிலப்பதிகாரம் வணிக குலத்தவரான கண்ணகியை பாட்டுடைத்தலைவியாக வைத்து இளங்கோவடிகள் பாடியுள்ளார். ஏனெனில் அக்காலத்தில் வணிகர்கள் அதிகமாக சமண மதத்தராக இருந்த காரணத்தாலும், சமணம் முற்றாக உயிர்க்கொலை மறுத்ததாலும், நீதியை வலியுத்துவதாலுமேயாகும்.

சிலப்பதிகாரத்தின் கருப்பொருள் மூன்று முக்கிய விடயங்களைக் கொண்டிருக்கும்.

1. அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவது.
2. ஊழ்வினை உறுத்துவன் தூட்டுவதும்.
3. உரைசால் பத்தினியை உலகம் போற்றும் என்பதுமாகும்.

இம் மூன்று கருப்பொருளும் மனித வாழ்வின் சீரிய சிறப்பான வாழ்விற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றன. அரசனின் நீதி தவறாத ஆட்சியும் மக்கள் கன்மவினைகளுக்கு ஆளாகாத நடத்தை, பண்பும் பாங்கும் அத்துடன் நல்ல நீதி, ஒழுக்கமுள்ள பெண்கள் உள்ள சமூகம் இருக்க வேண்டுமென சிலப்பதிகாரம் வலியுறுத்துகின்றது. இதனால் இது பக்தி இலக்கியமாகவும் பண்பாட்டு இலக்கியமாகவும் மிளிர்வதற்கு காரணம் எனலாம்.

சிலப்பதிகார இலக்கியத்தில் கண்ணகி கோவலன் போன்றே மாதவியும் சிறப்பிக்கப்படுகின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாள் மாலை அமர்வு அவ்வகை சிறப்புப் பெற்ற மாதவி அரங்கிலே நடைபெறுவது இம் மூன்று நாள் விழாவிற்கு மகுடம் வைத்தது போலாகும். இவ்வரங்கிலே இசையும், அசைவும் அதாவது இசையும் நாட்டியமும் கருத்தோவியமாக எடுக்கப்பட்டுள்ளன.

மாதவி ஒரு ஆடலரசி கணிகை மகளாகச் சித்தரிக்கப்பட்டாலும் முற்பிறப்பில் இந்திரலோகத்தில் ஊர்வசியாக நடனமாடிய போது இந்திரன் மகன் மீது ஏற்பட்ட சலனத்தினால் இந்திரனின் சாபத்திற்குள்ளாகி மண்ணுலகில் மாதவியாகப் பிறந்தாள் என்பது வரலாறு. கிராமிய கலைகள் இன்றும் வாழ்கின்றது என்றால் மாதவியின் 11வகை ஆடற்கலையின் அற்புதமேயாகும்.

தமிழர் வாழ்விலும் தமிழ் இலக்கிய வரலாற்றுத் தொடரிலும் கண்ணகி வழிபாட்டுடன் கிராமியக் கலைகள் பின்னிப்பிணைந்துள்ளதிற்கு மாதவியின் கலை நயனங்களே காரணமாகும்.

கூத்து, கொம்புமுறி, கோலாட்டம், கும்மி, போர்த்தேங்காய் அடித்தல், குரைவைக் கூத்து, கரகம், காவடி, உடுக்கு, மேளதாளம், யாழ் இசை, புல்லாங்குழல் போன்ற இன்னோரன்ன கலைகள் மாதவியின் ஆடல் வகைகளின் அடி நாதமாய் உள்ளன.

எப்பொழுதும் உழைத்து களைத்த உடலுக்கும் உள்ளத்திற்கும் உற்சாகம் தருவது மனதிற்குகந்த கலைகளேயாகும். ஆகவேதான் சிலப்பதிகாரத்தின் கதாபாத்திரங்களில் மாதவியின் கலை வடிவங்கள் எக்காலத்திலும் அழியாது. எனவே மாதவி அரங்கில் இன்றைய இறுதி நாள் நிகழ்ச்சிகள் நடைபெறுவது சாலச்சிறந்ததென நான் எண்ணுகின்றேன்.

இறுதி நாள் நிகழ்ச்சியில் எனது தலைமையுரையினூடாக எமது சமூகத்திடம் நான் வேண்டுவது. பக்தியும் பண்பாடுமுள்ள சமூகத்தை வளர்ப்பதற்கு நாம் உறுதி பூணுவதுடன் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தாலும் தமிழர் பாரம்பரியத்தின் நல்ல பண்பாட்டு விழுமியங்களான அன்பு கருணை காருண்யம் நீதி நியாயம் நல்லொழுக்கமுள்ள சமுதாயமாய் மேலும் மேலும் உயர வேண்டும் அத்துடன் இப்பிரதேசத்தின் தமிழ் மொழி வளர்ச்சிக்கான "அறக்கட்டளை நிதியம்" ஒன்றை ஆரம்பிப்பதன் மூலம் தமிழ் மொழியில் ஆர்வமுள்ள மாணவர்கள், கலைஞர்களை ஊக்கப்படுத்துவதுடன் கிராமிய மட்டத்தில் அருகி வருகின்ற கிராமியக் கலைகளை வளர்க்க உதவுமென நான் நினைக்கின்றேன் அத்தோடு.

இந்த கண்ணகி கலை இலக்கிய விழா மூலம் செம் மொழியாம் எம் தாய் மொழியான தமிழ் அன்னையை வாழ்த்துவதுடன் கண்ணகி அம்மன் நாம் எல்லோருக்கும் அருள்புரிய வேண்டி என் தலைமை உரையை நிறைவு செய்து கொள்கின்றேன். நன்றி வணக்கம்.

**ஆய்வுரை IV**



## "கண்ணகி வழக்குரை காவியத்தில் இசைக்கலையும் நடனக்கலையும்"

**ஆய்வாளர்: திரு. தெ. பிரதீபன்**

**(விரிவுரையாளர், இசைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்)**

ஆய்வாளர் ஆய்வுக்கட்டுரையின் பிரதியினை எம்மிடம் ஒப்படைக்கவில்லையாதலால் கட்டுரை 'கூடல்' பரல் - 4 இல் இடம்பெறவில்லை. ஆர்வலர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.

**தெ.பிரதீபன்**
146/1, புதியகல்முனைவீதி,
மட்டக்களப்பு
தொலைபேசி இல : 0776182047

**-தொகுப்பாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையில் கண்ணகி வழிபாடு



திரு. இரத்தினகுமார்
(அதிபர், கமு/திகோ/திருக்கோவில் குமரவித்தியாலயம், திருக்கோவில்.)

கண்ணகி என்றால் கண்ணுக்கு ஒளிபோன்றவள் என்று கிழக்கு மாகாணத்தவர் கூறுவர். தென் தமிழ் பாவை செய்தவக் கொழுந்து ஒருமாமணியாய் உலகுக்கு ஓங்கிய திருமாமணிவந்தாள், கண்ணகிவந்தாள், கிழக்கிலங்கையை நாடிவந்தாள்."உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர்" யார்உயர்ந்தவர்? இன்று இந்தியாவை விட இலங்கையின் கிழக்கில் மட்டக்களப்பில் 54 கண்ணகியம்மன் ஆலயங்கள், அம்பாரையில் 12ஆலயங்கள், திருகோணமலையில் 22 ஆலயங்களும் உள்ளன. அவ்வகையில் இன்று உயர்ந்தவர்கள் கிழக்கு மாகாணத்தவர்களே என்பதில் ஐயமில்லை.

சோழநாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் வழக்குரைத்து சேரநாட்டில் தெய்வமானாள் கண்ணகி. சேரன் செங்குட்டுவன் கொடுங்களூரில் பத்தினிக் கோட்டம் அமைத்தான். இவ்விழாவில் ஈழ மன்னன் கஜபாகு, பாண்டியமன்னன் வெற்றி வேற்செழியன், சோழமன்னன் பெருநற்கிள்ளியும் கலந்துகொண்டனர். கஜபாகு கண்ணகியிடம் இலங்கைவாழ் மக்களுக்கும் அருள்புரியவேண்டும் எனவேண்டியபோது"தந்தேன் வரம்" என ஒருஅசரீரி கேட்டதாகக் கூறப்படுகின்றது.

அப்போது சந்தணமரத்தாலான கண்ணகிசிலை, காற்சிலம்பு என்பவற்றைப் பெற்றுவந்தான் கஜபாகுமன்னன். பாண்டியன் வெற்றிவேற் செழியன் கஜபாகுமன்னனை வேதாரணியம்வரை வந்து வழியனுப்பி வைக்க கஜபாகு மன்னன் கடல் வழியாகவந்து இலங்கையின் வடபகுதியில் உள்ள ஜம்பு கோளத்துறை என்னும் திருவடிநிலையில் இறங்கி அங்கநாமக்கடவை தொடக்கம் அனுராதபுரம் வரையானைப் பவனிமூலம் கண்ணகிசிலையை ஊர்வலமாகக் கொண்டு சென்றான். பின் இப்பவனிமாட்டு வண்டியில் கிழக்கு தொடங்கி அம்பாறை–பாணமை–கதிர்காமம் - கண்டி தலதாமாளிகை வரை கொண்டு செல்லப்பட்டது. ஆகவே கி.பி.2ஆம் நூற்றாண்டில் இலங்கையில் கண்ணகி வழிபாடு பரவியது எனஆய்வாளர் கருதுவர்.

பேராசிரியர். சபா ஜெயராசா கண்ணகி வழிபாடு பற்றி அறிய வீரமங்கை தொடர்பான தொன்மங்களையும் ஆராயவேண்டும் என்கிறார். பூமித்தாய் வழிபாடு, விவசாய அன்னை வழிபாடு போன்ற பாரம்பரியங்கள் இன்று கண்ணகி வழிபாட்டுடன் ஊடுருவியுள்ளது. சிலப்பதிகாரத்தின் முன் தோன்றிய பட்டினத்துப் பாலை, பதிற்றுப்பத்து, புறநானூறு, நற்றிணை போன்ற சங்கநூல்களில் அரும்பி அதையொட்டி காவியமாக மலர்ந்த தொன்மம் கண்ணகி வழிபாட்டுக்கு உண்டு. சிங்கள பத்தினி வழிபாடு பற்றி ஆய்வு செய்த பேராசிரியர். கணநாத் ஒபயசேகர சிங்களபத்தினி வழிபாடு தமிழ் மரபிலிருந்து விலகிச் செல்வதைக் காட்டுகின்றார். ஆகவே கஜபாகுமன்னன் ஈழத்திற்கு பத்தினித் தெய்வ வழிபாட்டைக் கொண்டு வருவதற்கு முன்னமே கண்ணகி வழிபாடு ஈழத்தில் அறிமுகமாகியிருத்தல் வேண்டும் எனவாதிடும் ஆய்வாளரும் உண்டு.

நயினை நாகபூசனி அம்மன் ஆலயத்தைக் கட்டியவன் கண்ணகியின் தந்தைமாநாய்கன் (மாசாத்துவன்) என்பது ஐதீகமாகவுள்ளது. கண்ணகிதன்னை ஐந்துதலை நாகமாக மாற்றி மதுரைமாநகரம் துறந்து தெற்கு நோக்கி நகர்ந்து நயினாதீவை வந்தடைந்தாள். பின் அங்கநாமக் கடவை தொடக்கம் கிழக்கின் பலபகுதிகளிலும் தங்கினாள். பட்டிமேடு வரும் போது அவள் மூதாட்டியானாள். பட்டிமேடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணகியம்மன்வரலாற்றில் கோளாவில் பகுதியில் மூதாட்டி வடிவிலிருந்த கண்ணகிதான் பட்டிமேட்டில் தங்கப் போவதாகக் கூறியதாகக் கூறப்படுகின்றது.

வரலாற்றுத் துறைப் பேராசிரியர் சிற்றம்பலம் ஈழத்தின் கிழக்குப் பகுதிதமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பால் கண்ணகியம்மன் வழிபாடு நேரடியாக மட்டக்களப்பிற்கு வந்திருக்கலாம் என்கின்றார். கந்தப்பாணத்துறை (திருக்கோவில்) பண்டைய தமிழகத்துடன் தொடர்பு கொண்டிருந்தது. கந்தபாணந்துறையூடாகவே கண்ணகியம்மன் காற்சிலம்பிற்கு நாகமணிஎடுத்துச் சென்றதாகவும் கண்ணகி வழக்குரைக் காவியத்தில் கூறப்படுகின்றது. கண்ணகியின் சிலம்பிலிருந்தது மாணிக்கக் கற்களாகும். எனவே இந்தியருக்கு இலங்கையுடனான தொடர்பு கஜபாகுகாலத்திற்கு முன்னமும் இருந்ததெனலாம்.

பாண்டியநாட்டின் மதுரையிலிருந்து கொண்டு வரப்பட்ட செண்பகச்செல்வி என்ற கண்ணகி விக்கிரகம் தம்பிலுவிலைச் சேர்ந்த ஊரக்கைஎனும் இடத்தில் பிரதிஷ்டைசெய்யப்பட்டு வழிபடப்பட்டது. அதன் தொடர்ச்சியே இன்றைய தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயமாகும். கி.பி.11ஆம் நூற்றாண்டில் 1ம் விஜயபாகு காலத்தில் இவ்வாலயத்திற்கு தங்கமாம்பழம், நகைகள் என்பன நன்கொடையாக வழங்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் மாகோனின் படையெடுப்புக் காலங்களில் ஏற்பட்டபடைநகர்வுகளால் பலமாற்றங்கள், அழிவுகள் ஏற்பட்டன. கி.பி.13ஆம் நூற்றாண்டில் பாண்டியர்களுக்கும் இலங்கைத் தமிழ் மன்னர்களுக்கும் தொடர்புகள் ஏற்பட்டன. இக்காலத்தில் கண்ணகிசாபத்திலிருந்து தமது பரம்பரையை விடுவிக்க எண்ணித் தாங்கள் செல்லுமிடமெல்லாமம் பாண்டியர்கள் கண்ணகி வழிபாட்டை மேம்படுத்தினர்.

பாண்டியநாட்டின் மதுரையிலிருந்து கிழக்கிலங்கைக்கு நேரடியாகவே கண்ணகி வழிபாடு வந்ததாகவும் கூறப்படுகின்றது. வெருகல் ஆற்றுக்குக் கிழக்கேயுள்ளதுறைமுகத்தில் மதுரைநகரிலிருந்து செண்பக நாச்சியம்மன், பத்திரகாளியம்மன், கண்ணகியம்மன் ஆகியோரது சிலைகள் மூன்று கொண்டு வரப்பட்ட தாகவும் செண்பகநாச்சியார் சிலையை ஈச்சிலம்பற்றிலும், பத்திரகாளியம்மன் சிலையைசம்பூரிலும், கண்ணகியம்மன் சிலையை மட்டக்களப்பின் தென்பகுதியிலும் வைத்துவழிபட்டதாக பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குறிப்பிடுகின்றார். எனவே நேரடியாக கண்ணகி வழிபாடு இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பரவிருக்கின்றது என நாம் வாதிடமுடியும்.

கி.பி.15ஆம் நூற்றாண்டில் கிழக்கிலங்கையில் தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்தகாலத்தில் பிரபல்யம் பெற்றிருந்த "இலங்கைத் துறைமுகம்"எனும் துறைமுகத்தினூடாக பாண்டியநாட்டின் மதுரையிலிருந்து மூன்றுஅம்மன் விக்கிரகங்கள் கொண்டுவரப்பட்டதாகவும் அவற்றில் ஒன்று இலங்கைத் துறையிலும் மற்றையது சம்பூரிலும், மற்றையது மட்டக்களப்பின் தென்பகுதியிலும் வைத்துபிரதிஷ்டைசெய்யப்பட்டதாகவும் பண்டிதர்.இ.வடிவேலு குறிப்பிடுகின்றார். ஆகவே கஜபாகுகாலத்தில் கிழக்கில் நேரடியாக கண்ணகி வழிபாடு வரவில்லை என்பது புலனாகின்றது.

கி.பி.16ஆம் நூற்றாண்டில் கண்ணகிவழிபாடு கிழக்கிலங்கையில் பரவலடைந்தது எனமட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. செனரதன் என்ற கண்டி மன்னன் காலத்தில் வன்னிச் சிற்றரசர்களின் தொடர்பு கிழக்கிலங்கையில் நிலவியது. இக்காலம் கந்தப்பர் என்பவர் ஏழு கண்ணகி விக்கிரகங்களை யாழ்ப்பாணம் ஒத்துக்குடாய் பகுதியிலிருந்து மட்டக்களப்பின் மண்முனைப் பகுதிக்குக் கொண்டு வந்து ஏழு இடங்களில் பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகின்றது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்,செட்டிப்பாளையம் கண்ணகியம்மன் ஆலயவரலாறுகள் இதனுடன் ஒற்றுமையுடையன, யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர் கிறிஸ்தவம் பரப்பியபோது எதிர்காலநோக்கறிந்து ஏழுநாட்டார் குடிகளுடன் கந்தப்பர் கிழக்கிலங்கைக்கு வந்ததாகவும் கூறப்படுகின்றது.

கிழக்கிலங்கையில் நிலவிவரும் கண்ணகியிலக்கியங்கள் கி.பி.15ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தியவை. பத்ததிகள் ஊர்சுற்றுக் காவியம், மழைக்காவியம் அகவல்கள் எனப் பல இலக்கியங்கள் உண்டு. தம்பிலுவில் கண்ணகையம்மன் மழைக்காவியம் 2ஆம் ராஜசிங்கனைப் புகழ்ந்து கூறுகின்றது (கி.பி.1635 – கி.பி.1687). ஒருஅந்தணச் சிறுவன் அல்லது கண்ணப்பர் கப்புகனார் இக்காவியத்தைப் பாடியதாக நம்பப்படுகின்றது. அவர் பச்சைக்களி மண்ணில் பானைசெய்து பொங்கலிட்டு ஊரக்கை வெளிமருத மரத்தடியில் கண்ணகிசிலையை வைத்து வழிபடமழை பொழிந்ததாகக் கூறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"கொம்புமாவின் கனியதாக முன்னிருந்தாய்
கோகனக தம்பிலுவில் கோவிலில் அமர்ந்தாய்
இப்பவூர்க்க வெளியாற்றிடையிருந்தாய்
எப்பம்மாமழை தருவதென்றிருந்தாயே"எனப் பாடுகின்றார்.

தம்பிலுவில் கண்ணகையம்மன் பள்ளுஸ்ரீ வீரநரேந்திரசிங்கன் பற்றிக் கூறுகின்றது. இவன் கண்டிமன்னர்களில் ஒருவன், இவ்விலக்கியத்தை வீரவசைக் குரு ஒருவர் பாடியதாகநம்பப்படுகின்றது. இதன் காலம் கி.பி.1706 தொடக்கம் கி.பி.1739 வரையாகும்.

"பார்வழிதென் திருக்கோயில் குமரன் வாழி
கண்டிபார்த்தீபன் நரேந்திரசிங்க மூர்த்தியும் வாழி
ஊர் வாழிதம்பிலுவில் ஊர் வாழ்கவரந்தரும்
பத்தினி கண்ணகை நீடுளிவாழ்கவே"எனக் கூறப்படுகின்றது.

தம்பிலுவில் கண்ணகையம்மன் ஊர்சுற்றுக்காவியம் அங்கநாமக் கடவை முதல் தம்பிலுவில் ஈறாகவுள்ளகண்ணகையம்மன் ஆலயங்களைக் குறிப்பிடுகின்றது. இதன் காலம் கி.பி.1629 தொடக்கம் கி.பி.1637 வரையாகும். ஆகவே இதுவும் கி.பி 18ஆம் நூற்றாண்டுகாலப்பகுதிக்குரியது.

"தம்பிலுவில் மாநகரில் வீற்றிருக்கும் தாயே
இரக்கமுள்ள தருமதேவதையே" எனும் குறிப்பு இதிலுள்ளது.

பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் ஆலயத்திலுள்ளஜம்பொன்னாலானகன்னக் கொண்டையுடனான கண்ணகிசிலை பழமையானது. பிரிட்டிஸ் அதிகாரிகண்ணைக் கொத்திய பொற்புறாக் காவிய வரலாறு பொற்புறாக் காவியத்தில் கூறப்பட்டுள்ளது. நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டின்படி பட்டிமேட்டுக் கண்ணகியம்மன் ஆலயம் 18ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் கட்டப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது.

துறைநீலாவணை கண்ணகியம்மன் ஆலய வரலாற்றின்படி அங்கு முனிவர்கள் வாழ்ந்துசென்ற இடத்தில் மூன்று அம்மன் சிலைகள் இருந்துபின் அவற்றை வழிபட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. 18ஆம் நூற்றாண்டிக் பிற்பகுதியில் காரைதீவில் தோன்றிய உடுக்குச் சிந்துஎன்ற இலக்கியத்தில் கிழக்கிலங்கையின் கண்ணகியம்மன் ஆலயங்கள் பலகாணப்படுகின்றன. கண்ணகி வழக்குரைக் காவியத்தில் - விநாயகருக்கு காப்புசெய்யுளில் கூறப்பட்டுள்ளது. இது பல்லவர் காலத்தின் பின்னரான மரபு என்பதும் குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**

1. நா. நவநாயகமூர்த்தி, திருக்கோவில் பிரதேசஅலக்கியவரலாறு.
2. கிழக்கின் பண்பாட்டுஆய்வுகள், கிழக்குமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.
3. சி. பத்மநாதன், இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் - II
4. நா. நவநாயகமூர்த்தி, தம்பிலுவில் கண்ணகிவழிபாடு.
5. பண்டிதர்.வி.சீ. கந்தையா, மட்டக்களப்புச் சைவக் கோவில்கள்.
6. கூடல் - பரல் - 02 (கண்ணகிகலை இலக்கியவிழாமலர் - 2013)
7. கூடல் - பரல் - 03 (கண்ணகிகலை இலக்கியவிழாமலர் - 2014)
8. இந்துகலைக்களஞ்சியம் பாகம் - III



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணகியம்மன் காவியப் பாடல்கள்
**செல்வன் தே. லோகவியாசன்**



புஸ்பாஞ்சலி
**தம்பிலுவில். ம.ம.வி.மாணவிகள்.**





கொம்புமுறி நடனம்
மகேசாஞ்சலி நர்த்தனாலயம், திருக்கோவில்.
நெறியாள்கை: **திருமதி.தேவமலர் தங்கமாணிக்கம்.**
(நடன ஆசிரியை. தம்பட்டை. ம.வி.)







நடனம்
**நர்த்தனபவனம் நாட்டியப்பள்ளி மாணவிகள்.**
நெறியாள்கை: நடன ஆசிரியை. **திருமதி. ஷா. பிரபாகரன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நாட்டிய நாடகம், **"வழக்குரைக்கும் கண்ணகி".**

மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரி மாணவிகள்.

(2013 அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் இரண்டாமிடம் பெற்றது)

நெறியாள்கை: நடன ஆசிரியை. **திருமதி. வாசுகி பார்த்தீபன்.**



# சமர்ப்பணம்

கடந்த 2013ம் ஆண்டிற்கான அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவில் தேசிய மட்டத்தில் 2ம் இடத்தினைப்பெற்ற மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரியின் "வழக்குரைக்கும் கண்ணகி" நாட்டிய நாடகத்தை பிரதியாக்கம் செய்து எமக்களித்த 'கதிரவன்' சஞ்சிகை ஆசிரியர் கதிரவன் த. இன்பராசா அவர்களுக்கும், அதனை உருவாக்க உதவி செய்த செங்கதிர் ஆசிரியர் 'செங்கதிரோன்' த. கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் எமது பாடசாலை ரீதியாக நன்றியைத் தெரிவிப்பதோடு அதன் வெளிப்பாடாக 2014ம் ஆண்டு நடைபெற்ற கண்ணகி இலக்கிய விழாவில் எமது நாட்டிய நாடகத்தினை சமர்ப்பணம் செய்ததில் அகமகிழ்கின்றோம்.



பொறுப்பாசிரியர் / நெறியாள்கை :

**திருமதி. வாசுகி பார்த்தீபன்.**





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நாட்டிய நாடகம் - **"வழக்குரைக்கும் கண்ணகி"**








கூத்து. **"விஷ்ணுபுத்திரன் வெடியரசன்"**

- சிவகாமி தமிழ் அருங்கலைக் கூடம்

நெறியாள்கை: **திரு.முருகமூர்த்தி விஜயாலயன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# "கண்ணகி கலை இலக்கிய விழா -2014"

கண்ணகி இலக்கிய விழாவின் கன்னி விழாவான "கண்ணகி இலக்கிய விழா - 2011" இன் தொடக்க விழாவில் 18.06.2011 அன்று பிரகடனப்படுத்தப்பெற்ற கண்ணகி இலக்கிய விழாப் பட்டயத்திற்கு அமைவாக, வருடம் தோறும் எடுக்கப்பட்டு வரும் இவ்விழாவின் இந்த வருட விழாவான நான்காவது "கண்ணகி கலை இலக்கிய விழா - 2014, ஆகஸ்ட் 1,2,3 ஆகிய தினங்களில் அம்பாறை மாவட்டம் தம்பிலுவில், ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலைஅரங்கு மற்றும் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது. இவ் விழாவின் வெற்றிக்குப் பங்களித்த திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவிற்குட் பட்ட விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலுவில், தம்பட்டை மக்களைச் சங்கை செய்யு முகமாக இந் நினைவுச் சின்னம் "கண்ணகி கலை இலக்கியக் கூடல்" இனால், இவ் விழாவின் நிறைவு நாளான 2014 ஆகஸ்ட் 3ம் நாள் அன்று வழங்கப் பெறுகின்றது.


**"கண்ணகி கலை**
**இலக்கியக்கூடல்**
**மட்டக்களப்பு**
03.08.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

**திரு. மா. சதாசிவம்**
(துணைத்தலைவர் - கண்ணகி கலைஇலக்கியக் கூடல்)



சோழ நாட்டில் பிறந்து பாண்டிய நாட்டில் வழக்குரைத்து சேர நாட்டில் தெய்வமான கண்ணகிக்கு ஈழநாட்டில் ஆலயங்கள் அமைத்து வழிபட்டு வருகின்றனர். கிழக்கிலங்கையில் சிலப்பதிகாரத்தினை தழுவிய பல கலை இலக்கியங்களை ஆக்கி கிராமந்தோறும் வழிபட்டும், விழாவெடுத்தும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்கின்றனர். இவ்வாறான கலை இலக்கியங்கள் கிழக்கிலங்கைக்கே உரித்தானவையே ஆகும். இவற்றை சமூகத்திற்கு வெளிக்கொணர்வதும் நிலை நிறுத்துவதுமான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக மட்டக்களப்பு கண்ணகி கலை இலக்கியக்கூடல் முனைகிறது.

சென்ற வருடம் அம்பாரை மாவட்டம் அக்கரைப்பற்று ஆலையடி வேம்பு பிரதேசத்தில் கண்ணகி கலை இலக்கிய விழா நடைபெற்றபோது திருக்கோயில் பிரதேச மக்களால் முன்மொழியப்பட்டதற்கிணங்க இவ்வருடம் (2014) தம்பிலுவிலில் நான்காவது விழா நடைபெறுகிறது. கடந்த மூன்று விழாக்களும் இரண்டு தினங்களாக நடைபெற்ற போதிலும் இம்முறை மூன்று தினங்கள் நடைபெறுவது குறிப்பிடப்பட வேண்டியவையாகும். மங்கிக்கிடந்த கண்ணகி கலை வடிவங்களிலொன்றான கொம்புமுறி விளையாட்டினை நடாத்தி இப்பிரதேச இளந்தலைமுறையினருக்கு வெளிப்படுத்தியிருந்தமை ஒரு சிறப்பம்சமாகும். இதனை நடாத்தி வைத்த பெரியோர்களுக்கு நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

முதலாம் நாள் வெள்ளிக் கிழமை காலை 7.15 மணிக்கு திருக்கோவில் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து விழாக்குழுத்தலைவர் திரு.வ.ஜயந்தன் அவர்களின் தலைமையில் பண்பாட்டுப் பவனி ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது. இந் நிகழ்வு இப்பிரதேச மக்களை விழிப்பூட்டியிருக்கும் என கருதுகிறோம். இப்பவனியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வீதியில் விசேடமாய் ஏற்படுத்தியிருந்த கூலவாணிகன் சாத்தனார் அரங்கில் காலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. காலை அமர்வில் பங்குபற்றிய முதன்மை அதிதிகள், சிறப்பு அதிதிகள், ஒழுங்கமைப்பு செய்தவர்கள், பேராளர்கள் மற்றும் பார்வையாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

இரண்டாம் நாள் காலை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் சேரன் செங்குட்டுவன் சிறப்பரங்கிலும் மாலை கோவலன் அரங்கிலும் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. இந்நிகழ்வில் "மாதர்க்கு அணி" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றிய தமிழருவி சிவகுமாரன் அவர்களுக்கும், மற்றும் இந் நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

மூன்றாம் நாள் இன்று காலை 9.20 மணிக்கு பேராசிரியர் மௌனகுரு அவர்கள் தலைமையில் இளங்கோவடிகள் அரங்கில் "ஆய்வரங்கம்" நடைபெற்றது. இதில் பங்குபற்றிய ஆய்வாளர்கள், மதிப்பீட்டாளர்கள், முதன்மை அதிதிகள், சிறப்பு அதிதிகள் மற்றும் பங்கு கொண்டோர் அனைவருக்கும் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகிறோம். 2014 ஆகஸ்ட் 03 ஆந் திகதி இன்று மாலை மாதவி அரங்கில் கலை நிகழ்வுகள் நடைபெற்று விழா நிறைவடைகிறது. மாலை நிகழ்வில் பங்கு கொண்ட கலைஞர்கள், அதிதிகள், ரசிகர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு தலைமை தாங்கி வழி நடத்திய விழாக்குழு தலைவர் கோட்டக்கல்வி அதிகாரி திரு.வ.ஜயந்தன் அவர்களுக்கும், அவரோடு இணைந்து செயற்பட்ட துறைசார்ந்த உபகுழு உறுப்பினர்களுக்கும், நிகழ்ச்சி ஒழுங்கமைப்புச் செய்த திரு எஸ்.பீ.நாதன் அவர்களுக்கும் வரவேற்று உபசரித்த அம்பாரை மாவட்ட சைவநெறிக்கூடம் - தம்பிலுவில் உறுப்பினர்களுக்கும், நிகழ்ச்சி பிரதான இணைப்பாளர் திரு.கண.இராசரெத்தினம் அவர்களுக்கும், அனுசரணை வழங்கிய தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர், ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயங்களின் பரிபாலன சபையினருக்கும் மற்றும் தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். இவ்விழா சிறப்புற நடைபெறுவதற்கு ஆரம்பம் முதல் இறுதி வரை செயற்பட்ட மட்டக்களப்பு கண்ணகி கலை இலக்கிய கூடல் செயற்பாட்டார்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவிய அனைவருக்கும் நன்றி கூறி விழாவினை நிறைவு செய்வதில் மகிழ்ச்சியடைகிறோம். நன்றி! வணக்கம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணகிகலை இலக்கியவிழா- 2015, வந்தாறுமூலை - விழாக்குழு

**தலைவர்** : திரு. கி. துரைராசசிங்கம்
**துணைத்தலைவர்** : திரு. பொ .சிவகுரு
**செயலாளர்** : திரு. கா. இராமச்சந்திரன்
**துணைச்செயலாளர்** : திருமதி. கிருஸ்ணவேணி நேமிநாதன்
**பொருளாளர்** : திரு. மு. மகேந்திரராஜா
**இணைப்புச் செயலாளர்** : திரு. தா. தங்கவேல்

**செயற் குழு உறுப்பினர்கள்**

திரு. க. யோகராசா
திரு. இ. சீதாராமன்
திரு. வ. கந்தசாமி
திரு. கி. யோகநாதன்
திருமதி மேகலா செல்வராசா
திரு. C. S. வடிவேல்
திரு. கனகசபை செல்வராசா
திரு.கி. நவசிவாயம்
திரு. சிறிகிருஸ்ணா
திரு. கந்தலிங்கம் சத்தியவரதன்
திரு. துரைராசா ஜெயக்குமார்
திரு. வெற்றிவேல் சசிகரன்
திரு. க. துரைராசா
திரு. யோ. முரளிதரன்
திரு. பா. சின்னத்துரை
திரு. பஞ்சலிங்கம் யுதா
திரு. த. சேனாதிராசா
திரு. பே. வரதராஜன்
திரு. K. பத்மயோகன்

**கண்ணகி கலைஇலக்கிய விழா 2015 - உபகுழுக்கள் விபரம்**

**நிதி**

திரு. ந. கோணேசராஜா
திரு. த. இளவரசு
திரு. சோ. கனகரெட்ணம்
திரு. இ. சீதாராமன்
திரு. செ. பத்மநாதன்
திரு. க. விநாயகமூர்த்தி
திரு. சகஸ்ரநாமம்
திரு. தாமோதரம் காத்தமுத்து
திருமதி. கலைவாணி கஜேந்திரன்

**பண்பாட்டுப்பவனி**

திரு.தா. சித்திரவேல்
திரு. க. ரவீந்திரன்
திரு. த. தேவராஜன்
திருமதி . வீ. சிறிதா
திருமதி வசந்தாதேவி உதயகுமார்
திரு. த. சேனாதிராசா
திரு. சிவனடியான்

**அலங்காரம்**

திரு. க. துரைராசா
திரு. தா. வடிவேல்
திரு. சு. வடிவேல்
திரு. S. கார்திக்
திரு. ச. ரகுபரன்

**ஊடகம்**

திரு. திருமால் தயாரூபன்
திரு. லெ. தேவபிரதீபன்
திரு. ந. நித்தியானந்தன்
திரு. செல்வக்குமார்

**கண்காட்சி**

திரு. மயில்வாகனம்
திரு. சு. நிரஞ்சன்
திரு. கு. சண்முகம்
திரு. கி. ஜெயநாதன்
திரு. கி. ரோமபாதன்
செல்வி. சந்திரலேகா

**வரவேற்பு / உபசரணை**

திருமதி. தங்கேஸ்வரி பஞ்சாட்சரம்
திரு. வ. கந்தசாமி
திரு. அருளானந்தம் சந்திரகுமார்
திரு. சிதம்பரப்பிள்ளை சத்தியசீலன்
திருமதி. S. கங்கேஸ்வரி
திரு. க. சத்தியவரதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது கண்ணகி கலை இலக்கிய விழா

திருமா மணிநங்கை வந்தாள்! – எங்கள்
தேசந் தழைத்திட வந்தாள்! வந்தாள்!

# கண்ணகி கலை இலக்கிய விழா-2015



**காலம்**

**13 , 14 ஜூன் 2015**

**இடம்**

விபுலானந்த மண்டபம்.
விஷ்ணு மகா வித்தியாலயம்.
வந்தாறுமூலை.

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்!

**"கண்ணகி கலை இலக்கியக் கூடல்"**
43A, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு
தொலைபேசி எண் : 0771900614, 0777492861,
மின்னஞ்சல் : kannahivizha@gmail.com இணையத்தளம் www.kannahikoodal.com
மற்றும்
"விழாக்குழு" கண்ணகி கலை இலக்கிய விழா – 2015, வந்தாறுமூலை.
தொலைபேசி : 0777238674, 0773444124
மின்னஞ்சல் : ram.batticaloa@gmail.com, ikamo.thanga@gmail.com



# கண்ணகி கலை இலக்கிய விழா 2015



13ஜூன் 2015, சனிக்கிழமை முதலாம் நாள் காலை

## தொடக்கவிழா (காலை 6.30 – பி.ப 1.00)

**பண்பாட்டுப் பவனி. (காலை 06.30 – 08.45)**

பண்பாட்டுப் பவனியின் ஒரு அணி ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு பிள்ளையார் கோவிலிலிருந்து விழாக்குழுத் தலைவர் சட்டத்தரணி கி.துரைராஜசிங்கம் தலைமையிலும், மற்றொரு அணி சித்தாண்டி முருகன் ஆலயத்திலிருந்து விழாக்குழுத் துணைத் தலைவர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு பொ. சிவகுரு தலைமையிலும் ஆரம்பித்து திருமலை வீதி வழியாக வந்து இரு அணிகளும் வந்தாறுமூலை கண்ணகியம்மன் ஆலய முன்றலில் இணைந்து ஒன்றாகி விழா மண்டபத்தை அடையும்.

**பண்பாட்டுப் பவனி இணைப்பாளர்கள் :**

திரு.த.சேனாதிராசா
(ஓய்வு நிலை கிராம அலுவலர்) – ஆறுமுகத்தான் குடியிருப்பு அணி

திரு .இ.சீதாராமன்
(சமாதான நீதவான்) – சித்தாண்டி முருகன் ஆலய அணி

**கள ஆற்றுகை** : (மு.ப 08.45–9.00): வந்தாறுமூலை கண்ணகி அம்மன் வசந்தன் கூத்து
நெறியாள்கை : மட்டு நகர் ராகுல் நாயுடு

**காலை அமர்வு** : (மு.ப 09.00 – பி.ப 01.00)

**அரங்கு** : "கூலவாணிகன் சாத்தனார்" அரங்கு.

**காலம்** : 13.06.2015 சனிக்கிழமை மு.ப. 09.00 – பி.ப 01.00.

**இடம்** : விபுலானந்த மண்டபம், விஷ்ணு மகா வித்தியாலயம், வந்தாறுமூலை.

**தலைமை** : சட்டத்தரணி கி.துரைராஜசிங்கம் (விழாக்குழுத் தலைவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதன்மை அதிதிகள் :**

- **திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ்** (அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்டம்)
- **திரு. டபிள்யு. ஏ.எல்.விக்கிரம ஆராச்சி.** (பணிப்பாளர், கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்.)
- **பேராசிரியர் சி.மௌனகுரு.** (காப்பாளர், கண்ணகி கலை இலக்கியக் கூடல்)

**சிறப்பு அதிதிகள் :**

- **திரு. உ. உதயஸ்ரீதர்** (பிரதேச செயலாளர், ஏறாவூர்பற்று, செங்கலடி)
- **திரு. செ. சிறிகிருஷ்ணராஜா** (வலயக் கல்விப் பணிப்பாளர், கல்குடா)
- **வைத்திய கலாநிதி க. அருள்நிதி**
- **வைத்திய கலாநிதி இ. ஸ்ரீநாத்.** (சுகாதார வைத்திய அதிகாரி, செங்கலடி)
- **கலாபூஷணம் க. கிருஷ்ணபிள்ளை** (கவிஞர் சந்தியூரான்)

**இணைப்பாளர்:** திரு. **தா.தங்கவேல்.** (இணைப்புச் செயலாளர் - கண்ணகி கலை இலக்கிய விழா 2015)

**தொகுப்பாளர்** : திரு.**க. யோகராசா.** (ஆசிரிய ஆலோசகர்)

**நிகழ்வுகள்.**

**09.00 - 09.30** பேராளர் பதிவும், அதிதிகள் வருகையும், வரவேற்பும்.

**09.30 - 09.35** மங்கல விளக்கேற்றல்.

**09.35 - 09.40** இறைவணக்கம்

**09.40 - 09.45** தமிழ் மொழி வாழ்த்து - **திருமதி.மதுமிதா பிரதீபன்** (சங்கீத ஆசிரியை)

**09.45 - 09.50** கண்ணகி இலக்கிய விழாக் கீதம் -

**செல்வி. கௌசல்யா இராமலிங்கம்.** (பி.ஏ. சங்கீதம்)

**09.50 - 09.55** வரவேற்புரை - **திரு பொ.சிவகுரு** (விழாக்குழுத் துணைத்தலைவர்)

**09.55 - 10.00** அரங்க அறிமுகம் - இணைப்பாளர் **திரு தா.தங்கவேல்.**



**10.00 - 10.10** வரவேற்பு நடனம் -

**வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலய மாணவிகள்.**

நெறியாள்கை : **செல்வி. எஸ். சாலினி**

**10.10 - 10.15** கண்ணகி இலக்கிய விழாப்பட்டயம் வாசித்தல் -

**திருமதி.சுந்தரமதி வேதநாயகம்** (கூடல் - துணைச்செயலாளர்)

**10.15 - 10.30** தொடக்கவுரை - செங்கதிரோன் **த.கோபாலகிருஸ்ணன்.**

(கூடல் - தலைவர்)

**10.30 - 10.40** தலைமையுரை

**10.40 - 11.10** சிறப்புரை – "**சிலப்பதிகாரக் காப்பிய நாயகர்களின் சிறப்பு**"

சட்டத்தரணி பாடும்மீன் **சு.ஸ்ரீகந்தராசா** (அவுஸ்திரேலியா)

**11.10 - 11.20** சட்டத்தரணி பாடும்மீன் **சு.ஸ்ரீகந்தராசா** (அவுஸ்திரேலியா) அவர்களின்

"**நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்**" -

சிலப்பதிகார ஒலிச்சித்திரப்பேழை (திருத்திய பதிப்பு) வெளியீடு

வெளியீடு: **திரு. அ. கந்தசாமி**

(கமத்தொழில் பெரும்பாக உத்தியோகத்தர், வந்தாறுமூலை)

முதற்பேழை பெறுனர்: **திரு. பொன். நடராசா**

(தொழிலதிபர், அண்ணா தொழிலகம், இணுவில், யாழ்ப்பாணம்)

**11.20 - 11.30** "**கூடல்**" (பரல் - 4) - விழாமலர் வெளியீடு.

வெளியீடு: **கலாநிதி.அரிமா.அ.செல்வேந்திரன்.**

(கூடல் - செயற்குழு உறுப்பினர்)

முதற்பிரதி பெறுனர்: திரு. **ச. பத்தினிச்சாமி** (ஓய்வுபெற்ற அதிபர்)

வெளியீட்டுரை – கதிரவன் **த. இன்பராசா.** (தொகுப்பாசிரியர்)

**11.30 - 11.55** சிறப்பு அதிதிகள் உரை

**11.55 - 12.25** முதன்மை அதிதிகள் உரை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12.25 - 12.30 நூலங்காடி அறிமுகவுரை - இணைப்பாளர் **திரு. ந. கோணேசராஜா.**

12.30 - 12.35 கண்காட்சி அறிமுகவுரை. - இணைப்பாளர் **திரு.கு.சண்முகம்.**

12.35 - 12.40 நன்றியுரை – **திரு.கா.இராமச்சந்திரன்.** (விழாக்குழுச் செயலாளர்.)

12.40 - 12..50 விவரண ஒளிப்படக்காட்சி – கண்ணகி கலை இலக்கிய விழா 2014.

இணைப்பாளர் : **திரு.ச.மதன்** (கூடல் - ஆவணவாக்கப் பொறுப்பாளர்)

அறிமுகவுரை - **திரு.அ.அன்பழகன் குரூஸ்** (கூடல் - செயலாளர்)

ஆரம்பித்து வைப்பவர் : **திரு.வ.ஜயந்தன்**

(விழாக்குழுத் தலைவர், கண்ணகி கலை இலக்கிய விழா 2014, தம்பிலுவில்)

12.50 - 12.55 நூலங்காடி திறந்துவைப்பு. : **திரு. மு.மகேந்திரராஜா**

(விழாக்குழுப் பொருளாளர்/ தலைவர், ஏறாவூர்பற்று இந்து ஆலய ஒன்றியம்)

இணைப்பாளர் : **திரு. ந.கோணேசராஜா.**

12.55- 01.00 கண்காட்சி திறந்துவைப்பு.

**திரு. சி. சாமித்தம்பி** (கூடல் - துணைத்தலைவர்)

இணைப்பாளர் : **திரு.கு.சண்முகம்.**

01.00 தொடக்கவிழா நிறைவு.





# கண்ணகி கலை இலக்கிய விழா 2015



**13ஜூன் 2015, சனிக்கிழமை முதலாம் நாள் மாலை**

## இயல் அரங்கு (பி.ப 03.00 - மாலை 08.00)

**முதன்மை அதிதிகள் :**

- **திரு.ந. பத்மநாதன்.** (தலைவர், புனர்வாழ்வு அதிகாரசபை)
- **எந்திரி சீ.மோகனராஜ்** (நீர்ப்பாசனப் பணிப்பாளர், மட்டக்களப்பு பிராந்தியம்)
- **திரு. கா.சித்திரவேல்.**
  (பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மட்டக்களப்பு.)

**சிறப்பு அதிதிகள் :** **திரு.கோ.தனபாலசுந்தரம்**

(பிரதேச செயலாளர். கோறளைப்பற்று தெற்கு, கிரான்)

- **திரு.தி.ரவி** (பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
- **திரு.த.அனந்தரூபன்** (பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
- **கவிஞர். கலாபூஷணம் பொன். தவநாயகம்**
- **திரு. த.சுத்தானந்தம்** (ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி)

**இணைப்பாளர்** : **திரு. பா.சின்னத்துரை**

**தொகுப்பாளர்** : **திரு.யோ.முரளீதரன்** (செயலாளர், கண்ணன் பஜனைக்குழு, வந்தாறுமூலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை அமர்வு - I ( பி.ப 03.00 - 05.30 )

**அரங்கு** : **"சேரன் செங்குட்டுவன்" அரங்கு.**

**இடம்** : **விபுலானந்த மண்டபம், விஷ்னு மகா வித்தியாலயம், வந்தாறுமூலை.**

**தலைமை** : **செல்வி க. தங்கேஸ்வரி** பி.ஏ. தொல்லியல் சிறப்பு. (கூடல் - துணைத்தலைவர்)

**நிகழ்வுகள்.**

**03.00 - 03.05** மங்கல விளக்கேற்றல்.

**03.05 - 03.10** வரவேற்புரை - **திரு. சோ.கனகரெட்ணம்** (கிராம அலுவலர்)

**03.10 - 03.15** அரங்க அறிமுகம் - இணைப்பாளர் **திரு. பா. சின்னத்துரை**

**03.15 - 03.25** தலைமையுரை

**03.25 - 04.00** கல்குடா கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பெற்ற பேச்சு, கவிதை போட்டிகளில் 1ம் பரிசுபெற்ற மாணவர்களின் ஆற்றுகை.

**04.00 - 05.15** வழக்காடு மன்றம் : **"கோவலன் கொலைக்கு யார் காரணம்?"**
நடுவர்: சட்டத்தரணி பாடும்மீன் **சு.ஸ்ரீகந்தராசா** (அவுஸ்திரேலியா)

| | | |
|---|---|---|
| வாதிடுவோர் : | பாண்டியனே காரணம்! | - **திரு. வெ.சசிகரன்** |
| | பொற்கொல்லனே காரணம்! | - **செல்வி. நிலோஜினி சதாசிவம்** |
| | மாதவியே காரணம் ! | - **திரு. அ. அன்பழகன் குரூஸ்** |
| | கண்ணகியே காரணம்! | - **திரு. ஜீ.எழில்வண்ணன்** |
| | கோவலனே காரணம்! | - **திரு. செ. துஜியந்தன்** |

**05.15 - 05.30** கதாநிகழ்வு : **'சிலம்பின் சிந்தனை'**
– **சிவயோகச்செல்வன் த.சாம்பசிவம்**
(காயத்ரி பீடம், மட்டக்களப்பு)

**மாலை 05.30 - 06.00 தேநீர் இடைவேளை**



## மாலை அமர்வு - II ( பி.ப 06.00 - 08.00 )

**அரங்கு** : **"சிலம்புச் செல்வர் மா.பொ.சி" அரங்கு.**

**இடம்** : **விபுலானந்த மண்டபம், விஷ்னு மகாவித்தியாலயம், வந்தாறுமூலை.**

**தலைமை** : **திருமதி. சறோஜினி மகேஸ்வரநாதன்** (சிரேஸ்ட விரிவுரையாளர், பொருளியல் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)

**நிகழ்வுகள்.**

**06.00 - 06.05** அரங்க அறிமுகமும், தலைமையுரையும்.

**06.05 - 06.15** கல்குடா கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பெற்ற கட்டுரை, பேச்சு, கவிதை, பாடல் போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கல்.

**06.15 - 07.15** சிறப்புச் சொற்பொழிவு –
**'சிலப்பதிகாரம் கூறும் அற வாழ்வு'**
–செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகன்**
(தலைவர், தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம் / தலைவர், சிவபூமி அறக்கட்டளை)

**07.15 - 07.45** கல்குடா கல்வி வலயப் பாடசாலைகளிடையே நடாத்தப்பெற்ற விவாதப் போட்டியின் இறுதிக்கட்ட அணிகளின் ஆற்றுகை.

**07.45 - 07.55** விவாதப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு.

**07.55 - 08.00** நன்றியுரை – **திருமதி. கிருஷ்ணவேணி நேமிநாதன்**
(விழாக்குழுத் துணைச் செயலாளர்.)

**08.00 -** இயல் அரங்கு நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி கலை இலக்கிய விழா 2015



14ஜூன் 2015 ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் நாள் காலை

## ஆய்வரங்கு (மு.ப 09.30 - பி.ப. 01.45)

### கிழக்கிலங்கைக் கண்ணகி இலக்கியங்கள்

**அரங்கு** : "இளங்கோவடிகள்" அரங்கு.

**இடம்** : விபுலானந்த மண்டபம், விஷ்ணு மகா வித்தியாலயம், வந்தாறுமூலை.

**தலைமை** : பேராசிரியர் சி. மௌனகுரு

**முதன்மை அதிதிகள் :**

- **பேராசிரியர் அ. சண்முகதாஸ்.**
  (தகைசார் வாழ்நாள் பேராசிரியர், யாழ்பல்கலைக்கழகம்)
- **பேராசிரியர். மா. செல்வராஜா**
  (முன்னாள் பீடாதிபதி, கலைகலாசார பீடம், கிழக்குப்பல்கலைக்கழகம்.)
- **பேராசிரியர் செ.யோகராசா**
  (முதுநிலை விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்.)

**சிறப்பு அதிதிகள் :**

- **கலாநிதி ப.இளங்கோ**
  (சிரேஸ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப்பல்கலைக்கழகம்)
- **திருமதி.ந.சத்தியானந்தி**
  (பிரதேச செயலாளர், மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை)
- **செல்வி. இராசநாயகம் இராகுலநாயகி**
  (பிரதேச செயலாளர், கோறளைப்பற்று வடக்கு, வாகரை
- **திரு.அ.சுகுமாரன்** (கோட்டக்கல்விப் பணிப்பாளர், மட்டக்களப்பு.)
- **திரு.த.கந்தவேல்** (ஓய்வுபெற்ற அதிபர்)
- **திரு.எஸ்.மோகன்** (அதிபர், விஷ்ணு மகாவித்தியாலயம், வந்தாறுமூலை)



**ஆய்வு மதிப்பீட்டாளர்கள் :**

- **பேராசிரியர்.** திருமதி **மனோன்மணி சண்முகதாஸ்.**
  (ஆய்வுப்பேராசிரியர், கக்குசுஜின் பல்கலைக்கழகம், டோக்கியோ)
- **பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா**
  (ஓய்வுநிலைப்பேராசிரியர், தமிழ்த்துறை, யாழ்பல்கலைக்கழகம்)

**ஆய்வரங்க இணைப்பாளர் :**

**திரு.செ. பத்மநாதன்.** (ஆசிரியர், கரடியனாறு மகா வித்தியாலயம்.)

**நிகழ்வுகள்.**

| | |
|---|---|
| **09.30 - 09.35** | மங்கல விளக்கேற்றல். |
| **09.35 - 09.40** | வரவேற்புரை - **திரு. க.துரைராசா**<br>(உபதலைவர், கண்ணன் பஜனைக் குழு, வந்தாறுமூலை) |
| **09.40 - 09.45** | அரங்க அறிமுகம். - இணைப்பாளர். **திரு. செ.பத்மநாதன்** |
| **09.45 - 10.00** | தலைமையுரை. |
| **10.00 - 10.10** | வந்தாறுமூலை கண்ணகி அம்மன் ஆலயம் பற்றிய அனுபவப்பகிர்வு - பிரதம பூசகர் **திரு. வே.சதாசிவம் மற்றும் திரு. தா.யோகேந்திரன்** |
| **10.10 - 10.35** | ஆய்வுரை I<br>**"கிழக்கிலங்கைக் கண்ணகி வழக்குரைகாதை கோயில்களில் பாடப்படும் முறைமை"**<br>(தேர்ந்தெடுத்த நான்கு கோயில்களைப்பற்றிய ஆய்வு)<br>ஆய்வாளர் - **செல்வி.கதிர்காமப்போடி ஜீவரதி**<br>(தற்காலிக விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்) |
| **10.35 - 11.00** | ஆய்வுரை II<br>**"கிழக்கிலங்கைக் கண்ணகியம்மன் குளுத்திப் பாடல்கள்"**<br>ஆய்வாளர் - **திருமதி. பிரியதர்சினி ஜதீஸ்வரன்** (விரிவுரையாளர், சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், மட்டக்களப்பு) |





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 11.00 - 11.25 | ஆய்வுரை III |
| | **"கிழக்கிலங்கைக் கண்ணகியம்மன் காவியப் பாடல்கள்"** |
| | ஆய்வாளர் - **செல்வி. க. தங்கேஸ்வரி** பி.ஏ (தொல்லியல் சிறப்பு) |
| 11.25 - 11.50 | ஆய்வுரை IV |
| | **"கிழக்கிலங்கைக் கண்ணகியம்மன் பத்ததிகள் (பத்தாசிகள்)"** |
| | ஆய்வாளர் - **திரு. வ.குணபாலசிங்கம்** |
| | (ஆசிரியர், காரடியனாறு மகாவித்தியாலயம்.) |
| 11.50 - 12.00 | ஆய்வு மதிப்பீட்டுக் குறிப்பு I - |
| | **பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்** |
| 12.00 - 12.10 | ஆய்வு மதிப்பீட்டுக் குறிப்பு II - |
| | **பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா** |
| 12.10 - 12.20 | தொகுப்பு - ஆய்வரங்கத் தலைவர். |
| 12.20 - 12.40 | ஐயந்தெளிதல் |
| 12.40 - 01.05 | சிறப்பு அதிதிகள் உரை |
| 01.05 - 01.10 | இளம் ஆய்வாளர்களுக்கான ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகள் வழங்கல். |
| 01.10 - 01.40 | முதன்மை அதிதிகள் உரை. |
| 01.40 - 01.45 | நன்றியுரை. **திரு.ச.ஜெயராஜா.** (கூடல் - பொருளாளர்) |
| 01.45 | ஆய்வரங்க நிறைவு. |



# கூடல் கலை இலக்கிய விழா 2015



**14ஜூன் 2015, ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் நாள் மாலை**

**"கலையரங்கும் நிறைவு விழாவும்" (பி.ப 03.30 - மாலை 08.00)**

**அரங்கு** : "மாதவி" அரங்கு.

**காலம்** : 14.06.2013 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 - 8.00

**இடம்** : விபுலானந்த மண்டபம், விஷ்ணு மகாவித்தியாலயம், வந்தாறுமூலை.

**தலைமை** : **திரு. செ.எதிர்மன்னசிங்கம்.** (கூடல் - துணைக் காப்பாளர்)
(ஓய்வு நிலைப்பணிப்பாளர், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களம்.)

**முதன்மை அதிதிகள் :**

- **திரு. இரா. ஹரிஹரன்**
  (பிரதி மாகாணப்பணிப்பாளர், விவசாயத்திணைக்களம், கிழக்கு மாகாணம்.)
- **திரு. வ. கிரிதரன்.** (மேலதிக அரசாங்க அதிபர், மட்டக்களப்பு)
- **கலாநிதி க. இராஜேந்திரா**
  (பீடாதிபதி, கலைகலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்)

**சிறப்பு அதிதிகள் :**

- **கலாநிதி சி.ஜெயசங்கர்**
  (முதுநிலை விரிவுரையாளர், நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம்)
- **வைத்திய கலாநிதி ந.தனஞ்செயன்**
- **திரு.க.பாஸ்கரன்** (வலயக்கல்விப்பணிப்பாளர், மட்டக்களப்பு.)
- **திரு. க.சத்தியநாதன்** (வலயக்கல்விப்பணிப்பாளர், மட்டக்களப்பு மேற்கு)
- **திரு. உ.மயூரன்** (பொறியியலாளர், இலங்கை மின்சார சபை.)
- **திரு. க.இளையதம்பி** (தலைவர், கல்வி அபிவிருத்தி மன்றம், வந்தாறுமூலை.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைப்பாளர் :**

- **திரு. பே.வரதராஜன்** (செயலாளர், கிராம அபிவிருத்திச்சங்கம், வந்தாறுமூலை)

**தொகுப்பாளர் :**

- **திரு.இ.ரமேஸ்குமார்** (சித்த ஆயுர்வேத வைத்தியர்)

**நிகழ்வுகள்**

| | |
|---|---|
| **03.30 - 03.45** | மங்கல விளக்கேற்றல். |
| **03.35 - 03.40** | அரங்க அறிமுகம் - இணைப்பாளர் **திரு. பே.வரதராஜன்** |
| **03.40 - 03.50** | புஸ்பாஞ்சலி - **செங்கலடி மத்தியமகாவித்தியாலய மாணவிகள்**<br>நெறியாள்கை: நடன ஆசிரியை **திருமதி. ஷா. பிரபாகரன்** |
| **03.50 - 03.55** | கூத்துக் கலைஞர் அமரர் செல்லையா அண்ணாவியார் நினைவுப் பரவல்.<br>நினைவுரை: **திருமதி. கலைவாணி கஜேந்திரன்** (சமுர்த்தி முகாமையாளர்) |
| **03.55 - 04.05** | தலைமையுரை. |
| **04.05 - 04.25** | மண்ணின் பாடல்கள்.<br>**திரு. செ. ஞானப்பிரகாசம்** மற்றும் **திரு. எமில் பிரியானந்** |
| **04.25 - 04.30** | சிறப்பு அதிதி உரை I. |
| **04.30 - 04.35** | சிறப்பு அதிதி உரை II. |
| **04.35 - 04.50** | நாட்டிய நாடகம் - நர்த்தன பவனம் நாட்டிய பள்ளி மாணவிகள்<br>நெறியாள்கை : நடன ஆசிரியை **திருமதி. ஷா. பிரபாகரன்** |
| **04.50 - 04.55** | சிறப்பு அதிதி உரை III. |
| **04.55 - 05.00** | சிறப்பு அதிதி உரை IV. |
| **05.00 - 05.05** | பாடல் போட்டியில் பரிசு பெற்ற பாடலின் ஆற்றுகை |
| **05.05 - 05.20** | பரதம் போட்டியில் பரிசுபெற்ற நடனத்தின் ஆற்றுகை |
| **05.20 - 05.25** | சிறப்பு அதிதி உரை V. |
| **05.25 - 05.30** | சிறப்பு அதிதி உரை VI. |
| **05.30 - 06.00** | மட்டக்களப்பு அரங்க ஆய்வுகூடம் அளிக்கும்<br>**"காண்டவ தகனம்"** (கூத்து, பரதம் தழுவிய நிருத்திய நாடகம்)<br>நெறியாள்கை : **பேராசிரியர். சி. மௌனகுரு** |



| | |
|---|---|
| **06.00 - 06.10** | முதன்மை அதிதி உரை I |
| **06.10 - 06.20** | மழைக்காவியப் பாடல் - **திரு. சு.தங்கவடிவேல்** |
| **06.20 - 06.50** | வில்லிசை : **"பத்தினித்தாயின் சாபம்"**<br>- கண்ணன் பஜனைக் குழு, வந்தாறுமூலை |
| **06.50 - 07.00** | முதன்மை அதிதி உரை II |
| **07.00 - 07.15** | கோலாட்டம் - **மட்/கதிரவெளி விக்கினேஸ்வர வித்தியாலய மாணவர்கள்**<br>நெறியாள்கை : **திரு. நா. சந்திரலிங்கம்** (அதிபர்) |
| **07.15 - 07.25** | முதன்மை அதிதி உரை III |
| **07.00 - 07.15** | கவிதா நிகழ்வு : **'வந்தாறு பதியினிலே வந்தமர்ந்த கண்ணகியே!'**<br>**-தேவகலா** , வந்தாறுமூலை |
| **07.15 - 07.25** | **கூடலின் 2015/2016 தீர்மானங்கள்.** ( கூடல் - செயலாளர் ) |
| **07.25 - 07.35** | விழாக்குழுவுக்கான நினைவுச் சின்னம் வழங்கல். |
| **07.50 - 08.00** | நிறைவுரை. **திரு. மா.சதாசிவம்.** ( கூடல் - துணைத் தலைவர்) |
| **08.00 -** | **கண்ணகி கலை இலக்கிய விழா - 2015 நிறைவு.** |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியோடு

- கடந்த வருடம் (2014) நான்காவது கண்ணகிகலை இலக்கிய விழாவினைச் சிறப்பாக நடாத்திய அம்மாறை மாவட்டம், திருக்கோவில் பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட விநாயகபுரம், திருக்கோவில், தம்பிலுவில், தம்பட்டைக் கிராமங்களின் அன்புநெஞ்சங்கள் அத்தனை பேருக்கும்...

- இவ்வருட (2015) கண்ணகிகலை இலக்கியவிழாவை முனைப்புடன் முன்னெடுக்கும் மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலையை மையப்படுத்திய சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை, சந்திவெளி, கிரான், வாழைச்சேனை, கொம்மாதுறை, செங்கலடி, ஏறாவூர், ஆறுமுகத்தான்குடியிருப்பு, மைலம்பாவெளி, களுவன்கேணி அகிய கிராம மக்களுக்கும் மற்றும் ஏறாவூர்பற்று, கோறளைப்பற்று தெற்கு, கோறளைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு பிரதேசசெயலகப் பிரிவுப் பெருந்தகைகள் அனைவருக்கும்...

- ஆண்டுதோறும் நடைபெறும் கண்ணகிகலை இலக்கியவிழாவுக்கு பொற்குவைதந்து பங்களிக்கும் பேராளர் பெருமக்கள் அனைவருக்கும்…

- 2014ம் ஆண்டின் நான்காவது கண்ணகிகலை இலக்கியவிழாவின் **"கூடல்"**பரல்-3 விழாமலரின் இணை அனுசரணை தந்த வைத்திய கலாநிதி க. முருகானந்தன் அவர்கட்கும்….

- 2015ம் ஆண்டின் ஐந்தாவது கண்ணகிகலை இலக்கியவிழாவின் "கூடல்" பரல்-4 விழா மலருக்கு அனுசரணை அளித்தபெருந்தகைகள் வைத்திய கலாநிதி இ. ஸ்ரீநாத், திருமதி. தர்சினி சுந்தரேசன், திரு. இ. உமாசுதன் ஆகியோருக்கும்..

- கண்ணகிகலை இலக்கியவிழாவுக்கு அதிதிகளாய்ச் சமூகந்தந்து சிறப்பித்த பெருந்தகைகள் அனைவருக்கும்….

- கலைநிகழ்வுகளையும், இலக்கிய ஆக்கங்களையும், இயற்றமிழ் உரைகளையும் தந்த நற்றமிழ் நெஞ்சங்களுக்கும்….

- கண்ணகிகலை இலக்கியங்களை ஆய்வுசெய்த ஆய்வரங்கச் சான்றோர்களுக்கும்…

- தலைமை தாங்கியும், இணைப்பாளர்களாய்ச் செயற்பட்டும், தொகுப்பாளர்களாய்ச் செயற்பட்டும் விழாவைச் செவ்வனே செய்துமுடித்த அத்தனை பேருக்கும்……

- கண்ணகிகலை இலக்கியவிழாக்களின் வெற்றிப் பாதையை உலகறியச் செய்யும் ஊடகவியலாளர்களுக்கும்...

- கண்ணகிகலை இலக்கியவிழாக்களின் உந்துதலாய் உழைக்கும் கூடலின் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும்……

- இதுவரை நடைபெற்ற அத்தனை கண்ணகிகலை இலக்கிய விழாக்களின் தடங்களையும், நிகழ்வுகளையும் ஆவணங்களாய் மாற்றவும், தொடர்ந்து நான்காவது தடவையாக அழைப்பிதழும் அன்பளிப்புச் செய்தும் திரைமறைவில் ஒத்துழைக்கும் மட்டக்களப்பு வணசிங்கா அச்சகத்தாருக்கும்…..

- எல்லாவற்றுக்கும் உடன்பாட்டுடன் உழைத்துக் கொண்டிருக்கும் வந்தாறுமூலையின் ஐந்தாவது கண்ணகிகலை இலக்கியவிழாவின் விழாக்குழு மற்றும் உபகுழுச்செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும்….

**என்றும் மறவாத நன்றியோடு வாழ்த்துகின்றோம்.**

**எங்கள் கண்ணகிகலை இலக்கியவிழாவும், கூடலும் என்றும் தொடரும்!**

**அன்பழகன் குரூஸ்.**

செயலாளர்.

கண்ணகிகலை இலக்கியக் கூடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From :*

# NPH
## NEW PIONEER HOSPITAL

*Your Care is in our mind....*










## Our Services

- 24 Hours OPD Services
- Emergency Unit
- Channeling Consultation
- Mobile Medical Treatment (Home Visit)
- Inward Service
- Ultra Sound Scan, ECHO, CTG
- Operating Theater Facilities
- Maternity Unit
- Dental Clinic
- Pharmacy
- Laboratory Service
- X-Ray Service
- ECG Service
- Physiotherapy
- Family Planning Services
- Vaccination Clinic
- Full Medical Checkup
- Medical Examination Report
- Nutrition Clinic
- Endoscopy, Colonoscopy
- Diabetic Clinic
- Ambulance Service



**91, Pioneer Road,**
**Batticaloa, Sri Lanka.**
**Tel. : 065 222 6068,**
**065 222 3642, 065 4911168**
**E-mail : nphbatti@gmail.com**

**No. 202 A, Main Road,**
**Kalmunai, Sri Lanka.**
**Tel. : 067 222 6672,**
**067 222 6673**
**E-mail : nphkalmunai@gmail.com**

Wanasinghe Printers, 126/1, Trinco Road, Batticaloa. T.P. 065 222 7170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org